விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 19 சனிக்கிழமை (03.01.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 015

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# தெரியாத தேவதையை விட தெரிந்த பிசாசை ஆதரியுங்கள்

## ஜனாதிபதி அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்கள் தெரியாத தேவதையை விட நன்கு தெரிந்த பிசாசை இந்தத் தேர்த லில் ஆதரிக்க வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டார்.**

**துரையப்பா விளையாட்டரங்கில் பெருந் திரளான மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.**

பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசே னவை தேவதை என்றும் தன்னைப் பிசாசு என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

யாழ்.துரையப்பா விளையாட்டர ங்கில் நேற்று மதியம் சிறிலங்கா சுத ந்திரக் கட்சியின் ஜனாதிபதித் தேர் தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உரையாற்றும்

23 ஆம் பக்கம் பார்க்க....

## மடு சென்றார் மகிந்த

(கொழும்பு)

தேர்தல் பிரசாரத்துக்காக மன் னார் மாவட்டத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மடுதேவாலயத்துக்குச் சென்று வழி பாடுகளில் ஈடுபட்டார்.

மன்னார ஆயர் ராயப்பு ஜோசப், ஜனாதிபதியை வரவேற்றார். அங்கு இடம்பெற்ற பிரார்த்தனையில் கலந்துகொண்டு ஜனாதிபதி மடு அன்னையை வழிபட்டார். (எ-11)


## நாடாளுமன்றம் கலைக்கப்படும்?

(கொழும்பு)

ஜனவரி 8ஆம் திகதி நள்ளிர வில் நாடாளுமன்றத்தைக் கலை த்து விடுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணி முடிவுசெய்துள்ளது என்று தெரியவருகிறது. நடைபெற வுள்ள தேர்தலில் தமக்கு தோல்வி ஏற்பட்டால் சுதந்திரக் கட்சியை சந் திரிகா கைப்பற்றிவிடுவார் என்று கட்சி வட்டாரங்களுக்குள் எழுந்த சந் தேகத்தை அடுத்து தேர்தல் முடிவு கள் வெளியாவதற்கு முன்னர்

23 ஆம் பக்கம் பார்க்க....

## காங்கேசன்துறைக்கு சென்றது யாழ்தேவி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து காங்கே சன்துறை வரையிலான யாழ்தேவி புகையிரத சேவை நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக ஆரம்

23 ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டம் மீது கல்வீச்சு

(கொழும்பு)

பொது வேட்பாளர் மைத்திரி பால சிறிசேனவின் பிரசாரக் கூட் டம் மீது நடத்தப்பட்ட கல்லெறித் தாக் குதலில் பலர் காயமடைந்துள்ளனர்

இரத்தினபுரி, பெல்மதுல்ல என்ற இடத்திலேயே இந்த தாக்குதல் சம் பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

பொதுவேட்பாளர் கூட்டத்தில் பங்கேற்கும் முன்னர் கூட்டத்தின்

23 ஆம் பக்கம் பார்க்க....

## இரணைமடு தண்ணீரை கொண்டு வருவேன்!

### ஜனாதிபதி யாழில் உறுதி

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பனை பேச்சுவார்த்தைக்கு அழைத தும் வராவிட்டால் எவ்வாறு பிரச்சி னையை தீர்ப்பது என தெரிவித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, யார் எதிர்த்தாலும் இரணைமடுத் தண் ணீரை இங்கு கொண்டு வருவேன் எனவும் தெரிவித்தார்.

யாழ்.துரையப்பா விளையாட் டரங்கில் நேற்று மதியம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரை யாற்றிய அவர் மேலும் தெரிவிக்கை

23 ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டமைப்பினரின் பாதுகாப்பு நீக்கம்

(கொழும்பு)

தமது கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் இருவரின் பொலிஸ் பாதுகாப்பு நேற்று மாலை யுடன் நீக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுகின்றது.

அம்பாறை மாவட்ட உறுப்பின ர்களான முருகேசு இராஜேஸ்வ ரன், தவராசா கலையரசன் ஆகிய இருவரின் பொலிஸ் பாதுகாப்பே எவ்வித முன்னறிவிப்பும் இன்றி

23 ஆம் பக்கம் பார்க்க....

## தீவிர பிரசாரங்களில் முஸ்லிம் காங்கிரஸ்

### மைத்திரியை ஆதரித்து

(மட்டக்களப்பு)

ஜனாதிபதித்தேர்தலில் பொது வேட பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸின் தீவிர பிரசார நடவடிக்கை கள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் முஸ் லிம் பிரதேசங்கள் எங்கும் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளதுடன் முக்கிய ஒன்பது முஸ்லிம் பிரதேசங்களில் பிரசாரப் பொதுக் கூட்டங்களை நடத்தவும் ஒழுங்கு கள் செய்யப்பட்டுள்ளன.

முஸ்லிம் காங்கிரஸின் செயலா ளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப

23 ஆம் பக்கம் பார்க்க....

## பௌத்தர்களின் உன்னத குணத்தை வெளிப்படுத்தினார் சந்திரிகா

### மங்கள சமரவீர பாராட்டு



(கொழும்பு)

தனது ஒரு கண்ணை மாத்திர மல்ல உயிரையும் பறிக்க தருணம் பார்த்திருந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனை கூட கௌரவப்படுத்தி பெயர் குறிப் பிட்டதன் மூலம் முன்னாள் ஜனா திபதி சந்திரிகா பண்டாரநாயக்க

23 ஆம் பக்கம் பார்க்க....

## கடமையை செய்ய முனையும் தமிழரை கொச்சைப்படுத்தும் அரசு

### மனோ கணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்க ளித்து நமது தேசிய கடமையை நாம் செய்வோம் என வடக்கு கிழக் கில் வாழும் தமிழ் மக்கள் முன் வந் தால் அதை இந்த மகிந்த அரசு கொச்சைப்படுத்துகிறது. அதாவது, நாம் இந்நாட்டவர், இது ஒரே நாடு என்று தமிழர் சொன்னால், இல்லை நீங்கள் வேறு நாட்டவர் என்று மகி ந்த அரசு சொல்கிறது என ஜனநா யக மக்கள் முன்னணியின் தலை வர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு, வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் ஆணையை பெற்ற ஒரு கட்சி. நடை பெறவுள்ள தேர்தல் தொடர்பில் அந்த கட்சி தனது நிலைப்பாட்டை இரண்டு தினங்களுக்கு முன் அறி வித்துள்ளது. அந்த அறிவிப்பு, ஆளும் அரசுக்கு எதிரான, பொது எதிரணி

23 ஆம் பக்கம் பார்க்க....

## விமல் கட்சியின் எம்.பி மைத்திரியுடன் இணைவு

(கொழும்பு)

விமல் வீரவன்ச கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர் அச்சல சுர ங்க ஜாகொட எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபாலவுக்கு ஆத ரவு தெரிவித்துள்ளார்.


ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங் கம் வகித்து வரும் அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளு மன்ற உறுப்பினர் அச்சல சுரங்க ஜாகொட எதிரணியின் பொதுவேட் பாளர் மைத்திரிபால சிறிசேனவு க்கு தனது ஆதரவை வழங்குவ

23 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## கிருஸ்ணபிள்ளை தெய்வேந்திரகுமார்

மட்டக்களப்பு ஆரையம்பதியைப் பிறப்பிடமாகவும், இல.37, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை தெய்வேந்திரகுமார் 01.01.2015 வியாழக்கிழமை அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை மற்றும் சிவமதி தம்பதியரின் அன்பு மகனும், பி.ஜே. அன்ரனி (ஓய்வுபெற்ற அதிபர், பதில் நீதவான் - மல்லாகம்), பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற உப அதிபர் - யா/ஆனைப்பந்தி அ.மி.த.க.பா) தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தியின் (ஆசிரியர் - தி/கலைமகள் வித்தியாலயம், தி/கந்தளாய் பரமேஸ்வரி வித்தியாலயம் என்பனவற்றின் முன்னாள் ஆசிரியை, யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் தற்போதைய ஆசிரியை) அன்புக் கணவரும், தமேந்திரகுமார் (அதிபர் - மட்டு/ஆரையம்பதி ம.வித்.), தெய்வேந்திரகுமாரி (மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவயோககௌரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் -பிரதேசசபை, ஆரையம்பதி), புஸ்பாகரன் (சிரேஷ்ட விரிவுரையாளர் - கிழக்கு பல்கலைக்கழகம்), வரதராஜன் (ஜேர்மனி), வாசுகி (ஆசிரியர் - யா/மருதங்கேணி இ.த.க.வித்.), வசந்தகுமாரி (முன்னாள் பிறப்பு-இறப்பு பதிவாளர், கரவெட்டி, தற்போது நல்லூர் பிரதேச செயலகம்), மஞ்சுளா (ஆசிரியர் - யா/திருக்குடும்ப கன்னியர்மடம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வாணி (ஜேர்மனி), அன்ரன் ராஜசேகரன், அருளேந்திரன் (அமெரிக்கா), நித்தியலிங்கம் (ஆசிரியர் - யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகலனும், கேஷிகன், லஷ்வினி ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.00 மணிக்கு கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.37, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.** (9036)

**தகவல் : ரி.வசந்தி (மனைவி)**

# பிரபாகரனை கிண்டலடித்தே சந்திரிகா உரையாற்றினார்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை கிண்டலடிப்பதற்காகவே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, பிரபாகரனின் பெயரினை யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தியுள்ளார்.

அதனை மக்கள் தவறாக புரிந்து கொண்டு கைதட்டியுள்ளனர் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று மதியம் நடைபெற்றது.

இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமாதான தேசத்தின் தந்தையினை உங்களிடம்அழைத்து வந்துள்ளேன். தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக எதிரணியும் ஆதரவாளர்களும் தேர்தலில் களமிறங்கியுள்ளனர்.

மைத்திரிபால தான் ஒன்றும் வெளியே கதைப்பதில்லை என கூறுகின்றார். ஆனால் இதே கட்சியில் இருக்கும் போது என்னை புகழ்ந்து பேசியுள்ளார் என்றார்.

இதேவேளை அண்மையில் பொது எதிரணியினரின் தேர்தல் பிரசாரத்திற்காக யாழ் வந்திருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை மிஸ்டர் பிரபாகரன் எனக்கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4)



## கட்டிங் பேப்பர் விற்பனைக்கு

**மாணவர்கள் பயிற்சிகள் செய்யக்கூடிய தான கட்டிங்பேப்பர் விற்பனைக்கு உண்டு. வலம்புரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை.**
**வட்டாரம்:15**
**ஆதன இலக்கம்:28/25**
**யாழ்.காரைநகர் வீதி**

வட்டாரம் 15 யாழ்.காரைநகர் வீதி, ஆதன இலக்கம் 28/25 இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று சண்டிலிப்பாய் இறை 'உவாநந்த வளவு' என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 03 குளி 09 கொண்ட இவ்வாதனமானது உரும்பிராயைச் சேர்ந்த கந்தசாமி தர்மகுலசிங்கம், கந்தசாமி ஜெயவீரசிங்கம், கந்தசாமி குணரட்ணசிங்கம், கந்தசாமி நவரட்ணசிங்கம் ஆகிய இவர்களால் நிபந்தனையுடனான நன்கொடை உறுதிமூலம் சண்டிலிப்பாயிலுள்ள மணிமேகன் முன்பள்ளிக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் செல்வி ஞானலோஜினி சிவஞானம் முகதாவில் நிறைவேறிய 5348ஆம் இலக்க 12.03.2011ஆம் திகதிய நன்கொடை உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். 'உவாநந்த வளவு' நிலப்பரப்பு 03 குளி 09 கொண்ட இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் மணிமேகன் முன்பள்ளி என்ற பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.** **தவிசாளர்**

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

வலிகாமம் தெற்கு பிரதேச சபா (Sinhala)

VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA CHUNNAKAM

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### 2015-ம் ஆண்டுக்கான பகிரங்க கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடை என்பவற்றை 01.01.2015 தொடக்கம் 31.12.2015 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்காக பகிரங்க ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப் பணத்தினை செலுத்திய பற்றுச்சீட்டை 03.01.2015 தொடக்கம் 06.01.2015 காலை 9.30 மணிவரை பெற்றுக்கொள்ளவும்.

| தொ. இல | விபரம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | |
| 01 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 7500.00 | 150000.00 | 250.00 |
| 02 | கருவாட்டுக் கடை இல. 03 | 7500.00 | 36000.00 | 250.00 |
| 03 | கோழிக்கடை இல. 06 | 7500.00 | 144000.00 | 250.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | |
| 01 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை (கொத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 5000.00 | 50,000.00 | 250.00 |

**01. காலம் : 06.01.2015 காலை 10.00 மணி**
**02. இடம் : சுன்னாகம் உப அலுவலகம்.**

ஏலம் சம்பந்தமான மேலதிக விபரங்களை 2014.10.28 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல், உதயன் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

**தி.பிரகாஷ், தவிசாளர்.** (சி-9712)

**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

## 60வது அகவை மணிவிழா வாழ்த்து




திருமதி **விஜயகுலராணி பரமேஸ்வரன்** (ராணி ரீச்சர்)

யா/மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம்

"பிரதீபா பிரபா" விருது பெற்ற சமூகவிஞ்ஞான (ஆலோசக). ஆசிரியை, சிவசந்திர மௌலீசப் பெருமான் திருவருளால் நலம் பெற்று இனிது நீடு வாழி)

நம்நாட்டுக் கல்விக் கூடங்களுக்கு இடர்கள் மலிந்த வேளையிலும்
மலைபோல அசையாத திடமான உறுதிபெற்று
மாணவச்செல்வங்களை சேய் போன்று கருதி
இங்கிதமாய்க் கல்விப்பணி செய்து ஏற்றம் பெறவைத்த அம்மை வாழி.
வயலின் இசைபயில அண்ணாமலை பல்கலைக்கழகம் சென்ற போதும்
இடை நடுவே ஆசிரியநியமன அழைப்பு வந்துற்ற போது
சமூகவிஞ்ஞான ஆசிரியையாக் வவுனியா நெளுக்குள மகா வித்தியாலயத்திலும்
சந்திரமௌலீச வித்தியாலயத்திலும் மாணவ மணிகளுக்கு
எழுத்தறிவித்த இறைவனாக் கல்விச்சுடரேற்றிய அம்மை வாழி.
பரம்பொருளாம் சிவனதும் பன்றித்தலைச்சி அம்மனதும்
தெய்வத்திருவருளால் விஜயகுலராணி அம்மை நலம் பெற்று நீடுவாழி.

இங்ஙனம்

சந்திரமௌலீச வித்தியாலய ஸ்தாபக பரம்பரை காசிநாதர் ஆசிரியர் குடும்பம் சார்பாக கா.சிவபாலன், ஸ்ரீ ரமணன் தர்சினி குடும்பம்

ஆயத்தடி மட்டுவில் (சி-9713)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கு வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும்

(கொழும்பு)

இலங்கை ஒரு ஜனநாயக நாடாக தொடர்ந்து பரிண மிக்க வேண்டும் என்ற விருப்பத்தை இலங்கை வாழ் மக்கள் அனைவரும் கொண்டுள்ளார்கள். இதனை நிலைநிறுத்துவதற்கு அனைத்து இன மக்களும் தம்மால் இயன்ற பணிகளைச் செய்ய வேண்டிய காலகட்டத்தில் நிற்கிறோம்.

ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கும் பலப்படுத்து வதற்கும் அனைத்து சிவில் சமூகங்களும் சிவில் சமூக அமைப்புக்களும் ஒன்று இணைந்து பணியாற்ற வேண் டியுள்ளது என யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவ னங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் தேர்தல் நடைமுறை முக்கியமான ஜனநாயக நடைமுறையாக நிலைநிறுத்தப்படுவது மகிழ்ச்சியைத் தருகின்றது.

சுதந்திரமான தேர்தல்கள் இதனை உறுதி செய்வத ற்காக சுட்டியாக அமையும். இதனால் இந்தச் செயல்மு றையில் அனைத்து மக்களும் பங்குகொள்வது அவசிய மானதாகின்றது. இது ஒவ்வொருவரதும் கடமையுமாகும்.

மக்கள் தங்கள் ஜனநாயக உரிமையை நிலை நிறுத்து வதற்கு தமது வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும்.

இலங்கையின் ஏழாவது ஜனாதிபதியை தெரிவு செய்வ தற்காக எதிர்வரும் எட்டாம் திகதி நடைபெறவுள்ள தேர்த லில் வாக்குரிமையுள்ள அனைத்து மக்களும் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்தி தமது ஜனநாயக உரிமையை நிலைநிறுத்த வேண்டும் என்றும் முறைகேடுகளை தவிர்ப் பதற்காக ஒவ்வொரு வாக்காளர்களும் நேரத்துடன் வாக்குச் சாவடிக்கு சென்று தமது வாக்குகளை செலுத்த வேண்டும் என்றும் 27 அமைப்புக்களை உள்ளடக்கிய யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மக்களை கேட்டுக் கொள்கின்றது என தெரிவிக்கப்பட் டுள்ளது. (இ)

## ஈழத்து சிதம்பர தரிசனம்

### வேண்டுவார் வேண்டும் வரமீயும் சுந்தரேசன்

சங்கரனார் சுந்தரேசன் சௌந்தராம் பிகையோடு
சாற்றிடும் வேதமும் குருமுறையும் சேர்ந்தே ஒலித்திட
இப்பிறவி மாற்றி எமக்கருளும் எங்கள் சிவனார்
ஈழத்து சிதம்பரத்தில் எட்டாம்நாள் திருவெம்பாவை கண்டு
எப்போதும் எம் நெஞ்சில் எழிலார்ந்த திருவுருவம் காட்டி
ஏற்றதோர் வாழ்வுக்கு செல்வமெலாம் அடியார்க் கருளி
அப்பன் சுந்தரேசன் ஐயன் அம்மை விநாயகன் முருகனுடன்
அருள் செய்தே அபயம் தந்து காத்து அருள்கின்றான்.

(சி-9704) -மதுரகவி. காரை. எம்.பி.அருளானந்தன்-

இன்று (2015.01.03) ஈழத்து சிதம்பரத்தில் (காரைநகர் சிவன்கோவில்) திருவெம்பாவை 8 ஆம் நாள்






# இராசி பலன்

03.01.2015
(மார்கழி 19, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு
திரயோதசி முற்பகல் 9.44 மணிவரை
ரோகினி முற்பகல் 7.59 மணிவரை
இராகுகாலம் 9.30-11.00 மணிவரை
சுபநேரம் 3.30-5.00 மணிவரை
அமிர்த சித்தம்

வளவன்

**மேடம்** எடுத்த காரியத்தை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள்.

**இடபம்** வெகுமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சயன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான நாள்.

**மிதுனம்** சோம்பலை விலக்குவது நல்லது, பிறருக்கு உதவிசெய்யும் எண்ணம் உருவாகும், பயணங்களால் மன உளைச்சல்கள் ஏற்படலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**கடகம்** புதிய பொருட் சேர்க்கையோடுயுண்டு, குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**சிம்மம்** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், ஆரோக்கியமான நாள், காரிய அனுகூலமுண்டு, எடுத்த காரியங்கள் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி** எதிர்பாராத செலவுகள் இடம் பெறலாம், சரீரப் பிரயாசை காட்டுவீர்கள், புதிய திட்டங்களில் முன்னேற்றம் ஏற்படும், தந்தை வழி உறவினரால் நன்மையுண்டு, அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**துலாம்** அஜீரணம் சம்பந்தப்பட்ட ரோகங்கள் ஏற்படலாம், பயணங்களால் மன உளைச்சல் ஏற்பட்டு உற்சாகம் குறையும் , குடும்பத்தில் விட்டுக் கொடுத்து நடப்பதால் அமைதி கிட்டும்.

**விருச்சிகம்** மனோ தைரியமுண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்குவதில் பிரியப்படுவீர்கள் , சயன சுகமுண்டு, நண்பர்களின் சந்திப்புகள் மகிழ்ச்சி தரும்.

**தனுசு** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, சுவாரஸ்யமான நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** திட்டமிட்ட காரியங்களில் சில திருப்பங்கள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, செலவுகளுக்கு பணம் பற்றாக்குறையாக அமையலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** ரோக பயமுண்டு, பயணங்களால் பலனுண்டு, சஞ்சலங்கள் கூடும் நாள், நண்பர்கள் சந்திப்புகள் இடம் பெறும் வாய்ப்புண்டு, தொலைபேசித் தகவல்கள் நன்மை தரும்.

**மீனம்** மனோ தைரியமுண்டு, எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவலைகள் இன்றி வாழ்தல்!

ஆன்மீகம் 119

...நான் கொடுத்த அந்தச் சின்னப் பயிற்சியை நீங்கள் செய்ய ஆரம்பித்தால் உங்களுடைய எல்லாக் கவலைகளும் மறைந்து நீங்கள் முற்றிலும் ஒரு புதிய மனநிலையைப் பெறுவதைக் காண்பீர்கள். உங்களுக்குள் ஒரு புதிய சக்தி அலை மோதுவதைக் காண்பீர்கள்.

இப்பொழுது திடீரென்று கிடைக்கும் அந்தச் சக்தி இதற்கு முன் நீங்கள் கவலைப்படுவதற்காகத் தேக்கி வைத்த சக்திதான்.

நீங்களே உங்களுக்கு நேர்மையான ஒரு சோதனை செய்து இரகசியமாக உங்கள் கவலைகளைப் பேணிக் காக்கிறீர்களா நீங்கள்? உரு மாற்றத்தை ஏற்றுக் கொள்ளத் தயாரா என்பதைக் கண்டு பிடியுங்கள்.

நீங்கள் கவலைகளுக்குப் பின்னால் செல்வதை நிறுத்தியவுடன் மற்றவர்கள் எவ்வாறு ஆதரவற்று அந்தச் சுழலில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடியும். கவலைகளைப் பற்றி மக்களிடம் முடிவில்லாமல் பேசிக் கொண்டிருப்பதன் மூலம் அதை எப்படிப் பெரிதுபடுத்துகிறார்கள் என்பதை உங்களால் காண முடியும். இந்தக் கவலைகளைப் பற்றிப் பேசுவதையே கவலையைப் பற்றிக் கவலைப்படுதல் என்று அழைக்கிறேன்!

உங்களால் கவனிக்க முடிந்தால் மட்டுமே இது நிற்கும். நீங்கள் கவனிப்பவர் ஆகும் வரை உணர்ச்சிகளில் சிக்கிக் கொண்டு அவைகளுக்கு மிகுந்த சக்தியையும் அதிகாரத்தையும் கொடுத்துக் கொண்டு தான் இருப்பீர்கள்.

நான் மீண்டும் சொல்கிறேன் உங்களை உங்கள் கவலைகளிலிருந்து ஓடி விடச் சொல்லவில்லை. அதைப் பற்றிப் பேசுவதன் மூலம் பெரிதுபடுத்தாதீர்கள் என்று சொல்கிறேன்.

உங்கள் சக்தியை அதில் செலவழிக்காதீர்கள். அதற்குப் பதில் செய்ய வேண்டியதை கவனித்தீர்களானால் அவைகள் உங்களைக் கவலைப் படுத்துவதை நிறுத்திவிடும். நேரத்தை வீணாக்காமல் அவைகளை உடனே கவனியுங்கள். அவ்வளவுதான்.

உங்கள் கவலைகளுடன் நீங்கள் சுகமாக இருக்கத் தொடங்கிவிட்டீர்களா என்று உங்களை நீங்களே சோதனை செய்து கொள்ளுங்கள்.

கவலைகள் உங்களைக் கட்டுப்படுத்துகின்றனவா அல்லது நீங்கள் கவலைகளைக் கட்டுப்படுத்துகிறீர்களா என்பதை அறிய இதுவே அளவுகோலாகும். நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அதைப் பற்றி மீண்டும் மீண்டும் பேசுவதில் சுகம் காணுவீர்களானால் கவலைகள் உங்களைக் கட்டுப்படுத்துகின்றன. அதை மனதிலேயே வைத்துக் கொண்டிருக்காமல் செய்ய வேண்டியதைச் சரியாகச் செய்வீர்களானால் நீங்கள் அவற்றைக் கட்டுப்படுத்துகிறீர்கள்.

ஸ்வாமிஜி நீங்கள் இதற்கு முன் குடிப்பதைப் பற்றிச் சொன்னீர்கள். என் கணவர் எப்பொழுதுமே குடித்துக் கொண்டிருக்கிறார். கவலைகளை மறப்பதற்காகவே குடிப்பதாகச் சொல்கிறார். நான் என்ன செய்வது?

நான் சொன்னதுபோல இது ஒரு பொதுவான பிரச்சினை. எப்படியாயினும் உங்கள் கணவர் இங்கிருந்திருந்தால் உதவியாக இருந்திருக்கும்.

குடிப்பழக்கத்தை ஆராய்ந்து பார்த்தீர்களானால் நீங்கள் எவ்வளவு சுய-முரண்பாட்டுடன் இருக்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்வீர்கள். இதை விளக்க முயற்சி செய்கிறேன்.

நீங்கள் சந்தோசமாக இருப்பதற்காகக் குடிக்கிறீர்கள். ஆனால், அது துயரமான துயரமாக முடிந்து விடுகிறது. நீங்கள் சமுதாயத்தோடு இணக்கமுள்ளவர் என்று அழைக்கப்படுவதற்காக, சமுதாயம் உங்களை ஏற்றுக்கொள்வதற்காகக் குடிக்கிறீர்கள். ஆனால் விதண்டாவாதம் செய்பவராகி விடுகிறீர்கள். ஆடம்பரத்திற்காகக் குடிக்கிறீர்கள். ஆனால் முடிவில் தாங்க முடியாத துன்பம் உடையவராகி விடுகிறீர்கள். உங்கள் கவலைகளையெல்லாம் மறந்து தூங்கலாம் என்று குடிக்கிறீர்கள். ஆனால் எழுந்திருக்கும் போது முன்னைவிடப் பலவீனமாக உணர்கிறீர்கள். பரவச அனுபவத்திற்காகக் குடிக்கிறீர்கள். ஆனால் முடிவில் மனச் சோர்விற்கு ஆளாகிவிடுகிறீர்கள்.



தன்னம்பிக்கையைப் பெறுவதற்காகக் குடிக்கிறீர்கள். ஆனால் முடிவில் உங்களையே கண்டு அஞ்சுகிறீர்கள். உரையாடலைத் தொடர்வதற்காக குடிக்கிறீர்கள். ஆனால் முடிவில் தெளிவற்றுப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

உங்கள் பிரச்சினைகள் கரைவதற்காகக் குடிக்கிறீர்கள். ஆனால் முடிவில் அவை பெருகுவதைத்தான் காண்கிறீர்கள். (தொடரும்)


பரமஹம்ஸ சுவாமி

---

# அதிசய உலகம்

### ஞாபகார்த்த பாலம்

அமெரிக்காவின் நெவாடா, அரிசோனா ஆகிய இரு மாநிலங்களை இணைக்கும், கட்டட கலைஞர்களின் அதிசயமான 890 அடி உயரத்தில் 1900 அடி நீளத்தில் ஹூவர் ஆணைக்கு அருகாமையில், கொலராடோ ஆற்றின் மேல் அமைந்திருக்கும் Mike O'Callaghan and Pats Tillman ஞாபகார்த்த பாலம்தான் அமெரிக்காவின் புதிய அதிசயமாக கணிக்கப்பட்டுள்ளது.



இதனை கட்டி முடிக்க, 21,000 பணியாளர்களின் உதவியுடன் சுமார் 5 ஆண்டுகள் சென்றதுடன், 240 மில்லியன் அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சாதனை பாலம் மேற்கு உநஅளைிரநசந எனுமிடத்தில் அமைக்கபட்ட 1060 அடி வளைந்த காங்கிரீட் அமைப்பில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

---

# சமைப்போம் சுவைப்போம்

## எலுமிச்சை குடமிளகாய் சாதம்

**தேவையான பொருட்கள்**



பச்சரிசி சாதம் ஒரு கப்,
எலுமிச்சைச் சாறு கால் கப்,
கடுகு, கடலைப்பருப்பு,
உளுத்தம்பருப்பு
தலா ஒரு டீஸ்பூன்,
காய்ந்த மிளகாய் 4,
மல்லி (தனியா) 2 டீஸ்பூன்,
கேரட் துருவல் கால் கப், குடமிளகாய் ஒன்று, கறிவேப்பிலை சிறிதளவு, உப்பு தேவைக்கேற்ப, நல்லெண்ணெய் 3 டீஸ்பூன்,

**செய்முறை**

குடமிளகாயைப் பொடியாக நறுக்கி வதக்கவும். காய்ந்த மிளகாய், மல்லியை (தனியா) வறுத்துப் பொடிக்கவும். வாணலியில் எண்ணெய் விட்டு... கடுகு, கடலைப் பருப்பு, உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை தாளித்து, எலுமிச்சைச் சாறு சேர்த்து, உடனடியாக அடுப்பிலிருந்து இறக்கவும். இதில் சாதத்தைப் போட்டுக் கிளறவும். இதனுடன் மிளகாய் தனியா பொடி, உப்பு, கேரட் துருவல், வதக்கிய குடமிளகாய் எல்லாவற்றையும் சேர்த்துக் கிளறினால்... சுவையான, வண்ணமிகு எலுமிச்சை குடமிளகாய் சாதம் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத நல்லிணக்கத்திற்கு இடையூறு விளைவிக்கும் இடங்களில் மதச் சின்னங்களை நிறுவ வேண்டாம்

## இந்து சிவில் சமூகம் கோரிக்கை

(கொழும்பு)

சுதேசிகளான சைவத்தமிழ் இந்துகளின் ஆதங்கங்களை புரிந்து கொண்டு தங்கள் திருச்சபைகளுக்கும் ஏனைய கிருஸ்தவ அமைப்புக்களுக்கும் பொருளாதார உதவிகளை மதம் மாற்றுவதற்கான ஓர் நிர்ப்பந்தமாக பயன்படுத்த வேண்டாம் என புனித பாப்பரசரிடம் கோரிக்கை விடுத்துள்ள சைவத்தமிழ் இந்து சிவில் சமூகம் மத நல்லிணக்கத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் தேவையற்ற இடங்களில் மதச்சின்னங்களை நிறுவ வேண்டாம் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு விடுத்துள்ள கோரிக்கை கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கையில் பன்னெடுங்காலமாக பூர்வீகமாக தமக்கே உரித்தான சுதேச கலாசார பண்பாட்டு விழுமியங்களுடன் சைவத்தமிழ் இநதுக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இந்த நாட்டில் காலத்துக்குக் காலம் அறிமுகப் படுத்தப்பட்ட ஏனைய மதப்பிரிவுகளுடன் மத நல்லிணக்கத்தை பேணிவருவதோடு தமது சுதேச பண்பாட்டை ஆழமாகப் பின்பற்றியும் வருகின்றனர்.

இந்நிலையில் குறிப்பாக இலங்கையின் வடக்கு, கிழக்கில் கடந்த மூன்று தசாப்த யுத்தத்தினாலும் அதன் பின்னரான விளைவுகளினாலும் சுதேசிகள் மிகப்பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த அவல நிலையிலிருந்து மீண்டெழுவதற்கு வெளி உதவிகளில் தங்கி வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு அவர்களில் பலர் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இவர்களுக்கு பலசமய, சமூக அமைப்புக்கள் பல்வேறு வழிகளில் கைகொடுத்து வருகின்றன. இருந்தபோதிலும் கணிசமான கிறிஸ்தவ போதகர்களும் அமைப்புக்களும் கல்வி, மருத்துவ, பொருளாதார உதவிகளை மதமாற்றத்திற்குரிய ஆயுதமாகப் பயன்படுத்தி வருவது கவலை தரும் தொடர்கதையாக இருந்து வருகிறது.

இந்த துன்பமயமான காலப் பகுதியில் யுத்தம், வறுமை, இயலாமை ஆகிய காரணிகளை பயன்படுத்தி பல ஆயிரக்கணக்கான சைவத் தமிழ் இந்துக்கள் மதம் மாறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதுமட்டுமன்றி அவர்களில் ஒரு தொகுதியினர் மீளவும் தம் தாய் மதம் திரும்புவதை உதவிகளைக் காட்டி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனர். பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே இந்தியாவில் தோன்றிய சமய ஞானியான திருமூலரால் சிவபூமி என்று அழைக்கப்பட்ட இலங்கையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழைமையான சிவாலயங்கள் இருக்கின்றன. வடக்கு, கிழக்கில் பெரும்பாலான கிராமங்கள் இன்றுவரை நூறு சதவீதத்தை அண்மித்த வகையில் சைவத்தமிழ் இந்துக்களைக் கொண்டதாக இருக்கின்றன. இருந்த போதிலும் இந்துக்களுடைய மத விழுமியங்களுக்கு மதிப்பளிக்காத வகையில் கிறிஸ்தவர்களே இல்லாத கிராமங்களில் தேவாலயங்களையும் முக்கிய வீதிகள், சந்திகளில் கிறிஸ்தவ மதச் சின்னங்களையும் நிறுவி வருவதும் சுவிஷேசக் கூட்டங்களை பெருமெடுப்பில் நடத்தி வருவதும் சுதேச இந்துக்களின் மனங்களைத் தொடர்ச்சியாகப் புண்படுத்தும் மற்றும் மேலாண்மையை திணிக்கும் செயற்பாடுகளாகும்.

உலக கிறிஸ்தவ ஆன்மீகத் தலைவர் என்ற ரீதியில் மேலைத்தேயத்தில் முஸ்லிம் மக்களை மதம் மாற்றாது கிறிஸ்தவ - முஸ்லிம் ஒற்றுமைக்கு தாங்கள் பாடுபடுவதுபோன்று, இங்கும் சுதேசிகளான சைவத் தமிழ் இந்துகளின் ஆதங்கங்களைப் புரிந்து கொண்டு, தங்கள் திருச்சபைகளுக்கும் ஏனைய கிறிஸ்தவ அமைப்புக்களுக்கும் பொருளாதார உதவிகளை மதம்மாற்றுவதற்கான ஓர் நிர்ப்பந்தமாகப் பயன்படுத்த வேண்டாம் என்பதையும், மத நல்லிணக்கத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் தேவையற்ற இடங்களில் மதச்சின்னங்களை நிறுவ வேண்டாம் எனவும் அறிவுறுத்துமாறு சகோதரத்துவத்துடனும் ஆன்மீக உணர்வுடன் தங்களை வேண்டுகின்றோம் என இந்து சிவில் சமூகம் தனது அறிக்கை மூலம் கோரிக்கையினை முன்வைத்துள்ளது. (இ)

## பயிற்சிப்பட்டறை நடைபெறமாட்டாது

சின்மயா மிஷனின் இளைஞர் பிரிவாகிய சின்மய யுவகேந்திராவினரின் ஏற்பாட்டில் நடைபெறவிருந்த இந்த வருடம் க.பொ.த. (சா.த) பரீட்சை எழுதிய தீவக வலய மாணவர்களுக்கான fb (Future Builder- எதிர்காலத்தை செதுக்குபவர்) பயிற்சி பட்டறை யா/வேலணை மத்திய கல்லூரியில் இன்று சனிக்கிழமை நடைபெறமாட்டாது. இப்பயிற்சிப் பட்டறைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## முழுநிலா கருத்தரங்கு

2015 இல் உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான முழுநிலா கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி மீசாலை உயர் கலைக் கல்லூரியில் வரலாறு பாடத்திற்கான கருத்தரங்கும் கிளிநொச்சி அன்னை இல்லத்தில் (வைத்தியசாலைக்கு அருகிலுள்ள லிபாரா இல்லம்) தொழில் நுட்பவியலுக்கான விஞ்ஞான பாடம் மற்றும் புவியியல் பாடத்திற்கான கருத்தரங்கும் இடம்பெறவுள்ளது.

மீசாலை உயர் கலைக்கல்லூரியின் ஏற்பாட்டில் இக்கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-29)


## கடைக்கட்டடம் விற்பனைக்கு

ஆஸ்பத்திரி வீதியில் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கம்பனிக்கு எதிரில் அமைந்துள்ள மூன்று மாடிக்கட்டடம் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:-077 431 3588 (9030)


## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 07.02.1942 — இறப்பு 31.12.2014

அமரர் செல்லையா சற்குணசிங்கம்

எமது பாடசாலையின் உப அதிபரின் கணவரான அமரர் செ.சற்குணசிங்கம் 31.12.2014 அகால மரணம் அடைந்து விட்டார். அவரின் இழப்பால் துயரும் குடும்பத்தின் துயரில் பங்கெடுத்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வேலாயுதம் மகா வித்தியாலயம் பருத்தித்துறை. (சி-9698) பாடசாலை சமூகம்

## இலங்கை நூலகச் சங்கம்

### நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் I-2015

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1 ற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இக்கற்கைநெறியானது, நூலக தகவல் விஞ்ஞானத்துறை சார்ந்த பல்வேறு தொழில்களுக்கான புகுமுக தகைமையாக விளங்குகின்றது. மேற்படி கற்கைநெறியானது யாழ்ப்பாணம் உட்பட நாடளாவிய ரீதியில் 6 நிலையங்களில் நடத்தப்படுகிறது.

**புகுமுக தகைமைகள்**

- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற பட்டம்

**அல்லது**

- க.பொ.த.(உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி அத்துடன்
- க.பொ.த.(சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன், அவற்றுள் மொழியில் திறமைச் சித்தியும் கணிதம்/தூயகணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

**மொழி மூலம் :** தமிழ் ( யாழ்ப்பாண நிலையத்தில் )

**கற்கைநெறிக் கட்டணம் :** ரூபா 15,000,00

விரிவுரைகளுடன் கூடிய வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் நடைபெறும்.

கற்கைநெறி தொடர்பான விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் பெற்றுக் கொள் வதற்கு தயவுசெய்து 15 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு சுயமுகவரி யிடப்பட்ட கடித உறையை (9"X 4"), இலங்கை நூலகச் சங்கத்தின் பெயரில் பெறப்பட்ட 200 ரூபா பெறுமதியானதும் ரொறிங்டன் (Torrington) உப தபால் அலுவலகத்தில் மாற்றக் கூடியதுமான காசுக்கட்டளையுடன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Education Officer
Srilanka Library Association,275/75 The Professional Centre, Prof. Stanley Wijesundera Mawatha, Colombo-07.Tel/Fax: 011-2589103 E-mail: slla@sltnet.lk or slliba @yahoo.com Web: www.slla.org.lk

விண்ணப்பப் படிவங்களை அனுப்புவதற்கான முடிவுத் திகதி 24.01.2015 ஆகும்.

Dr திருமதி. கல்பனா சந்திரசேகர்
ஒருங்கிணைப்பாளர்/யாழ். நிலையம்,
இலங்கை நூலகச் சங்கம்.
(9027)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம் பூரட்டாதி<br>கி.பா: 49 செவ் 2 இல் உயரம்: 5'6''<br>தகைமை/தொழில்: HNDM/ தனியார் தொழில்<br>தொ.இ: B/3962 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 20 1/4<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/3987 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 7 3/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBBS வைத்தியர்<br>தொ.இ: B/3964 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: 60 1/4 செவ் 8இல்<br>உயரம்: 5'4''<br>தகைமை/தொழில்: B.com<br>தொ.இ: G/3988 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 37 செவ் 1 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ கிராம அலுவலர்<br>தொ.இ: B/3966 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: புனர்புசம் 3<br>கி.பா: 30 1/4<br>உயரம்: 5'3''<br>தகைமை/தொழில்:B.A M.A தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்<br>தொ.இ: G/3990 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 47 செவ் 2ல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSC பொறியியளாளர் (லண்டன்)<br>தொ.இ: B/3968 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: 19 1/4 செவ் 1 இல்<br>உயரம்: தகைமை/தொழில்: மருத்துவபீட மாணவி இறுதியாண்டு<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் மிக முக்கியம்<br>தொ.இ: G/3991 |


## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்மக் கழிவுகளை அகற்றும் பணி குருநகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

டெங்கின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் டெங்கு விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மாநகர எல்லைக்குட்பட்ட 23 வட்டாரங்களில் திண்மக்கழிவுகள் அகற்றும் பணி கடந்த முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு இம் மாதம் முழுவதும் மேற்கொள்ளவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய 50 மேலதிக தொழிலாளர்களையும் 10 மேலதிக உழவு இயந்திரங் களையும் பயன்படுத்தி 7 உப அலுவலக பிரிவுகளின்(Muster Points) அனைத்து பிரதேசங்களிலும் சுத்திகரிப்புப் பணி மேற் கொள்ளப்படவுள்ளது. அந்த வகையில் முதற் கட்டமாக குருநகர் பிரதேசத்தில் திண்மக் கழிவுகள் அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

கழிவகற்றும் பணி ஆரம்பிப்பதற்கு ஒரு நாள் முன்னதாகவே குறிப்பிட்ட பிரதேச பொதுமக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல்கள் மேற்கொள்ளப்படும். அக்காலப் பகுதியில் அனைத்து மக்களும் தங்கள் வீட்டிலிருந்து அகற்றப்பட வேண்டிய திண்மக்கழிவுகளை தொழிலாளர்கள் சேகரிப்பதற்கு ஏதுவாக அப்புறப்படுத்தி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதோடு குறித்த பிரதேசத்தில் இப்பணி ஆரம்பிக்கப்பட்டு அங்கு முற்று முழுதாக திண்மக்கழிவுகள் அகற்றப்பட்ட பின்னரே அடுத்த பிரதேசத்தில் கழிவகற்றும் பணி ஆரம்பிக்கப்படும் என யாழ். மாநகர சபையின் ஆணையாளர் செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார். (இ



நன்றி:-அததெரண

## க.பொ.த(உ/த)பரீட்சை முதன்மைப்பெறுபேறுகள்-2014

**யா/விக்ரோறியா கல்லூரி**
**சுழிபுரம்**
**கணிதப்பிரிவு**

ஐ.கார்த்திகா- 3ஏ, எஸ். றோகுலமேனன்- ஏ2பி,எஸ்.பிரியதர்சன்- 2பிசி, ஜெ.நிதர்ஜன்- பி2சி, ஜி.ஆனந்தன்-பி2சி,கே.சுதாகரன்-சி2எஸ், எஸ்.சுகன்யா- சி2எஸ்.

**விஞ்ஞானப்பிரிவு**

எஸ்.நிறோஜா-2பிசி,கே.நளாயினி-பிசிஎஸ், எஸ்.காருண்யா -பி2 எஸ், ரி.விஜிதா-2சிஎஸ்,என்.அபிராமி-2சிஎஸ், டி.நிதுஜா- 2சிஎஸ், எஸ். சுதர்சன்- சி2எஸ், கே.சிதம்பரபாளினி - சி2எஸ்,ஏ.குபேந்திரன்- சி2எஸ்.

**வர்த்தகப்பிரிவு**

என்.சியாமினி - ஏ2பி, ஏ.அபர்ணா- 3ஸ்.நிர்மலா- பிசிஎஸ், ஆர்.கிருஷ்ணவிநோதரன்- 3சி,கே.காயத்திரி- 3சி, ஆர்.ரகுசாந் -2சிஎஸ், ஜெ.சயந்தன் -2சிஎஸ், யு.ரகுராஜன்- 3சி.

**யா/மல்லாகம் மகா**
**வித்தியாலயம்**
**கலைப்பிரிவு**

ர.நிவேதிகா-2ஏபி, உ.திவியா-2ஏசி, த.தனிஸ்ரா-ஏ2பி, போ.காருண்யா-2ஏஎஸ், தே.கயேந்தினி-ஏ2பி, அ.சஞ்சிகா-ஏபிஎஸ், செ.அனிஸ்ரா-பி2சி, க.தனுஷா-2பிசி, சி.நிருஜன்-ஏபிசி

**வர்த்தகப்பிரிவு**

சி.சிவதர்ஷன்-3பி, செ.அனித்தா-ஏபிசி.

## நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி-I

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் I இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இக்கற்கைநெறியானது நூலக தகவல் விஞ்ஞானத் துறை சார்ந்த பல்வேறு தொழில்களுக்கான புகுமுக தகைமையாக விளங்குகின்றது. மேற்படி கற்கை நெறியானது யாழ்ப்பாணம் உட்பட நாடளாவிய ரீதியில் 6 நிலையங்களில் நடத்தப்படுகிறது.

**புகுமுக தகைமைகள்**

ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் பெற்ற பட்டம் அல்லது க.பொ.த(உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி அத்துடன் க.பொ.த(சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் அவற்றுள் மொழியில் திறமைச்சித்தியும் கணிதம்/தூய கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

**மொழி மூலம்:** தமிழ் (யாழ்ப்பாண நிலையத்தில்)

**கற்கைநெறிக் கட்டணம்:** ரூபா 15 ஆயிரம் விரிவுரைகளுடன் கூடிய வகுப் புக் கள் வார இறுதி நாட்களில் நடை பெறும். கற்கை நெறி தொடர்பான விபரங்களையும் விண்ணப்பப்படிவத்தையும் பெற்றுக்கொள்வதற்கு தயவு செய்து 15 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு சுயமுகவரியிடப்பட் கடித உறையை (9"x 4"), இலங்கை நூலகச் சங்கத்தின் பெயரில் பெறப்பட்ட 200 ரூபா பெறுமதியானதும் **றொறிங்டன்(Torrington) உப தபால் அலுவலகத்தில்** மாற்றக் கூடியதுமானகாசுக்கட்டளையுடன்பின் வரும்முகவரிக்குஅனுப்பிவைக்கவும்.

Education Officer

Srilanka Library Association,275/75 The Professional Centre,Prof. Stanley Wijesundera Mawatha, Colombo-07.Tel/Fax: 011-2589103 E-mail: slla@sltnet.lk or slliba @yahoo.com Web: www.slla.org.lk விண்ணப்பப்படிவங்களை அனுப்பு வதற்கான முடிவுத்திகதி 24.01.2015 ஆகும் என இலங்கை நூலகச்சங்கத்தின் யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் கலாநிதி திருமதி கல் பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார். (இ

# தமிழர்களின் உரிமைப் பிரச்சினை முக்கியத்துவத்தை இழந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

இறுதி மூச்சை விட்டுக் கொண்டிருக்கும் ஜனநாயகத்துக்கு முதலுதவி அளிக்கும் அவசரத்தில் தமிழரின் உரிமைப் பிரச்சினை முக்கியத்துவத்தை இழந்திருப்பது உண்மையே என சுட்டிக்காட்டியுள்ள யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம்,ஜனநாயகத்தை காப்பதற்கு தவறாது அனைவரும் வாக்களிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கான இறுதி சந்தர்ப்பமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நோக்கப்படுகிறது. மக்களுக்கான அரசு என்ற நிலையிலிருந்து அரச அதிகாரத்தினருக்காக மக்கள் என்ற நிலைக்கு முழு நாடும் இழுத்துச் செல்லப்படுவதைத் தடுப்பதற்குரிய நேரம் இதுவாகும்.

அபிவிருத்தித் திட்டங்கள் மக்கள் நலன்களைக் கருதி முன்னெடுக்கப்படாமல் தரகுப்பணம் பெறும் நோக்கத்தைக் கொண்டுநடைமுறைப்படுத்தப்படுகின்றன. அபிவிருத்திக்குச் செலவிடப்படும் பணம் மற்றும் அதிகார வர்க்கத்தினர் பெறும் தரகுப்பணம் இரண்டுமே இந்நாட்டு மக்களுக்குரியவை. பெருமளவு மக்கள் பணத்தை தரகுப்பணமாகக் கொள்ளையடித்து




விட்டு ஏதோ தமது பணத்தில் அபிவிருத்தி செய்வது போல் நாடகமாடுவது முழு மக்களையுமே ஏமாளிகளாக்க முனையும் கபடத்தனமாகும்.

மக்களின் வரிப்பணம் ஒரு சிறு அதிகாரக் கும்பலின் சுகபோக ஆடம்பர வாழ்விற்காகச் சூறையாடப்படுகிறது. நீதி நிர்வாகச் சீர்கேடுகள், சட்டம் ஒழுங்கு குலைவு, ஊழல், அதிகார துஷ்பிரயோகம் என்பன அதியுச்ச நிலையை அடைந்து விட்டன. மக்கள் வரிப்பணத்தில் வாழ்பவர்கள் மக்களை ஏமாற்றுகின்றனர்.

வடக்கில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அதிகாரமற்றவர்களாயுள்ள நிலையில் மக்களாதரவை பெறமுடியாதவர்களிடம் சகல அதிகாரங்களும் குவிந்துள்ளதிலிருந்து இதனை அறிந்து கொள்ளலாம்.

இறுதி மூச்சை விட்டுக் கொண்டிருக்கும் ஜனநாயகத்துக்கு முதலுதவி அளிக்கும் அவசரத்தில் தமிழரின் உரிமைப் பிரச்சினை முக்கியத்துவத்தை இழந்திருப்பது உண்மையே.ஜனாதிபதித் தேர்தலில்போட்டியிடும் இரண்டு பிரதான வேட் பாளர்களோ அல்லது அவர்களின் முக்கிய ஆதரவாளர்களோ தேசிய இனப் பிரச்சினையின் முக்கியத்து வத்தை உணர்ந்தவர்களாகக்காட்டிக் கொள்ளவில்லை. இந்த நிலையில் இவர்களிடமிருந்து தேசிய இனப் பிரச்சினைக்கு எந்தத் தீர்வையும் எதிர்பார்க்க முடியாது என்பதும் நிச்சயம்.

எனினும் இதன் காரணமாக இத் தேர்தலைப் புறக்கணிக்க கோருவதும் பொருத்தமற்றது. ஏனெனில் ஜனநாயக ரீதியில் தமிழ் மக்களுடைய உரிமைக் கோரிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஜனநாயகம் தப்பி பிழைத்திருப்பது அவசியம். முழு இலங்கையிலும் ஜனநாயகச் சூழல் சற்று மலரும் போது தமிழ் மக்களும் அதன் பலனை அனுபவிக்க முடியும். அதற்காக தேர்தல் என்ற வடிவில் எமக்கு முன்னால் உள்ள வாய்ப்பினை நாம் பயன்படுத்த வேண்டும்.

இதனால் எதிர்வரும் தேர்தலில் தவறாது வாக்களித்து எமது மக்களின் வரிப்பணத்தையும், நீதி நிர்வாகத்தினையும், சட்டம் ஒழுங்கையும், ஜனநாயகத்தையும் காக்கும் எமது நோக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்.

சர்வாதிகாரத்தை வளர விடுவது முழுநாட்டையுமே மீள முடியாத அழிவுக்குக் கொண்டு செல்லும். சர்வாதிகார வழிமுறைக்கு சென்ற நாடுகளின் வரலாற்றிலிருந்து இதனைப் புரிந்து கொள்ளலாம்.

எமது மக்களின் வாக்குப்பலம் சிறியதென்றாலும் ஜனநாயகமா? சர்வாதிகாரமா? என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக அது இருக்கலாம். 2005 ஆம் ஆண்டில் எமது மக்கள் தேர்தலைப் புறக்கணிக்காமல் வாக்களித்திருந்தால் அதன் முடிவுகள் வேறு விதமாக இருந்திருக்கலாம்.

எனவே எங்கள் ஒவ்வொரு வரினதும் வாக்கின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பக்கூடியவர் வெல்வதற்காக தவறாது வாக்களிக்குமாறு எம் மக்களைக் கேட்டுக் கொள்கிறோம் என விஞ்ஞான ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (இ



குருநகர் கலாசார மண்டபத்தில் குருநகர் சமூக அபிவிருத்திக்கான இணையத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்ற பேர்கன்- ஒஸ்லோ பரிசுத்தின நிகழ்வின் போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்டஈட்டு கொடுப்பனவு

(கரணவாய்)

வடமராட்சி கரவெட்டிப்பகுதி விவசாயிகளுக்கான காப்புறுதி நட்டஈட்டுத்தொகை இன்று பிற்பகல் 3 மணிக்கு வல்லிபுரம் கோவி லில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இதேவேளை இந்த நட்டஈட்டுக் கொடுப்பனவை தமது பிரதேசத்தில் வைத்து வழங்குமாறும் இதன்மூலம் போக்குவரத்துப் பிரச்சினைகளால் ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்க உதவுமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

## தாச்சிப் போட்டி இன்று

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கமும் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களமும் இணைந்து நடத்தும் தீபாவளி சிறப்பு தாச்சி சுற்றுப்போட்டி இன்று பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் கண்ணகி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் நவாலி தென்றல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழகம் விளையாடவுள்ளது. (இ)

# பேராசிரியர் வேல்நம்பிக்குத் தாய்லாந்தில் விருது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடப் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி பாங்கொக்கில் இரண்டு விருதுகளைப் பெற்றுள்ளார். பாண்டிச்சேரியைத் தலைமையகமாகக் கொண்ட விஞ்ஞானிகள், அபிவிருத்தியாளர்கள் சர்வதேச பீடத்தின் (Association of Scientists, Developers and Faculties) (ASDF) மாநாடு பாங்கொக்கில் உள்ள ஹொலிடே இன் ஐந்து நட்சத்திர விடுதியில் அண்மையில் இடம்பெற்ற போது சிறந்த கல்விசார் பீடாதிபதி மற்றும் சிறந்த கல்விசார் ஆய்வாளர் என்ற இரண்டு விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.



இவரை விட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட விரிவுரையாளர் பா. கண்ணன் சிறந்த விஞ்ஞானத்துறை ஆய்வாளர் விருதையும் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தைச் சேர்ந்த இ.கஜானந்தன் சிறந்த மாணவனுக்கான விருதையும் பெற்றுள்ளனர்.

உலகளாவிய நிலையில் 74 நாடுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற 9 ஆயிரத்து 674 விண்ணப்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 27 பேர் மேற்கண்ட வகையில் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டு ள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# நெற்பயிரில் இலை சுருட்டிப்புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்துவோம்

வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் மானாவாரியாகவும், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் பெரிய நீர்ப்பாசன, சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழும் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. கடந்த போகங்களில் இலைசுருட்டி, சந்துகுத்தி, கூடுதாங்கிப் புழு, கொப்பள ஈ, கபிலத்தத்தி, நெல்மூட்டுப் பூச்சி ஆகியவை நெற்பயிரைத்தாக்கும் பிரதான பூச்சிப் பீடைகளாக உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இப் பூச்சிப் பீடைகளில், இலை சுருட்டிப் புழுவானது இக்காலபோகத்தில் தொடர்ச்சியாகப் பெய்யும் கன மழையினால் நிலவும் மப்புமந்தாரமான காலநிலை காரணமாகப் பெருக்கமடைந்து நெற்பயிரில் பரவலாக ஐந்து மாவட்டங்களிலும் சேதத்தை ஏற்படுத்தி வருகிறது.

இதன் தாக்கமானது பொருளாதார ஊறு விளைவிக்கும் மட்டத்திற்குச் செல்லுமாயின் விளைச்சலில் பாரிய இழப்பு ஏற்படும். இதனால் இப் பூச்சிப் பீடையின் தாக்கத்தைப் பொருளாதாரத் தீங்கு விளைவிக்கும் மட்டத்திற்குக் கீழ் பரிபாலனம் செய்வது அவசியமாகும்.

**தாக்கம் எவ்வாறிருக்கும்?**

இப்பூச்சிப்பீடையின் தாக்கமுள்ள வயல்களில் கொக்குகள் நிற்பதை அவதானிக்கமுடியும். விவசாயிகள் இதனைக் கொக்குநோய் எனவும் அழைப்பர். நெற்பயிரில் இலைகளைச் சுருட்டும் இலைசுருட்டிப் புழுக்களில் மூன்று இனங்கள் இலங்கையில் இனங்காணப்பட்டுள்ளன. இவை இலைகளின் விளிம்புகளைக் குழாய் போன்று இணைத்து அதனுள்ளே இருந்து கொண்டு இலையின் இழையங்களை நீளப்பாடாகச் சுரண்டி உண்ணும். தாக்கம் பெருமளவில் அதிகரிக்கும் போது இலை நிறம் மாறி எரிந்தது போன்ற தோற்றமளிக்கும். பச்சை இழையங்களைச் சுரண்டி உண்பதால் ஒளித் தொகுப்பு பாதிக்கப்படும், இதனால் விளைவில் இழப்பு ஏற்படும். இவற்றால் சுரண்டப்பட்ட காயங்கள் நோயாக்கிகள் பயிரினுள் செல்ல ஏதுவாகின்றன.


**பூச்சியின் தன்மை**

**நிறையுடலி**

நிறையுடலி பொன்மஞ்சள் நிறமான முன் சிறகுகளில் அலைபோன்ற கோடுகளையும்.சிறகின் விளிம்பில் கபிலநிறப் பட்டி போன்ற அடையாளத்தையும் கொண்டது. மாலை நேரத்தில் சுறுசுறுப்பாக இருக்கும்.

நிறையுடலியாக மாறிய முதல் நாளிலேயே முட்டையிடத் தொடங்கும். ஓர் அந்து 300 முட்டையிடக் கூடிய ஆற்றல் கொண்டது. முட்டைகளைக் கூட்டமாக இலைப் பரப்பில் அல்லது இலை மடலில் இடும். சிறகு விரித்த நிலையில் 20 மில்லி மீற்றரும்,8-10 மில்லி மீற்றர் நீளமும் உடையது.





**குடம்பிகள் (இலை சுருட்டும் புழுக்கள்)**

3-5 நாட்களின் பின்னர் முட்டைகள் பொரித்துவரும் முதலாவது பருவக் குடம்பிகள் இலைகளைச் சுரண்டி உண்ணும். இரண்டாவது வளர்ச்சி நிலைவரும் போது இக் குடம்பிகள் இலைகளின் விளிம்புகளை இணைத்துச் சுருட்டி அதனுள் இருந்து கொண்டு இழையங்களைச் சுரண்டி உண்ணும். பல வளர்ச்சி நிலைகளைக் கொண்ட இக் குடம்பிகள் வெளிறிய மஞ்சள் கபில நிறமான தலையையும், மஞ்சள், பச்சை நிற உடலையும் கொண்டவை. முதுகுப் புறமாக நெஞ்சறையில் கறுப்புப் புள்ளிகளையும் கொண்டது.

**கூட்டுப்புழு**

16 நாட்களில் குடம்பிகள் கூட்டுப் புழுக்களாக மாறுகின்றன. கூட்டுப்புழுக்கள் சுருட்டப்பட்ட குழாய்களினுள்ளே கூட்டுப்புழுப் பருவத்தைக் கழிக்கும்.

**சாதகமான நிலைமை**

- யூரியா,அமோனியம்சல்பேற் ஆகிய நைதரசன் பசளைகளைஅதிகளவில் இடுதல்.
- வயலுக்கு அண்மையில் நிழல் இருத்தல்
- மப்புமந்தாரமான நாட்கள்
- உச்சமட்டங்கள் உருவாகும் காலம்
- மாற்றுவிருந்துவழங்கிகளின் பெருக்கம்

**முகாமைத்துவ முறைகள்**

இப் பூச்சியை முகாமைத்துவம் செய்வதற்கு ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவமுறைகளைக் கடைப்பிடிப்பதே நல்ல பலனைத்தரும்.

- தாக்கம் நிழலான இடங்களில் ஆரம்பிப்பதால் அண்மையில் மரங்கள் இருப்பின் அவற்றின் கிளைகளைவெட்டி அகற்றிச் சூரியவெளிச்சம் கிடைக்கச் செய்யவும்.
- யூரியா,அமோனியம்சல்பேற் ஆகிய நைதரசன் பசளைகளைச் சிபார்சுக்கு மேலதிகமாக அதிகளவில் இடுவதைத் தவிர்க்கவும்.
- வயலைச்சுற்றியும்,வயல் வரம்புகளிலும் உள்ள புற்கள்,கோரைகள் ஆகிய மாற்று விருந்து வழங்கிகளைஅகற்றித் துப்புரவாக வைத்திருக்கவும்.
- தினமும் வயலைக் கண்காணித்து குடம்பிகளுடன் இலைகளைக் கிள்ளி அழிக்கவும்.
- 25 வீதமான இலைகள் சேதப்படுத்தப் பட்டிருந்தால் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபார்சு செய்யப்பட்ட பூச்சிநாசினிகளில் ஒன்றை விசிறவும்

| இல | பூச்சிநாசினியின் இரசாயனப் பெயர் | பூச்சிநாசினியின் வர்த்தகப் பெயர் | 16 லீற்றர் தாங்கிக்கு தேவையான பூச்சிநாசினியின் அளவு | ஒரு ஏக்கருக்குத் தேவையான பூச்சி நாசினியின் அளவு |
|---|---|---|---|---|
| 01 | பிப்றோனில் 50 gr/lit SC | றீஜென்ற் | 20 மி.லீ. | 192 மி.லீ. |
| 02 | குளோர்புளுசறோன் 100 gr/litEC | அற்றபுறோன் | 12 மி.லீ. | 128 மி.லீ. |
| 03 | நொவலுறோன் | றிமோன் | 16 மி.லீ. | 160 மி.லீ. |
| 04 | மெதொக்கசிபெனோசைட்240 lit/SC | றண்ணர் | 16 மி.லீ. | 160 மி.லீ. |
| 05 | குறோமோபெனோசைட் 50 gr lit SC | மற்றிக் | 16 மி.லீ. | 160 மி.லீ. |
| 06 | புளுபெண்டயமைட் 48% WG | | 2 கிராம் | 20 கிராம் |
| 07 | வேர்டகோ 40%WG | தியாமெதொக்சாம் 20% + குளோறன்ரனிலிப்றோல் 20% | 4 கிராம் | 40 கிராம் |

பீடை நாசினிகள் ஆபத்தானவை. பாதுகாப்பு உடைகளை அணிந்து கொண்டு அவதானமாகக் கையாளவும்.

**க.தனபாலசிங்கம்**
விவசாய் போதனாசிரியர்
(துணைப்பீடம்)
மாகாணவிவசாயத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசுமோட்டை பொதுச் சந்தையினுள் நீர்தேங்கி நின்று வியாபாரத்திற்கு தடை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட முரசுமோட்டை பொதுச்சந்தையினுள் மழைநீர் தேங்கி நிற்பதால் வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள், பொருட்களை நுகர வருவோர் பெரும் இடர்பாடுகளை எதிர்கொள்ளவதாக தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த சந்தை வளாகத்தை சுற்றி புற்கள் வளர்ந்த நிலையிலும் சந்தை வளாகத்தின் முன் பகுதியில் மழைநீர் அதிகளவில் தேங்கி நிற்பதால் பொருட்களை நுகர வருவோர் இடர்பாடுகளை சந்திப்பதாக தெரிவிக்கின்றனர். சந்தையின் முன்பகுதியில் பெரியளவில் நீர்த்தடாகம் போன்று நீர்தேங்கி நிற்பதால் உட்செல்லும் வாகனங்கள் சகதியில் புதைவதாக வர்த்தகர்களால் தெரிவிக்



கப்படுகின்றது.

அத்துடன் மாரி காலம் தொடங்கினால் மழைநீர் பெருமளவில் தேங்கி நிற்பதால் நுளம்புகள் பெருகும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்நுளம்புகளால் வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கும் பொது மக்களுக்கும் நோய் ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேங்கி நிற்கும் நீரை மண்போட்டு நிரப்பி வியாபாரத்திற்கு இடையூறு விளைவிக்காத வகையில் அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(2-271)

# கௌரவிப்பு நிகழ்வு

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் வாழ்நாள் சாதனையாளர். கலாபூஷணம் விருது பெற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 .30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வவுனியா அந்தணர் ஒன்றிய குருகுல கட்டடத்தில் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ முத்து ஜெயந்திநாதக் குருக்கள் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் வாழ்த்துரையை வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா நிகழ்த்தவுள்ளார்.

இதன்போது வாழ்நாள் சாதனையாளர் விருதினை சமஸ்கிருத பண்டிதர் சிவஸ்ரீ கிருஸ்ணசாமி குருக்கள் சதாசிவக்குருக்கள் பெற்றுக்கொள்ளவுள்ளதுடன் கலாபூசணவிருது பெற்றவர்களால் க. கந்தசாமி குருக்கள், ப. சிவானந்தசர்மா, மு. பத்மநாபசர்மா, திருமதி ஞா. ஞானலச்சுமி, செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம், திருமதி புவனநாயகி ஐயம்பிள்ளை, மு. குமாரசாமி, ஆ. பத்மநாதன், ந. சுப்பிரமணியம், இ. சுப்பிரமணியம் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (2)




# பேருந்து போக்குவரத்து பாதை மாற்றப்பட்டமையால் பயணிகள் அவதி

(முக்கொம்பன்)

கிளிநொச்சி- ஸ்கந்தபுரம் வாய்க்கால் வீதி அண்மைக்காலமாக பெய்த கனமழையினை அடுத்து மண் அரித்துச் செல்லப்பட்டு வீதியில் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன.

இதனால் கிளிநொச்சி- ஸ்கந்தபுரம் ஊடாக முக்கொம்பன் சென்று யாழ்ப்பாணம் பயணிக்கும் பேருந்து சேவை கடந்த சில நாட்களாக குறித்த வீதியால் பயணத்தை தொடராமல் பரந்தன்- பூநகரி ஊடாக யாழ்ப்பாணம் சென்றடைகின்றது. இதனால் அன்றாடம் அலுவலகம் பயணிக்கும் உத்தியோகத்தர்கள் முதல் பிற மாவட்டங்களுக்கு செல்லும் பொது மக்கள் வரை பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே கிளிநொச்சி வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள் விரைவாக வீதியை செப்பனிட்டு மீண்டும் பேருந்து சேவை இடம்பெற உதவ வேண்டுமென முக்கொம்பன் கிராமமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-283)

# வாழ்வாதாரத்தை ஊக்குவிப்பதற்கு வழங்கப்பட்ட மாடுகள் திருட்டு

கிளிநொச்சி சிவநகர் தோம்புக்காணியில் மேச்சலுக்காக கட்டப்பட்டிருந்த நான்கு மாடுகளில் இருகன்னிப் பசு மாடுகள் இனந் தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளன.

அடையாளங்கள் இடப்பட்ட நிலையில் கட்டப்பட்டிருந்த இம் மாடுகள் நேற்று முன்தினமிரவு களவாடப்பட்டுள்ளதாக உரிமையாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப்பகுதியில் மேச்சல் தரைகளில் கட்டப்படும் மாடுகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படுவதாகபொது மக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தின் மேம்பாட்டிற்கென வழங்கப்பட்ட மாடுகள் களவாடப்படுவதால் அம்மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த இயலாமல் திண்டாடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பில் பொலிஸார், குடியிருப்பாளர் ஆகியோர் இவ்வாறு களவாடப்பட்டு கொண்டு செல்லப்படும் மாடுகளை இனம் கண்டு களவாடப்படும் நிலையை தடுக்க முன்வர வேண்டுமென பாதிக்கப்பட்ட மாடுகளின் உரிமையாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது. (2-254)

# கிணற்றினுள் தவறிவிழுந்த பாலகனின் உயிர் பிரிந்தது

வீட்டுக் கிணற்றினுள் தவறி விழுந்த குழந்தையின் உயிர் பரிதாபமாக பிரிந்தது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் ஒட்டுசுட்டான் வித்தியாபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் திருச்செல்வம் சிந்துஜன் (1 1/4) வயது) என்ற பாலகனே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவது, பிரஸ்தாப குழந்தை வீட்டிலிருந்து கிணற்றுக் கட்டு வரை தவழ்ந்து சென்ற வேளை தவறுதலாக கிணற்றினுள் விழுந்தது.

சுமார் அரை மணிநேரம் சென்ற நிலையில் பெற்றோர் குழந்தையைத் தேடியுள்ளனர்.

கிணற்றினுள் பார்த்தவேளை குழந்தை சடலமாகக் காணப்பட்டது.

உடனடியாக குழந்தை மீட்கப்பட்டு ஒட்டுசுட்டான் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனை முடிவுற்ற நிலையில் நேற்றைய தினம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-271)

# இளைஞர் மத்திய நிலையம் முன்பாக இன்று ஆர்ப்பாட்டம்


## முல்லை. மாவட்ட இளைஞர் கழக மாவட்ட சம்மேளனத் தலைவர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சம்மேளன இளைஞர்களால் இளைஞர் மத்திய நிலையம் தரப்பட வேண்டுமெனக் கோரி இன்றைய தினம் குறித்த நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக மாவட்ட சம்மேளன தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தோடர்பில் தெரிய வருவதாவது,

2012 ஆம் ஆண்டு UNICEF நிறுவனத்தின் நிதியுதவியுடன் இளைஞர்களின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட நிதியை கொண்டு இளைஞர்களுக்கான மத்திய நிலையமொன்றை அமைப்பதற்காக முள்ளியவளை மத்தி பொது நோக்கு மண்டபத்தை உரியவர்களுடன் பேசி ஐந்து வருட ஒப்பந்த அடிப்படையில் பெற்று இரண்டு இலட்சத்துக் குமதிகமான நிதியை இட்டு இந்த கட்ட




டத்தின் சில வேலைகளை முடித்து மின்னிணைப்பு பெற்று கணனி நான்கு போடப்பட்டு கரைதுறைப்பற்று இளைஞர்கள் இந்த மத்திய நிலையத்தை பயன்படுத்தி வந்தோம். இந்நிலையில் சிங்களம் மற்றும் ஆங்கில வகுப்பு ஒன்றும் நடைபெற்று வந்தது. இவ்வாறான நிலையில் ஒரு மாதங்களுக்கு முன்னர் வணிக மற்றும் கைதொழில் அமைச்சராக இருந்த றிசாத் பதியுதீனால் தெரிவு [illegible] வர்களுக்கு தை[illegible] காக இளைஞர் சேவை அதிகாரியிடம் திறப்பைப்பெற்று பலவந்தமாக தையல் பயிற்சி நடைபெற்று வருகிறது. அத்தோடு இளைஞர்கள் நிலையத்தினுள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுமுள்ளது. இது தொடர்பாக இளைஞர் சேவைகள் மன்ற உயரதிகாரிகள், பிரதேச செயலாளர், அரசாங்க அதிபர், முல்லைத்தீவு மாவட்ட ஜனாதிபதி இணைப்பாளர் உள்ளிட்ட பலருடன் பேசியும் தீர்வு எட்டப்படாததால் இளைஞர் மத்திய நிலையம் உடனடியாக விடுவிக்கப்பட்டு தமது நாளாந்த செயற்பாடுகளுக்கு தரப்பட வேண்டுமென்றும் தூக்கி வீசப்பட்டு இருக்கும் எமது பொருட்கள் உரியமுறையில் வைக்கப்பட்டு எமது சிங்கள மற்றும் ஆங்கில வகுப்பு நடைபெற ஆவன செய்யவே[illegible] இளைஞர்களின் அபிவிருத்திக்காக உழைக்க வேண்டுமெனவும் முள்ளியவளையில் நடைபெற்ற கிராமத்திற்கு வேலை நாட்டிற்காக எமது அர்ப்பணிப்பு எனும் வேலைத்திட்டம் நடைபெற்ற வேளையில் அங்கு சென்று தமது எதிர்ப்பை வெளிக்காட்டி தமக்கு உரிய தீர்வுகிடைக்கும் வரை முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக மாவட்ட சம்மேளன மற்றும் கரைதுறைப்பற்று இளைஞர் கழக பிரதேச சம்மேளன உறுப்பினர்கள் பதவி விலகுவதாகவும் இல்லாவிடின் இன்று இளைஞர் மத்திய நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்திலீடுபடவும் முடிவு செய்துள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக மாவட்ட சம்மேளன தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கெயார் நிறுவனத்துடன் இணைந்து திருமறைக்கலாமன்றம் நடத்திய கலையால் பயன் செய்வோம் என்னும் பயிற்சிப்பட்டறை நடைபெற்ற போது... (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)



நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற வதிரி முன்பள்ளி பரிசளிப்பு விழாவின் போது... (படம்:-கரணவாய் செய்தியாளர்)








யாழ்.உடுவில் பெண்கள் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற மாகாண மட்ட ஆங்கில மொழித்தின விழாவில் கல்வியமைச்சின் பிரதிநிதி சி.எம்.சமரக்கோன் பண்டார மேலதிக மாகாண உதவிக் கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், உதவிக்கல்விப்பணிப்பாளர் கு.வர்ணகுலராசா மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களால் வரவேற்கப்படுவதையும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உரையாற்றுவதையும் தேசிய மட்டத்தில் 3 ஆம் இடத்தைப் பெற்ற டொன்பொஸ்கோ வித்தியாலய மாணவர்களது நாடக ஆற்றுகையையும் படத்தில் காணலாம்.





உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தில் முன்பள்ளி சிறுவர்கள் கலை விழா நடைபெற்ற போது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் சிறுவர்களின் கலை நிகழ்வின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்.






நிகழ்வின் நிழல்கள்





யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்திய கலைக்கூட முதலாம் அணி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கிறீன்கிறாஸ் விடுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மீசைக்காரன் செய்த கலாட்டா

கோயிலில் இருந்து திரும்பிய கமலா வீட்டினுள் நுழைந்ததும், தன் வீட்டிற்கு யாரோ இரு விருந்தாளிகள் வந்திருப்பதைக் கண் விடயத்தைக் கேட்டு மன மொடிந்து போனாள். அவளுடைய தந்தை வந்தவர்களிடம் யோசித்துச் சொல்வதாகக் கூறி அவர்களை வாயில்



டாள். அவர்கள் அவளுடைய தந்தையுடன் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களுக்குக் கமலாவை அறிமுகம் செய்து வைத்தார் அவள் தந்தை! அவர்களுக்கு வணக்கம் தெரிவித்து விட்டுக் கமலா உள்ளே சென்று விட்டாள்.

சிறிது நேரங்கழித்து அவள் தந்தை அவளிடம் வந்து, "கமலா! அந்தப் பிள்ளை ரவி உன்னை ஒரு திருமணத்தில் பார்த்தானாம். அவனுக்கு உன்னைப் பிடித்து இருக்கிறதாம் அதனால் பெண் கேட்பதற்காக தன் தந்தையுடன் வந்திருக்கிறான். இந்த வரன் அமைந்தால் மிகவும் நன்றாக இருக்கும். ஆனால், பிள்ளையின் அப்பா பத்தாயிரம் ரூபாய் பணத்தை வரதட்சிணையாகக் கேட்கிறார்?" என்றார்.

பார்ப்பதற்கு அழகாக இருந்த ரவியைத் திருமணம் செய்து கொளவதை நினைத்தவுடனே மிகவும் மகிழ்ந்த கமலா வரதட்சிணை வரை சென்று வழி அனுப்பினார்.

அவர்கள் சென்றதும் வீட்டிற்குள் திரும்பி வந்த கமலாவின் தந்தை. "கமலா! உனக்குப் பிள்ளையைப் பிடித்து இருக்கிறது என்று உன் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது.

அதனால் நான் சம்மதம் என்று சொல்லி விட்டேன்!" என்றார் "ஐயையோ! வரதட்சிணைக்கு என்ன செய்வீர்கள், அப்பா?" என்று கவலையுடன் கமலா கேட்க, "அதைப்பற்றி கவலைப்படாதே! நான் எப்படியாவது ஏற்பாடு செய்கிறேன்!" என்று அவர் சொல்லிவிட்டார். உடனே, திருமணத் திகதி குறிக்கப்பட்டு, திருமணத்திற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடக்கத் தொடங்கின.

வரதட்சிணைப் பணத்தை எப்படியோ ஏற்பாடு செய்து விட்டதாக கமலாவின் தந்தை கூறினார். திருமண தினமும் வந்தது. உறவினர்களும், நண்பர்களும் கூடிவிட்டனர். மணப்பெண்ணிற்கு அலங்காரங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்போது, மிகவும் பருமனான ஒரு ஆள் மணப்பெண் தங்கியிருந்த வீட்டில் நுழைந்தார்.

"நான் ரவியின் பெரியப்பா! ரவி மணக்கப் போகும் பெண்ணை நான் பார்க்க விரும்புகிறேன்!" என்றார். நீளமான தலைமுடியும், அரிவாள் மீசையும் கொணட அவரைப் பார்ப்பதற்கு நாடக வேடதாரி போல் இருந்தாலும், மாப்பிள்ளையின் பெரியப்பா என்பதால் அவரை வரவேற்ற கமலாவின் தந்தை, தன் மகளை அறிமுகப்படுத்தினார்.

பிறகு அந்த அரிவாள் மீசைக்காரர் நேராக மாப்பிள்ளை தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்றார். அங்கு சென்று ரவியின் தந்தையை சந்தித்து, "நான் கமலாவின் மாமா! மாப்பிள்ளையைச் சிறிது பார்க்கலாமா?" என்றதும், ரவியின் அப்பாவும் தன் பிள்ளையை அறிமுகப்படுத்தினார்.

முகூர்த்த நேரம் நெருங்கியதும் அப்போது திடீரென ரவியின் தந்தையைத் தனியே அழைத்த மசைக்காரர், "உங்களிடம் வரதட்சிணையைப் பற்றி பேச வேணடியிருக்கிறது. உங்கள் அறைக்குச் செல்வோமா?" என்று கிசுகிசுக்க, ரவியின் தந்தை அவரைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றார்.

"உங்களிடம் வரதட்சிணைப் பணத்தை..." என்று தொடங்கிய



அந்த மீசைக்காரர் திடீரென பயங்கரமாக இருமத் தொடங்கினார். "தண்ணீர்... தண்ணீர் கொண்டு வாருங்கள்!" என்றுதிணறிக்கொணடே அவர் கூற, ரவியின் தந்தை தண்ணீர் எடுததுவர வெளியேறினார்.

தண்ணீர் எடுத்து வந்ததும், அதை அருந்திய மீசைக்காரர், "உங்களிடம் இப்போதே வரதட்சிணைப் பணத்தைத் தந்து விடலாமா என்று என் மைத்து னன் கேட்டான்" என்று சொல்ல, ரவியின் தந்தை சம்மதித்தார்.

உடனே, கமலாவின் தந்தையிடம் சென்ற மீசைக்காரர், "உங்களிடம் ரகசியமாகப் பேச வேண்டியிருக்கிறது. உங்கள் அறைக்குச் செல்வோமா?" என்று கேட்க, இருவரும் அறைக்குள் நுழைந்தனர்.......

(தொடரும்)




- 1431 - பிரெஞ்சு வீராங்கனை 19 வயது ஜோன் ஒஃப் ஆர்க் கைது செய்யப்பட்டு பியேர் கவுச்சோன் ஆயரிடம் ஒப்படைக்கப்பட்டாள்.
- 1496 - லியொனார்டோ டா வின்சி தனது பறக்கும் இயந்திரம் ஒன்றை சோதனையிட்டது வெற்றியளிக்கவில்லை.
- 1815 - ஆஸ்திரியா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகியன இணைந்து புரூசியா, மற்றும் ரஷ்யாவை எதிர்த்து இரகசிய கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தின.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்காவில் இருந்து பிரிவதில்லை என டெலவெயர் வாக்களித்தது.
- 1888 - 91 சமீ முறிவுத் தொலைநோக்கி முதன்முறையாக கலிபோர்னியாவில் உபயோகிக்கப்பட்டது. இதுவே அந்நேரத்தில் உலகின் மிகப் பெரும் தொலைநோக்கி ஆகும்.
- 1921 - துருக்கி ஆர்மேனியாவுடன் அமைதி உடன்பாட்டிற்கு ஒப்புக்கொண்டது.
- 1925 - இத்தாலியின் ஆட்சி அதிகாரம் முழுவதும் தன்னிடம் உள்ளதாக முசோலினி அறிவித்தார்.
- 1932 - பிரித்தானியர் மகாத்மா காந்தி மற்றும் வல்லபாய் பட்டேல் ஆகியோரைக் கைது செய்தனர்.
- 1956 - ஈபெல் கோபுரத்தில் ஏற்பட்ட தீயினால் கோபுரத்தின் மேற்பகுதி சேதமடைந்தது.
- 1957 - முதலாவது மின்கடிகாரத்தை ஹமில்ட்டன் வாட்ச் கம்பனி அறிமுகப்படுத்தியது.
- 1958 - மேற்கிந்தியத் தீவுகளின் கூட்டமைப்பு அமைக்கப்பட்டது.
- 1959 - அலாஸ்கா ஐக்கிய அமெரிக்காவின் 49வது மாநிலமானது.
- 1961 - அமெரிக்க அரசு கியூபாவுடனான ராஜதந்திர உறவுகளை முறித்துக்கொண்டது.
- 1961 - இடாகோவில் அணுக்கரு உலை ஒன்றில் ஏற்பட்ட கசிவின் காரணமாக மூன்று தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.
- 1974 - யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஆரம்பமானது.
- 1977 - ஆப்பிள் கணினி நிறுவனமயப்படுத்தப்பட்டது.
- 1995 - விடுதலைப் புலிகள் - இலங்கை அரசு பேச்சுக்களின் இரண்டாம் கட்டம் ஆரம்பமானது.
- 2004 - எகிப்திய விமானம் ஒன்று செங்கடலில் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த 148 பேரும் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- **1740 - கட்டபொம்மன், ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட மன்னன் (இ. 1799)**
- 1925 - டி. கே. புஷ்பவல்லி, திரைப்பட நடிகை
- 1956 - அருளம்பலம் அருள்பவான் - வல்வையைச் சேர்ந்த அகில இலங்கை மெய்வல்லுனர் விளையாட்டுவீரன்

### இறப்புகள்

- 2005 - ஜே. என். டிக்சித், இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் (பி. 1936)

### கட்டபொம்மன்



வீரபாண்டிய கட்டபொம்மன், 1760 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி பொம்மு மரபில் வந்த திக்குவிசய கட்ட பொம்மு- ஆறுமுகத்தம்மாள் தம்பதியருக்கு, பாஞ்சாலங்குறிச்சியில் பிறந்தார் .

பெப்ரவரி 2,.1790 அன்று 47 வது பாளையக்காரராகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டார். இவரது துணைவியார் வீரசக்கம்மாள்.

அழகிய வீரபாண்டியபுரம் எனும் ஊரில் (இன்றைய ஒட்டபிடாரம்) ஆட்சிபுரிந்து வந்த ஜெகவீரபாண்டியனின் (நாயக்க வம்சம்) அவையில் அமைச்சராக பொம்மு என்கிற கெட்டி பொம்மு பதவியேற்றிருந்தார். இவரது பூர்வீகம் ஆந்திர மாநிலம், பெல்லாரி ஆகும். வீரமிகுந்தவர் என்ற பொருளை தெலுங்கில் உணர்த்தும் கெட்டி பொம்மு எனும் சொல் நாளடைவில் கட்ட பொம்மு என்று மாறி பின் தமிழில் கட்டபொம்மன் என்ற சொல்லாயிற்று


ஜெகவீரபாண்டியனின் மறைவிற்குப்பின் அரசகட்டிலில் ஏறிய கட்ட பொம்மு பின் ஆதி கட்டபொம்மன் என்று மக்களால் அழைக்கப்பட்டார். இவரே பொம்மு மரபினரின் முதல் கட்டபொம்மன்.

கம்பனியார் (கிழக்கிந்திய கம்பெனி) கி.பி. 1793 இல் கப்பம் (திறை) கேட்டனர். கி.பி. 1797 இல் முதன் முதலாக ஆங்கிலேய அலன் துரை பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு வந்தார். அப்போது வீரபாண்டிய கட்ட பொம்மனைக் கைதுசெய்ய முயன்றார். அதை முறியடித்து வீரபாண்டியக் கட்டபொம்மன் பாஞ்சாலங் குறிச்சியை வந்தடைந்தார். செப்டம்பர் 5, 1799 இல் பேனர்மென் என்ற ஆங்கிலேயத் தளபதியால் பாஞ்சாலங்குறிச்சி கோட்டை முற்றுகையிடப்பட்டது. அங்கு கடும் போர் நடைபெற்றது. போரில் பல ஆங்கிலேயர்கள் உயிரிழந்தனர். இருப்பினும் கோட்டை வீழ்ந்துவிடும் என்ற நிலையில் வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையை விட்டு வெளியேறினார். 1799 ஆம் ஆண்டு, செப்டம்பர், 9 இல் ஆங்கிலேயர்களால பாஞ்சாலங்குறிச்சி கோட்டை கைப்பற்றப்பட்டது. 1799 ஆம் ஆண்டு அக்டோபர், 1 இல் புதுக்கோட்டை மன்னர் விஜயரகுநாத தொண்டமானால் வீரபாண்டிய கட்டபொம்மன் கைது செய்யப்பட்டு கம்பனியாரிடம் ஒப்படைக்கப்பட்டார். 1799 ஆம் ஆண்டு அக்டோபர், 16 ஆம் திகதி ஆங்கிலேயத் தளபதி பேனர்மென் ஆணைப்படி கயத்தாற்றில் தூக்கிலிடப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு... 16



.....இருந்தாலும் படம் நல்லா இருக்கு. முழுவதையும் பாத்துவிட்டு போகலாம் என்று உட்கார்ந்திருந்தார்கள். பலூனில் காற்றை இறக்கி விட்டு பாக்கெட்டில் போட்டுக் கொண்டார்கள்.

இடைவேளை முடிந்து படம் ஆரம்பம் ஆச்சு.

இரண்டு கதவையும் தள்ளி விட்டு ஒருவன் உள்ளே நுழைகிறான். தாடி-மீசை பழைய கோட் எங்கயோ பார்த்த முகம் மாதிரி இருக்கே என்று நண்பர்கள் நிமிர்ந்து உட்காருகிறார்.

கொஞ்ச நேரம் போனதும் அது நான்தான் என்பது தெரிகிறது. நண்பர்களுக்கு உற்சாகம் தாங்கவில்லை பலூனை எடுத்து ஊதி டப் டப் என்று உடைச்சாங்க.

அதே நேரத்தில் கமல்ஹாசனோட முகமும் திரையில் தெரியும். தியேட்டருக்கு வந்திருந்தவர்கள். கமல்ஹாசன் ரசிகர்கள்தான் பலூனை வெடிக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டார்கள். பெங்களூரில்கூட கமல்ஹாசனுக்கு இவ்வளவு ரசிகர்கள் இருக்கிறார்களே என்று ஆச்சரியப்பட்டாங்க. இவ்வாறு ரஜினிகாந்த் கூறியுள்ளார்.

## "நான்தான் கதாநாயகன்!" நண்பர்களிடம் ரஜினி விட்ட "ரீல்"

### 100 நாட்கள்

அபூர்வராகங்கள் சிக்கலான கதை. விக்கிரமாதித்தன் கதையில வேதாளம் போடும் விடுகதையை அடிப்படையாக வைத்து புது பாணியில் இதை பாலசந்தர் எழுதியிருந்தார்.

படத்தில் மேஜர் சுந்தர்ராஜன் அப்பா கமல்ஹாசன் மகன்.

கமல்ஹாசன் ஸ்ரீவித்யாவை காதலிக்க ஸ்ரீவித்யாவின் மகளான ஜெயசுதாவை மணக்க மேஜர் சுந்தராஜன் முடிவு செய்வார்.

படம் கிளைமாக்சை நெருங்கும் போது நான்தான் பைரவியின் (ஸ்ரீவித்யா) புருஷன் என்று சொல்லிக் கொண்டு ரஜினிகாந்த் திடும் பிரவேசமாக நுழையும்போது கதையில் பெரும் திருப்பம் ஏற்படும்.

இந்தக் கதையை மக்கள் ஏற்பார்களா? படம் ஓடுமா? என்று டைரக்டர் பாலசந்தர் உள்பட பலருக்கும் சந்தேகம் இருந்தது. எனினும் படம் மிகச் சிறப்பாக அமைந்திருந்ததால் நூறு நாட்களைக் கடந்து ஓடியது.



"சங்கர் சலீம் சைமன் படத்தில்" ரஜினி.

### கேடயம்

படத்தின் நூறாவது விழாவில் அன்றைய முதல் அமைச்சர் கருணாநிதி கலந்துகொண்டு படத்தில் பங்கு கொண்ட கலைஞர்களுக்கு கேடயங்கள் வழங்கினார். அவர் வேறொரு முக்கிய நிகழ்ச்சிக்கு போக வேண்டியிருந்ததால் டைரக்டர் பாலசந்தர் கதாநாயகன் கமல்ஹாசன், கதாநாயகி ஸ்ரீவித்யா உட்பட சிலருக்கு மட்டும் கேடயங்களை வழங்கிவிட்டு அடுத்த நிகழ்ச்சிக்குப் போய் விட்டார். ரஜினிகாந்துக்கு மற்றவர்களுக்கும் ஏவி. எம் அதிபர் மெய்யப்ப செட்டியார்தான் கேடயங்களை வழங்கினார்.


முதல்வரிடம் கேடயங்கள் வாங்க முடியவில்லையே என்ற மனக்குறை ரஜினிக்கு நீண்ட காலம் இருந்தது. முத்து படத்தில் சிறப்பாக நடித்ததற்கான தமிழக அரசின் பரிசை கலைஞரிடம் பெற்றபோது அந்த மனக்குறை தீர்ந்தது.

கே. பாலசந்தர் டைரக்ட் செய்த மூன்று மூடிச்சு படத்தில் முக்கிய வேடம் ஏற்று நடித்தார் ரஜினி. அவர்கள் படத்தின் மூலம் நட்சத்திர அந்தஸ்து பெற்றார். அபூர்வ ராகங்கள் படம் வெளிவந்த பிறகும் ரஜினிக்கு புதிய படங்கள் எதுவும் புக் ஆகவில்லை.

(தொடரும்)

# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 38



...உழுது முடிச்சு மகளக் கட்டிப் புடிச்சு அவ அழுக நானும் ஒம் மகதான என்னியக் கட்டிப்புடிச்சு அழுக மாட்டியான்னு பசுமாடு ஒரு பார்வ பாக்க ரெண்டு மகள்களையும் கட்டிப் புடிச்சு நான் பெறந்த நேரம்தான் நல்லால்ல. நீ பெறந்த நேரமும் நிம்மதியில்லையேன்னு காடு தீப்புடிக்கக் கத்தி அழுகிறா பெரியமூக்கி.

இந்த வேதனையைக் காணப் பொறுக்காம நெஞ்சப்புடிச்சுக்கிட்டே மலைக்குப் பின்னால போயி விழுகுது சூரியன்.

ஊருக்கே தெரியுது கட்டையன் ஆளுக பெரியமூக்கி ஒழவு காட்டுல ஏர்மாடுகள மறிச்சுத் தும்புரிச்சு விட்டதும்; ஆத்தாளும் மகளுமா உழுது அழுது வந்ததும். பாவிப்பய இன்னும் என்னென்ன வேசங்காட்டி வெளியேறப் போறானோன்னு ஊரு பதறுது.

இதவிடப்படாது; உருமாப்பெருமாத் தேவருக்கிட்டயும் சுப்பஞ்செட்டி கிட்டயும் ஒப்பிக்க வேண்டியதுதான்.

கூழ்ச் சட்யில புடிச்ச அடிக்கறுப்ப காக்காச் சிப்பிய வச்சு சொர்று சொர்றுன்னு சொரண்டிக்கிட்டே பெரியமூக்கி யோசிக்கறப்ப நேத்து வெதச்ச ஒழவுக்காடு பாக்கப் போயிருந்த கொண்ணவாயன் ஒரு மாதிரி கலவரத்தோட ஓடிவர்றான் தவிப்படங்காமப் பேசறான் மூச்சு வாங்கிக்கிட்டே.

பே... பே... பே... பெரியாத்தா... ஊ.. ஊ... ஊ... ஊர் காடுக எல்லாம் நெ... நெ... நெ.. நெருக்கி மொழைச்சிருக்கு. நம்ம காடு மட்டும் அ.. அ.. அ... அங் கொண்ணும் இ.. இ... இ... இங் கொண்ணுமா மொளைச்சிருக்கு.. விட்டா அழுதிருவான் போலருக்கு.

கெக்கக் கெக்கக் கெக் கேன்னு சிரிக்கிறா பெரிய மூக்கி.

ரொம்ப நாளைக்கப்பறம் ஆத்தா சிரிக்கிறாளேன்னு அண்ணாந்து பாக்குறா கொட்டத்துல வெளக்கமாற வச்சுக் சாணியோட சண்ட புடிச்சுக்கிட்டிக்கிற கருவாச்சி. தண்ணி குடிச்ச பசுவும் பாக்குது தலையத் தூக்கி. பெரியமூக்கி சொல்றா; வெதைச்சு வீடு வந்தா விடிய்ய மொளைச்சிருமா ஒழவுக்காடு? அதுக்கு ஒரு கணக்கு இருக்குடா மகனே! ஏழுநாளு ஆகும் மொச்சையும் தட்டாம் பயிறும் மொளைக்க.



கல்லுப் பயிறும் சோளமும் மொளைக்க நாலுநாள் ஆகும். மூணு நாள் ஆகும் எள்ளு மொளைக்க. காணப் பயிறு ஒண்ணுதாண்டா ஒரே ராத்திரியில் மண்ணுக்குள்ள மலந்துவிடிய்ய மொளைச்சிருக்கும். நீ காணப்பயிறு மொளைச்சத மட்டும் பாத்துட்டு வந்திருக்கடா கேணப்பயலே. போடா! போயி வேலையப் பாரு... இந்தாத்தா கருவாச்சி! கும்பாவுல கூழு ஊத்தி வச்சிருக்ககேன். கொண்ணவாயனுக்கு.

பாவம்.. ஒரு பட்டமொளகா இருந்தாச் சுட்டுக்குடு. பெருமாத்தேவர் வீடு வரைக்கும் ஒரு எட்டுப் போயிட்டு வந்திடுறேன். உருமாப்பெருமாத் தேவரும் சுப்பஞ்செட்டியாரும் பொடி நடையா பொழுசாயப் போனப்ப மேல் குளிச்சுக்கிட்டிருந்தாரு சடையத் தேவர்.

வெது வெதுங்குற வெந்நி வெளாவிகைக்கு வாட்டமா அண்டாவ ஒரல்ல தூக்கிவச்சு ஒசரம் பண்ணி குளிக்கையில ஒரு அலுப்பு வந்ததுன்னா ஒக்காந்து அழுக்குத் தேய்க்க ஒரு தலப்பலகையும் வாசல்ல போட்டு முன் அண்ணாக்கயித்துல சொருகுன கோவணத்த இழுத்துப் பின் அண்ணாக் கயித்துல சொருகிக்கிட்டே வாங்கப்பன்னாரு. அவரு சொருகறதுல தப்புக்கிப்பு வந்துடக்கூடாதுன்னு சாமியக் கும்பிட்டுக்கிட்டு வாறோம்னாங்க ரெண்டுபேரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் -31

## கல்மடுநகர் தொழில்நுட்ப கிராமமாக முனைப்புப் பெற முயல்கிறது!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இனிய 2015ஆம் ஆண்டை இனிதே வரவேற்றிருக்கின்றோம்! இனியொரு பசுமைப்புரட்சிக்கு இன்னும் வேலை அதிகரித்திருக்கின்றது. சொன்னதை செய்து காட்டும் களமாக இக்கட்டுரை அமைகின்றது. கல்மடு எனும் விவசாய கிராமம் தொழில்நுட்ப கிராமமாக முனைப்புப்பெற எழுதும் இக்கைகளின் வாழ்த்துக்கள்! ஒரு வருடத்தில் என்னவெல்லாம் செய்யலாம் என்பதை செய்து காட்டும் களமாக கல்மடு நகர் கிராமத்தை காணப்போகின்றோம்.

ஒரு நாட்டின் அபிவிருத்தி அதிலுள்ள கிராமங்களின் உயர்ச்சியிலேயே தங்கியிருக்கின்றது. இன்னும் ஒருபடி மேல்நின்று நோக்கினால் கிராமங்கள்தான் நாட்டின் முதுகெலும்பு என்பதாகும். கட்டடமொன்றின் வலுவுக்கு அத்திவாரமும் அதன் அமைப்பிற்கு அதில் வைத்து கட்டப்படும் செங்கற்களும் முக்கியமானவையாகும். நாட்டின் அத்திவாரம் அங்குள்ள வளங்கள்தான். வடபகுதியின் வளங்களாக விவசாயம், கால்நடை, மீன்பிடி என நாம் கணிப்பிட்டாலும் இதனுடன் சேர்த்து மனித வளமும் முக்கியமானதாகும். மக்களின்றி நாடேது. அதிலும் நன்மக்களின்றி சிறப்பேது. இங்கே குறிப்பிட்ட அத்திவாரத்துடன் நாட்டிற்கு அழகு சேர்ப்பது அதிலுள்ள கிராமங்களின் அபிவிருத்தியேயாகும். 'குடியுயர கோன் உயர்வான்' என்பதில் குடியென்பது கிராமத்தையும் கோன் எனப்படுவது ஆட்சியிலிருப்பவர்களையும் சுட்டி நிற்கின்றது. ஆட்சியிலிருப்பவர்கள் நல்லாட்சி செய்பவர்களாயிருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் காழ்ப்புணர்ச்சியுடன் கதிரையைப் பிடித்து அவசரப்பட்டு அதிலேறியமர்ந்து நல்லாட்சி என்பதை எப்படி செய்யமுடியும். கதிரையானது திரை போட்டு கரை காண்பதாக இருக்ககூடாது. அனைத்தும், அதாவது சொல்லும் செயலும் வெளிப்படையாக (Transparent) இருக்க வேண்டும். இவ்வாறான நல்லாட்சியில் கிராமங்கள் தாமாகவே வளர்ச்சி கண்டு வலுப்பெற வாய்ப்பு கிடைக்கும். கிராமத்து மக்களை சரியாக வழிநடத்தி அவர்களுக்கான தேவைகளை நிறைவேற்றும் போது கிராமம் தன்னுடைய பலங்கொண்டு உயர்ந்தெழும். தனது கால்களில் நின்று தன்னுடைய வளங்களை இனங்கண்டு அதன்மூலம் சரியானதும் ஏற்புடையதுமான தொழிற்றுறையினூடு பயணிக்க விருப்புக்கொள்ள வேண்டும். இதற்கு கற்றறிந்தவர்கள், களமறிந்தவர்கள் (அதாவது அனுபவசாலிகள்), இன்னும் கிராமத்தவர்கள் அனைவரும் ஒன்றிணைய வேணடும். இது ஒரு நீண்டநாள் கனவாக அனைவரிடத்திலும் காண முடிந்தாலும் எதை எங்கு ஆரம்பிப்பது என்பதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. கல்மடு கிராமம் தனது ஊக்கத்தினாலும் விடாமுயற்சியினாலும் முன்னோக்கி உயர்ந்தெழ வழி தேடிக்கொண்டிருக்கின்றது. கிராமத்து மக்களில் துடிப்பானவர்களை காணமுடிகின்றது. இளைஞர்கள், யுவதிகள், வயதானவர்கள், அனுபவசாலிகள், பெண்கள் என பலரும் பலதொழிற்றுறைக்குள் தம்மை உள்வாங்கத் துடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

வாருங்கள் எம்மினிய உறவுகளே! இக்கிராமத்தை நாமெல்லோரும் இணைந்து தத்தெடுத்துக் கொள்வோம். **குடியுயர கோன் உயர்வான** என்பதை நிரூபிக்கும் காலமாக 2015 அமையப்போகின்றது. எவ்வளவு தான் எழுதினாலும் அதனை செய்து காட்டுவதிலேயே எங்களின் வெற்றி தங்கியிருக்கின்றது. வாய்ச் சொல்லில் வீரரடி என வீம்பு பேசிக் கொண்டிருக்காமல் கல்மடு கிராமத்தை தொழில்நுட்ப கிராமமாக மாற்றிக்காட்டுவோம். இந்த வெற்றி மற்றைய கிராமங்களை முன்னேற்றுவதற்கு பெரிதும் உதவியாகவிருக்கும்.

கிராமத்தை தத்தெடுக்கும் போது நாம் செய்ய வேண்டியதென்ன என்பதைப்பற்றி இங்கே குறித்துக்கொள்ள விரும்புகின்றேன். கிராமத்தின் வளம், அதனது அமைவிடம், அதிலுள்ள குறிப்பிடத்தக்க அம்சங்கள், கிராமத்தின் பலம், அதிலுள்ள பிரச்சினைகள் அதாவது பலவீனம், மாற்றத்தை விரும்பும் மக்கள், மாற்றத்திற்கான சாத்தியம் அதாவது கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் மற்றும் இவ் அபிவிருத்திக்கான எதிர்ப்புக்கள் அல்லது தடைகள் என பலவற்றை நாம் அறிந்து அலசிப்பார்க்க வேண்டும். இங்கே வளமென்னும் போது கிராமத்திலுள்ள பௌதீக வளம் முக்கியமானது. அதாவது நிலம், நீர், வனம், போக்குவரத்து வசதிகள், இடவசதிகள் என்பனவற்றை குறிப்பிடலாம். இங்கே இன்னொரு வளம் முக்கியமானது. அதுதான் மனித வளம். மனித வளத்தின் தன்மை மற்றும் நிலை பற்றியும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். கல்மடு நகர் எனும் கிராமம் முழுவதுமாக உயர்ச்சி பெற முனைப்பாக இருக்கின்றது என்னும் செய்தியை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். மக்களின் ஒத்துழைப்பும், ஆர்வமும், தன்னம்பிக்கையும், கடின உழைப்பும் இங்கே முக்கியமானதாகும். கல்மடு கிராமம் தானாகவே உயர்வு பெற வேண்டும். அவர்களுக்கு தேவையான ஆலோசனைகளை புலமை வாய்ந்தவர்களை வருவித்து, அவர்களின் ஆலோசனையை பெற்று திட்டமிடல் வேண்டும். இதற்காக கல்மடு கிராமத்தில் நடைமுறை கட்டமைப்பு ஒன்று தேவை. அது கிராம அபிவிருத்தி சபையாகவோ அல்லது அபிவிருத்திக்கான சங்கமாகவோ இருக்கலாம். நிதியை சிறப்பாக கை யாள, திட்டத்தை சிறப்பாக வரை ந்து அதனை மக்களின் ஒத்து ழைப்புடன் செய்ய இன்னும் பல புலமையாளர்களின் கவனத்தை தன்னகத்தே திசைதிருப்பி, எண்ணத்தை உள்வாங்கும் சிறப்புடைய குழுவாக இதனை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். கிராமத்து இளைஞர் ,யுவதிகளை இதில் உள்வாங்கலாம். அத்துடன் அனுபவம் வாய்ந்த முதியவர்களையும் நிச்சயம் இணைத்துக்கொள்ள வேணடும். ஏனெனில் அனுபவம் தான் இன்னொரு கல்விச்சாலை. இளையோரின் துடிப்புக்கு கிடைக்கும் சவாலாக இதனை நாம் பார்க்கலாம். கல்மடு நகரில் மூலிகைக்கிராமம் அமைய விருப்பது இன்னொரு சிறப்பும் கூட. பல தொழிற்றுறைகளை உள்வாங்கிய பல உலகத் தரம் வாய்ந்த பொருட்களை கல்மடு நகரின் அடையாளத்துடன் உற்பத்தி செய்யும் கிராமமாக இதனை மாற்றியமைக்க வேண்டும். கல்மடு நகர் தனக்கு தேவையான சக்தியை தனது கிராமத்து வளத்திலிருந்தே பெற வேண்டும். சூரிய சக்தி, காற்று சக்தி, உயிர்ச்சத்தி என பலவகைகளை ஒன்றாக இயக்கி தனக்கு தேவையான சக்தியை பெற்றுக்கொள்ள வழிசமைத்தல் வேண்டும். எழுத்தில்,ஏட்டில் இல்லாவிட்டாலும் மனதில் இன்னும் எண்ணத்தில் கல்மடு தொழில்நுட்ப கிராமம் என நாம் வரித்துக்கொள்ள வேண்டும். முயன்றால் முயற்சி செய்தால் எதுவும் இல்லை என்பதற்கு கல்மடு தொழில்நுட்ப கிராமம் முன்மாதிரியாக திகழும் என எதிர்பார்க்கலாம்.

**இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XIX**

கல்மடு நகர் நாம் நினைத்தது போல தொழில்நுட்ப கிராமமாக மாறும் போது அது ஏனைய கிராமங்களுக்கு முன்னுதாரணமாக திகழும். திகழவேண்டும். இதுவே எதிர்பார்ப்பு. குறிப்பாக வடபகுதி மீண்டெழுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் இது போன்றதொரு திட்டத்தினுள் நாம் எம்மை முழுமையாக உள்வாங்கிக்கொள்ள வேண்டும். தொழில்நுட்ப கிராமமாக மாற்றம் பெறும் போதும் இயற்கையை அனுசரித்த இயற்கையுடன் வாழும் வாழ்க்கையை நாம் மாற்றியமைக்க கூடாது. சூழலுக்கியைவான தொழில நுட்பங்களையே நாம் இத் தொழில நுட்ப கிராமத்தில் உள்வாங்க முனைகின்றோம். முன்மாதிரியான கிராமம் என்பதன் அர்த்தம் அதுவே. இன்னொரு பசுமைப்புரட்சியில் இவ்வாறான கிராமங்களின் புத்துணர்ச்சியே அத்திவாரமாக காணலாம். மக்களை ஊக்குவித்து மக்களால் அபிவிருத்தியை செய்து காட்ட வேண்டும். மக்களின் முழுமையான பங்களிப்பு என்பது இங்கே மிகமுக்கியமானதாகும்.

மக்களின் கல்வியறிவு, தொழில்நுட்ப அறிவு, தொழில்நுட்ப அனுவபம், அதற்கான தொழில்நுட்ப உதவி என்பனவற்றை நாம் மிக முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டும்.

இதற்காக கல்மடு கிராமத்து மக்களை தயார்ப்படுத்த வேண்டும். அவர்களின் கல்வியறிவை கருத்திலெடுத்து இலகுவாக தொழில்நுட்பத்தை அவர்கள் பயன்படுத்த மக்களை தயார்ப்படுத்த வேண்டும். இதற்காக திட்ட முன்மொழிவு ஒன்று தயார்ப்படுத்தப்படவேண்டும்.

மக்களின் விருப்பறிந்து இத்திட்டத்தினை உருவாக்கி அதனை அவர்கள் மூலமாக நடைமுறைப்படுதத வேண்டும். இதற்கு அனைத்து மக்களினதும் ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியம். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பதை மெய்ப்பிப்பதற்கான எமக்கொரு சந்தர்ப்பம் இது.

# ஒப்பந்தம் கைச்சாத்திடும் அவசியம் எமக்கு இல்லை

## ஜே.வி.பி. மறுப்பு

**பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் ஒப்பந்தம் கைச்சாத்திட வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது என ஜே.வி.பி. கட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ப்ங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.**

வங்குரோத்து அடைந்துள்ள அரசாங்கம் பல்வேறு மாதிரியான நடிகர்களை இறக்குமதி செய்கின்றது.

ஒரு வேளை சல்மான்கான் மற்றுமொரு வேளை ஜாக்லீன் மற்றுமொரு வேளை குமார் குணரட்னம் போன்ற நடிகர்களை அரசாங்கம் பிரசாரத்திற்காக இறக்குமதி செய்கின்றது.

ஜே.வி.பி. கட்சி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு தரப்புடனும் இரகசிய உடன்படிக்கை கைச்சாத்திட்டதில்லை.



மைத்திரிபால சிறிசேனவுடன் இரகசிய உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டிய அவசியமும் கிடையாது.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டுமாயின் அவை பகிரங்கமாகவே செய்யப்படும்.

அரசாங்கம் விழுந்துள்ள குழியிலிருந்து மீள்வதற்கு எந்தவொரு இழி செயலையும் செய்யத் தயங்குவதில்லை. ஒவ்வொரு விதமான நபர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதன் நோக்கம் எதற்காக என்பதனை மக்கள் அறிவார்கள்.

குமார் குணரட்னம் நாட்டை விட்டு எப்படிச் சென்றார், நாட்டுக்குள் எப்படி வந்தார் என்பதனை பார்த்தால் அவர் அரசாங்கத்தின் தேவைகளை பூர்த்தி செய்கின்றார் என்பது தெளிவாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## ஒருங்கிணைந்த ஆட்சி வேண்டாம்

வடக்கு - கிழக்கு ஒன் றி ணைந்த ஆட்சி என்ற கோரிக்கையை முன்வைக்க தமது கட்சிக்கு எந்தவொரு தேவையும் இல்லை எனவும், தமக்குத் தேவை நல்லாட்சியே என முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திடம் இருந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவது தமது கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்கப் போவதாக தீர்மானித்தமையினாலேயே எனவும் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் இருந்து விலகியதன் பின்னர், பல்வேறு பொய்யான குற்றச்சாட்டுக்கள் தம்மீது சுமத்தப்படுவதாகவும் ரவூப் ஹக்கீம் இதன்போது மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் டைட்டானிக் கப்பல் மூழ்கிக் கொண்டிருக்கிறது

## ரணில் தெரிவிப்பு

**இளைஞர்கள் டைட்டானிக் படத்தைப் பார்த்திருப்பார்கள். ஒரு போதும் மூழ்காது என்று கருதப்பட்ட டைட்டானிக் கப்பல் தனது கன்னிப் பயணத்திலேயே மூழ்கியது. மகிந்த ராஜபக்ஷ வின் மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் பயணமும் டைட்டானிக் கப்பல் போன்று மூழ்கப் போகிறது. மூழ்கிக் கொண்டிருக்கும் அந்தக் கப்பலில் இருந்து புத்திசாலிகள் வெளியேறிக் கொண் டிருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கப்பலில் இருந்து பாய்ந்து எங்கள் பக்கம் வந்து கொண்டிருக்கிறார்கள் என்று எதிர்க்கட்சி த்தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.**

பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசே னவை ஆதரித்து நேற்று முன்தினம வியாழக்கிழமை நீர்கொழும்பில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண டவாறு தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது கட்சியின் நீர்கொழும்பு அமைப்பாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான ரொயிஸ் விஜித பெர்னாந்துவுக்கு இந்த அரசாங்கம் பயந்து சிறையில் அடைத்தது. அதற்கான பதிலை இந்த தேர்தலில் நீர்கொழும்பு மக்கள் வழங்குவார்கள்.

ராஜபக்ஷ அரசாங்கத்தினால் மீனவர்களும் ஏழை எளிய மக்க ளும் அதிகம் பாதிக்கப்பட்டு ள்ளா ர்கள். எமது ஆட்சியின் கீழ் வெளி நாட்டு படகுகள் இலங்கை கடல் எல்லையில் மீன் பிடிப்பது முற் றாகத் தடை செய்யப்படும். நீர் கொழும்பில் மீனவத் துறைமுகம் அமைக்கப்படும். நாங்கள் குறுகிய காலத்தில் மக்களுக்கு நிவாரண ங்களை வழங்கவுள்ளோம். சிறிய அளவில் கடன் பெற்றுள்ளவர்க ளுக்கும் வங்கிகளில் நகைகளை அடகு வைத்துள்ளவர்களுக்கும் நிவாரணங்கள் வழங்கப்படவுள்ளன. அரசாங்க ஊழியர்களுக்கு முதற் கட்டமாக பெப்ரவரி மாதம் ஐயாயி ரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்ப டும். பத்து இலட்சம் சுய வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படும். மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக களிப்பதே ஏழை மக்கள் வாழ்வத ற்கான ஒரே வழியாகும் என அவர் மேலும் தெரிவித்ததார். (இ-5)

# பொது எதிரணியிடம் இருந்து குறைந்தளவு ஜனநாயகத்தைக்கூட எதிர்பார்க்க முடியாது

பொது எதிர்க்கட்சியில் குறைந்த ளவு ஜனநாயகத்தைக்கூட எதிர் பார்க்க முடியாது என முன்னிலை சோஷலிசக் கட்சியின் அரசியல்குழு உறுப்பினர் குமார் குணரத்னம் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியா வில் இருந்து நேற்று முன்தினம் அதிகாலை நாடு திரும்பிய அவர், கொழும்பில் மாலை நடத்திய ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கை யில், மகிந்த ராஜபக்ஷவின் அர சாங்கத்துக்கு பதிலாக மைத்தி ரபாலவின் அரசாங்கத்தை கொண்டு வருவது என்பது, இலங்கையில் எரிந்து கொண்டிருக்கும் பிரச்சி னைகளுக்கு தற்காலிக நிவாரணமா கவே இருக்கும். மனித உரிமைக்காக அன்று பேரணி சென்ற மகிந்த ராஜபக்ஷ இன்று என்ன செய்கிறார்? பிரதான வேட்பாளர்கள் இருவரும் தேசிய பிரச்சினையை மறந்துள்ள னர். தமிழ்த்தேசியக் கூட்டமைப் பும் தேசியப் பிரச்சினையை காட்டிக் கொடுத்துள்ளது என்று குமார் குண ரத்னம் தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 300 |
| தக்காளி | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 120 | 120 | 120 |
| கரட் | 180 | 200 | 200 |
| பூசணி | 40 | 50 | 60 |
| புடோல் | 140 | 120 | 140 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம | 110 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 140 |
| பாகற்காய் | 350 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 240 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 280 | 240 | 220 |
| லீக்ஸ் | 300 | 250 | 320 |
| பீற்றூட் | 150 | - | 200 |
| கறிமிளகாய் | 350 | 300 | 250 |
| முருங்கைக்காய் | - | - | - |
| போஞ்சி | 260 | 240 | 240 |
| கத்தரிதம்புள்ள | 220 | 180 | 200 |
| கீரை - 1 பிடி | 30 | 60 | - |
| தேசிக்காய் | 100 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 40-50 |
| இராசவள்ளி | 130 | - | 120 |





நிஸ் கிரி





கீர்த்து கரன்




சக்தி வேல்




சியா சியாமினி





திலிபரன் தயீகன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பிரசாரத்தில் போர்க்குற்றங்கள்




எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களினதும், தேர்தல் அறிக்கைகளில் போர்க்குற்றங்கள் என்ற விவகாரத்துக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

முன்னர் போர்க்குற்றங்கள் என்று வெளிப்படையாகப் பேசுவதற்கு, அது ஆளும் தரப்பாக இருந்தாலும் சரி, எதிர்த் தரப்பாக இருந்தாலும் சரி, அச்சமான ஒரு சூழ்நிலையே நிலவியது. அதுபற்றி யாரும் அதிகம் பேசுவதும் இல்லை, பேச முற்படுவதும் இல்லை.

அதுபற்றி பேச முனைந்தால், தாம் சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடலாம், தமது கருத்து திரிபுபடுத்தப்படலாம் என்றே கொழும்பு அரசியல் மட்டத்தில் இருப்பவர்களால் பார்க்கப்பட்டது.

ஆனால், இப்போது போர்க்குற்றங்கள் குறித்து, தேர்தல் அறிக்கைகளில் பிரதான வேட்பாளர்கள் வாக்குறுதிகளை வழங்குகின்ற அளவுக்கு நிலைமை மாறிளயுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் ஐந்தரை ஆண்டுகளுக்கு முன்னர், முடிவுக்கு வந்த போதுதான், போர்க்குற்றங்கள் என்ற விவகாரம், இலங்கையில் சூடுபிடிக்கத் தொடங்கியிருந்தது.

போருக்குப் பிந்திய ஐந்தரை ஆண்டு காலத்தில் இந்த விவகாரம் எல்லாத் தரப்பு மக்களிடையேயும் ஊடறுத்து விட்ட ஒன்றாக மாறியிருக்கிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், அவரது அரசாங்கமும், தாம் தமிழ் மக்களுக்கு எதிராகப் போரை நடத்தவில்லை என்றும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே போரை நடத்தியதாகவும் கூறிவந்தாலும், இந்தப் போரின்போது போர் நியதிகளை மீறி ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர் என்பது மறைக்க முடியாத உண்மையாகும்.

படையினர் ஒரு கையைக் கட்டிவிட்டே போர் புரிந்தனர் என்றும் எந்தப் போர்க்குற்ற மீறல்களிலும் அவர்கள் ஈடுபடவில்லை என்றும் ஆரம்பத்தில் கூறிய அரசாங்கம், பின்னர் ஒரு கட்டத்தில் போரில் சில பொதுமக்களும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சமாளிக்கப் பார்த்தது. ஆனால், சர்வதேச சமூகம் விடுவதாக இல்லை. தொடர்ந்து கொடுக்கப்பட்ட அழுத் தங்களினால், முதலில் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இதையடுத்து, அதன் பரிந்துரையின் பேரில் காணாமற்போனோர் குறித்து விசா ரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. கடந்த ஜுலை மாதம் போர்க்குற்றங்கள் குறித்தும் விசாரிக்கும்படி, காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு புதிய ஆணையும் வழங்கப்பட்டது. ஆனாலும், சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்தும் வகையிலான நம்பகமான, உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்தத் தவறியிருந்தது.

அரசாங்கத்துக்கு கொடுக்கப்பட்ட கால அவகாசத்துக்குள் நம்பகமான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படாததால்தான், இப்பொழுது ஐ.நா நேரடியாகவே விசாரணை நடத்தும் நிலை உருவானது. ஐ.நா நடத்தும் விசாரணையின் அறி க்கை வரும் மார்ச் 25 ஆம் திகதி ஜெனிவாவில் நடக்கவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் முன்வைக்கப்படவுள்ளது.

இந்த நிலையில்தான், இரண்டு பிரதான வேட்பாளர்களுமே போர்க்குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிப்பது குறித்த தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக்காலத்தில் எதிர்கொண்ட முக்கிய சவால் போர்க்குற்றச்சாட்டுகள்தான்.

இந்த சவால் எதிர்கொள்ளவும், சமாளிக்கவும், அரசாங்கம் பெரும் பாடுபட வேண்டியிருந்தது. பல்வேறு நாடுகளின் கால்களில் விழுந்து ஆதரவு கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டது. என்றாலும், ஜெனீவாவில், அரசாங்கம் தோல்வியைத்தான் தழுவியது.

ஒருகால கட்டத்தில், போர்க்குற்றங்கள் நிகழவேயில்லை என்று அடித்துக்கூறிய அரசாங்கம் இப்போது, நடந்திருக்கலாம் என்றளவுக்கு தனது நிலையை மாற்றிக் கொண்டிருக்கிறது என்றால் சர்வதேச அளவில் கொடுக்கப்பட்ட அழுத்தங்களும், முன் வைக்கப்பட்ட ஆதாரங்களும்தான் அதற்குக் காரணம்.

அரசாங்கத் தரப்பு, தனது ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்துக்கு, போர் வெற்றியையும் அதன் விளைவான போர்க்குற்றச்சாட்டுகளையும் பயன்படுத்தி வருகிறது.

தம்மை தோற்கடித்துவிட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வதற்கு உள நாட்டு, வெளிநாட்டு சக்திகள் சதி செய்வதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரசார மேடைகளில் அனுதாபம் தேடி வருகிறார்.

ஒரு பக்கத்தில போர் வெற்றியைக் காட்டி சிங்கள மக்களை உசுப்பேற்றும் அரசாங்கம் மறுபக்கத்தில் அந்த வெற்றியைத் தேடித் தந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மின்சார நாற்காலிக்கு அனுப்ப சூழ்ச்சி செய்யப்படுவதாகவும் கூறி வருகிறது.

இத்தகைய கட்டத்தில், அடுத்த ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் சக்தியாக, போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களும் இருக்கின்றனர். போர்க்குற்றம் சாட்டப்படும் படையினரும், அவர்களின் உறவினர்களும் இருக்கின்றனர்.

இந்த இரண்டு தரப்பினருக்கிடையிலும் போர்க்குற்றங்கள் குறித்து நிலைப்பாடுகளை வெளிப்படுத்த வேண்டிய நிலை இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அதனால்தான் தமது தேர்தல் அறிக்கைகளில் போர்க்குற்றங்களுக்கு தாம் எவ்வாறு பதிலளிப்போம் என்று அவர்கள் கூறியிருக்கன்றனர். என்றாலும், இரண்டு பேரினது அணுகு முறைகளிலும், வாக்குறுதிகளும் பெரியள விலான வேறுபாடுகள் எதையும் காண முடியவில்லை.

மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் அறிக்கையில், சர்வதேச விசாரணைக்கு அனுமதி அளிக்க முடியாது என்றும் உள்நாட்டில் நம்பகமான விசாரணை நடத்தப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கையில், சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க மாட்டேன் என்றும் உள்நாட்டு விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த இரண்டு பேரினதும் வாக்குறுதிகளில் ஒரு மென்போக்குத் தன்மையே இருக்கிறது. தெளிவாக எதையும் வரையறுக்கவோ விளக்கமளிக்க முற்படவோ இல்லை. ஏனென்றால், இந்த விடயத்தில் ஆழமாக இறங்கி வாக்குறுதிகளை கொடுக்க முனைந்தால் அது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்ற அச்சம் இருதரப்பினருக்குமே உள்ளது.

படையினர் மீதான போர்க்குற்றச்சாட்டுகள் உறுதி செய்யப்பட்டால், அது குறித்து விசாரிக்க உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவேன் என்று மைத்திரிபால கூறியிருப்பதில் ஆச்சரியமில்லை.

அவர் இப்போது எந்த அதிகாரத்திலும் இல்லை. பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டிய நில்லயிலும் இருந்திருக்கவில்லை. ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரையில் நிலைமை அவ்வாறாக இல்லை. அவர் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக இந்த சிக்கலை எதிர்கொண்டு வருகிறார்.

சர்வதேச அழுத்தங்களுக்கும், படையினரைப் பாதுகாக்கும் கடப்பாட்டுக்குமிடையில் அவர் போராட்டம் ஒன்றை நடத்த வேண்டியிருக்கிறது. இந்த விடயத்தில் தெளிவானதொரு நிலைப்பாட்டை எடுக்க முடியாதிருப்பதற்கு இதுவே காரணம்.

சர்வதேச சமூகம் அரசாங்கத்தின் கழுத்தைப் பிடித்து இறுக்குவதை அரசாங்கம் எப்போதோ தடுத்திருக்கலாம். இப்போது நம்பகமான உள்நாட்டு விசாரணை ஒன்றை மேற்கொள்ளப் போவதாக உறுதியளித்திருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதனை இந்த ஆண்டின் தொடக்கத்திலாவது செய்திருக்கலாம்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஐ.நா மனித உரிமைகள் பேரவைத் தீர்மானங்கள், நம்பகமான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை ஒன்றைத்தான் கோரி வந்தனவே தவிர, சர்வதேச விசாரணையை அல்ல.

அந்தக் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்ததால்தான், இப்போது ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்படும் நிலை உருவானது.

இந்த விசாரணையின் அறிக்கை தயாரிப்பு பணிகள் ஆரம்பமாகியுள்ள நிலையில்தான், அரசாங்கம் புதிய விசாரணைகளை மேற்கொள்ளப் போவதாக வாக்குறுதி அளித்துள்ளது. அவ்வாறாயின், ஏற்கனவே தொடங்கப்பட்ட விசாரணைகளின் நிலை என்ன என்ற கேள்வி எழுந்திருந்தாலும், அதற்கான அரசாங்கத்தின் பதில் ஏதுமில்லை.

தேர்தலுக்குப் பின்னர் இந்த வாக்குறுதி எவ்வாறு நிறைவேற்றப்படும் என்பதும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

எவ்வாறாயினும், சர்வதேச அழுத்தங்கள் போர்க்குற்றங்கள் குறித்த இலங்கையின் பிரதான அரசியல் சக்திகளின் நிலைப்பாடுகளில் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது, என்பதை மறுக்க முடியாது.

இப்போது போர்க்குற்றங்கள் குறித்து உள்நாட்டு விசாரணையை மேற்கொள்ளத் தயார் என்று பகிரங்கமாக வாக்குறுதி கொடுக்கும் அளவுக்கு பிரதான வேட்பாளர்களை கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

இந்த வாக்குறுதிகளைத் தனியே, உள்நாட்டு வாக்காளர்களுக்காக வழங்கப்பட்டதாக மட்டும் எடுத்துக் கொள்ளமுடியாது.

வெளிநாடுகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதியாகவே கருதலாம். பொறுப்புக் கூறல் விவகாரத்தில் பிரதான வேட்பாளர்களின் நிலைப்பாடு என்ன என்பதை, சர்வதேச சமூகம் முக்கியமாக எதிர்பார்க்கிறது.

அதனால்தான், இரண்டு பிரதான வேட்பாளர்களும் போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக்கூறும் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை குறித்த வாக்குறுதிகளுக்கே சர்வதேச ஊடகங்கள் முக்கியத்துவம் அளித்திருந்தன.

இதன்மூலம் தம்மைத் தோற்கடிக்க சர்வதேச நாடுகள் திட்டங்கள் எதையும் முன்னெடுக்காமல் தடுக்க முடியும் என்றும் எதிர்பார்க்கப்பட்டிருக்கலாம். இரண்டு பிரதான வேட்பாளர்களில் ஒருவர் வெற்றி பெறப் போவது உறுதி.

இருவருமே சர்வதேச விசாரணையை நிராகரித்து விட்ட நிலையில், வெற்றி பெறப் போகிறவர் புதிய வாக்குறுதியை எவ்வாறு நிறைவேற்றப் போகிறார் என்பதை சர்வதேச சமூகம் நிச்சயம் எதிர்பார்க்கும். அதற்கு ஒரு கால அவகாசம் கொடுக்கப்பட்டாலும் ஆச்சரியமில்லை.


அதற்குள் எந்த முன்னேற்றமும் ஏற்படாவிட்டால், வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில்தான் ஏறும்.

–சுபத்ரா–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் பசியைத் தீர்க்க அரசாங்கம் தவறிவிட்டது

## ரத்னதேரர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

பாரிய சூதாட்ட நிறுவனங்களுக்கு நிவாரணங்களை வழங்கிய அரசாங்கம், சாதாரண மக்களின் உணவுத் தேவையை பூர்த்திசெய்யவில்லை என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

உலகின் மிகப் பிரபலமான சூதாட்ட நிறுவன சொந்தக்காரரான ஜேம்ஸ் பாக்கர் இலங்கையில் தமது நிறுவனத்தை ஆரம்பிக்க அரசாங்கம் சலுகைகளை வழங்கியுள்ளது.

ஆனால் எரிவாயு, பால்மா உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கான வரிகளை அதிகரித்து, மக்களை கண்டு கொள்ளாமல் விட்டுள்ளது. இதன் காரணமாகவே இந்த நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த தாங்கள் தீர்மானித்ததாக அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

# மைத்திரி ஏற்றார் மகிந்த மறுத்தார்

(கொழும்பு)

சிறந்த நிர்வாகம், ஊழல் ஒழிப்பு மற்றும் ஜனநாயகம் குறித்த விவாதம் ஒன்றுக்கு தம்மால் விடுக்கப்பட்ட அழைப்பை பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஏற்றுக்கொண்டுள்ளார் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்த விவாதத்துக்கான அழைப்பு கடந்த 22ஆம் திகதியன்று அனுப்பப்பட்டது.

இதன்படி விவாதம் எதிர்வரும் 5ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் திகதியை பொறுத்தவரை ஜனவரி 3 அல்லது 5 என்பதை தீர்மானிக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்கான அழைப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் இதுவரை ஜனாதிபதியிடம் இருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை என்று சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இருவரும் ஒரே இடத்தில் விவாதத்தில் ஈடுபட முடியாது போனால் ஸ்கைப் அல்லது செய்மதி இணைப்புக்களின் மூலம் விவாதத்தில் பங்கேற்க முடியும் என்றும் சங்கம் ஆலோசனை தெரிவித்திருந்தது.

இதேவேளை இந்த விவாதத்தில் தான் பங்கேற்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மகிந்த மறுப்பு தெரிவித்துள்ளார் என அறிய முடிகின்றது. (இ-5)

# பகிரங்கமாக கருத்துக்களை வெளியிட அஞ்சும் ஓர் துர்ப்பாக்கிய காலத்தில் நாம் வாழ்கின்றோம்

## அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட பகிரங்கமாக கருத்துக்களை வெளியிட அஞ்சும் ஓர் காலத்தில் நாம் வாழ்கின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் களனிய பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்று உரையாற்றிய போது இதனைக் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் கருத்துக்களை சுதந்திரமாக வெளியிட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இன்று விளையாட்டுத்துறை கடுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்திற்கு கிரிக்கெட் வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலைமை ஆரோக்கியமானதாகக் கருதப்பட முடியாது.

படையினரைக் கொண்டு இராணுவத் தளபதி மற்றும் ஜனாதிபதியானோர் போரை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

எனினும் நாட்டில் பேச்சு சுதந்திரம், ஊடக சுதந்திரம் இன்னமும் நிலைநாட்டப்படவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட மிகவும் இரகசியமாகவே பேசுகின்றனர்.

தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாக பிளவடைந்துள்ளது.

குற்றச் செயல்களில், ஊழல் மோசடிகளில் ஈடுபடும் ஓர் தரப்பினரும் அதற்கு எதிராக குரல் கொடுக்கும் தரப்பினரும் இவ்வாறு கட்சியில் இருக்கின்றார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மிகவும் நிதானமாக இம்முறை வாக்களிப்பில் பங்கேற்க வேண்டியது அவசியமானது.

நாட்டின் பல பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் தேர்தல் பிரசார பதாகைகள், பனர்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தங்களது தொழில் போய்விடும் அல்லது திடீர் இடமாற்றம் வழங்கப்படும் என்ற அச்சம் காரணமாக பொலிஸார் சட்டவிரோத தேர்தல் பிரசாரங்களை அகற்றுவதில்லை என அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். (இ-5)

# யுத்த வெற்றியை சித்திரிக்கும் படங்களை காண்பிப்பது விதிமுறைகளை மீறும் செயல்

தேர்தல் பரப்புரை நடவடிக்கையில் யுத்தவெற்றியை சித்திரிக்கும் படங்கள் காண்பிக்கப்படுவது தேர்தல் விதிமுறைகளை மீறும் செயல் என சட்டத்தரணிகள் சங்க தலைவர உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

யுத்தவெற்றியை சித்திரிக்கும் படங்கள் கொழும்பின் பல பகுதிகளில் அதிநவீன திரைகளில் காண்பிக்கப்பட்டிருகிறது. இந்த நடவடிக்கையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பரப்புரை பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். இதற்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதிநவீன டிஜிட்டல் திரைகளை இந்த படங்களை காண்பிப்பதற்காக பயன்படுத்துகின்றனர். அந்த விசேட டிஜிட்டல் திரைகள் ஒவ்வொன்றும் பல மில்லியன் ரூபாய்கள் பெறுமதியானவை.

அதில் யுத்த வெற்றியை குறிக்கும் படங்கள் மீண்டும் மீண்டும் காண்பிக்கப்படுகின்றன. இதை பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்க்கின்றனர். இது தேர்தல் விதிமுறைகளை மீறும் செயல் என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## உலகம் நல்லதா? கெட்டதா?

உலகம் ரொம்ப கெட்டுப் போச்சு சேர்; அந்தக் கால த்தில் எல்லாம் இது மாதிரி அக்கிரமம் நடக்குமா? என்று சொல்லி அலுத்துக் கொள்பவர்கள் உண்டு.

இந்த உலகம் ரொம்ப முன்னேறியிருக்கு சேர்; அடுத்த கிரகத்துக்கே போய் வீடு கட்டலாமா? என்று யோசிக்கும் அளவுக்கு வந்து விட்டோமே! என்ப வர்களும் உண்டு.

அது சரி! நியமாகவே இந்த உலகம் நல்லதா? கெட்டதா? கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங் கள். உங்களுக்கு ஏதாவது பதில் கிடைக்குதா?

அப்படி சரியாக ஒரு முடிவுக்கு வரவில்லையானால் அதற்காக கவலைப்பட வேண்டாம். வாங்க... இராம கிருஷ்ணரிடம் போவோம்.

அவர் இந்த கேள்விக்கு பதில் சொல்லியிருக்கிறார் ஒரு சின்னக்கதை மூலமாக! "இந்த உலகம் நல் லதா? கெட்டதா" என்று ஒரு பெரியவரை பார்த்துக் கேட்கிறார்.

அதற்கு அந்த பெரியவர் கேள்வி கேட்டவரையே நிமிர்ந்து பார்த்து,

"அதற்கு நான் பதில் சொல்கிறேன். அதற்கு முன் நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு பதில் சொல்" என்றார்.

"சரி கேளுங்க" என்றார் அவர்.

"பூனைக்கு பல் இருக்கே அது நல்லதா? கெட்டதா?" என்று கேட்டார் இவர்.

இதைக்கேட்டதும் அவர் குழம்ப ஆரம்பித்தார்.

என்னது? நாம உலகம் நல்லதா? கெட்டதா? என்று கேட்டோம் அதற்கு இவர் பூனையின் பல் நல்லதா? கெட்டதா? என்று நம்மிடமே திரும்ப கேட்கிறாரே! என்று யோசித்தார்.

இவருக்கு ஒன்றும் புரியவில்லை. அதன்பின் அந் தப் பெரியவர் அதற்கு விளக்கம் கொடுத்தார்.

ஒரு பூனைக்கு இருக்கிற பல் நல்லதா? கெட்டதா? என்று கேட்டால் என்ன பதில் வரும். யாரிடம் அந்த கேள்வியை கேட்கிறோமோ அதற்கு தகுந்த மாதிரிதான் பதில் வரும்."

பூனையின் பல் நல்லதா? கெட்டதா? என்று அந்த பூனைக் குட்டியிடம் கேட்டால் அது என்ன பதில் சொல்லும்.

"எங்க அம்மாவிடம் இருக்கிறது வெறும் பல் இல்லை. அது கருணையின் வடிவம். அந்த பல்லால் தான் எங்கம்மா என்னை கவ்வித் தூக்கிக் கொண்டு பாது காப்பான இடங்களுக்கு போவா. அது இல்லையென் றால் நான் இல்லை" என்று அந்த பூனைக்குட்டி பதில் சொல்லும்.

ஆனால் இதே கேள்வியை ஒரு எலியிடம் கேளுங்க அது என்ன சொல்லும் "பல்லா அது? யமன்!

கடவுள் பூனையை படைத்ததோடு விட்டிருக்கக் கூடாதா? அதற்கு பல்லையும் எதற்கு படைத்தான். கத்தூசி மாதிரி! அந்த பல்லின் கொடுமை என்ன என்பது கடிபடும் எனக்குத்தானே தெரியும்" என்று புலம்பும் எலி.

பூனையின் பல்லை குட்டிப்பூனை பார்க்கின்ற பார் வை ஒரு மாதிரி! எலி பார்க்கின்ற பார்வை ஒரு மாதிரி!

அதேமாதிரித்தான் இந்த உலகம் நல்லதா-கெட்டதா என்று கேட்டால்.. இந்த உலகத்தின் தன்மையை பார்கின்றவர்களை பொறுத்தது அது. இந்த உலகம் உள்ளவரைக்கும் இதை நல்லது என்று சொல் பவர்க ளும் இருப்பார்கள், கெட்டது என்றும் சொல் பவர்க ளும் இருப்பார்கள்.

எப்போதும் சந்தோஷமாக இருக்கின்ற இரண்டு பேர் சந்தித்துக்கொண்டார்கள்.

உங்கள் சந்தோஷத்துக்கு என்ன காரணம் என்று ஒருத்தரை ஒருத்தர் பார்த்து விசாரித்துக் கொண்டார்கள்.

"என் அத்தைமகள் என்னைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று உறுதியாக சொல்லி விட்டது. அது தான் நான் சந்தோஷமாக இருக்கிறேன்." என்றார் ஒருத்தர்.

"என்னுடைய அத்தைமகள் என்னை கல்யாணம் பண்ணிக் கொள்ளமாட்டேன் என்று உறுதியாக சொல்லி விட்டார். அது தான் நான் சந்தோஷமாக இருக்கிறேன்." என்றார் இன்னொருவர்.

**இரண்டும் இரண்டு விதமான பார்வை!**

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 76,000 பேர் படுகொலை

சிரியாவில் நடந்து வரும் மோதல்களில் கடந்த ஆண்டில் மட்டும் 76, 000 பேர் கொல்லப்பட்டதாக செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.சிரியாவில் உள்நாட்டுப் போர் 2011 ஆம் ஆண்டு துவங்கியதில் இருந்து இந்த அளவுக்கு உயிரிழப்பு வேறு எந்த ஆண்டிலும் ஏற்பட்டதில்லை. கொல்லப்பட்டவர்களில் கால்வாசிப் பேர் பொது மக்கள் என்று பிரிட்டனில் செயற்படும் அமைப்பான, சிரியாவின் மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.



கொல்லப்பட்ட பிறர், அரசப் படைகளையும், ஜிகாதி அமைப்புக்களையும், தீவிரவாத அமைப்புக்களையும் சேர்ந்தவர்கள்.

அரசாங்க எதிர்ப்பு போராட்டமாக சிரியாவில் ஆரம்பித்த விடயம் சிறிது காலத்திலேயே உள்நாட்டுப் போராக மாறியது. இப்போரில் இதுவரை இரண்டு இலட்சம் பேர் இறந்துவிட்டனர். தொடர்ந்து நடக்கும் வன்செயல்களால் பலர் தம்முடைய வீடுகளை இழந்து, அண்டை நாடுகளில் தஞ்சம் கோரியுள்ளனர்.

இருதரப்பும் மனித உரிமைச் சட்டங்களை மீறுவதாக குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளன. ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிரான கிளர்ச்சியாளர்களை மேற்கத்திய நாடுகள் முதலில் ஆதரித்தன. ஆனால் அக் குழுக்கள் இஸ்லாமிய அரசு தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என்பது தெரிய வந்த பிறகு, அத்தகைய உதவிகளை மேற்கத்திய நாடுகள் நிறுத்திவிட்டன.

சிரியாவின் பல பகுதிகளை இஸ்லாமிய அரசு தீவிரவாதிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-5)




# தென்கொரியாவுடன் பேசத் தயார் வடகொரியா அறிவிப்பு



(சியோல்)

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜொங் உன் தென் கொரியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த தேவைப் பட்டால் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்யவும் தான் தயாராக இருப்பதாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை நிகழ்த்திய புது வருட சிறப்புரையில் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பை வரவேற்றுள்ள சியோல் நிர்வாகம் இது வடகொரியாவுடனான உறவினை சுமுகமாக்குவதில் முக்கிய படிக்கட்டு என்றும் அறிவித்துள்ளது.

அண்மையில் வடகொரிய அரசு மீது சர்வதேசம் முக்கிய மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை முன் வைத்திருந்ததுடன் **தி இன்டர்வியூ** என்ற சர்ச்சைக்குரிய திரைப்பட விவகாரத்தில் அமெரிக்காவின் சோனி பிக்சர்ஸ் நிறுவனத்தை ஹேக் செய்த குற்றச் சாட்டும் அதன் மீது சுமத்தப்பட்டிருந்தது. இந்த ஹேக்கிங் நடவடிக்கையை மறுத்திருந்த வடகொரிய அரசு, ஆயினும் சோனி நிறுவனம் முடக்கப்பட்டது சரியான நடவடிக்கையே என்றும் இதனை வெளிநாட்டிலுள்ள தனது அனுதாபிகள் அல்லது ஆதரவாளர்கள் செய்திருக்கலாம் எனவும் விமர்சித்திருந்தது.

இந்நிலையில் ஜனாதிபதி கிம் தனது உரையில் சூழ்நிலையும் நிபந்தனைகளும் சாதகமாக அமையும் பட்சத்தில் தென்கொரியாவுடன் நல்லிணக்க பேச்சுவார்த்தை நடத்தப் படாமல் இருப்பதற்குத் தனிப்பட்ட வேறு எந்தக் காரணமும் கிடையாது எனத் தெரிவித்திருந்தார். 2007 ஆம் ஆண்டு பேச்சுவார்த்தையின் தோல்விக்குப் பின்னர இவ்விரு நாடுகளுக்கும் இடையே உயர் மட்டப் பேச்சுவார்த்தை இதுவரை நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அவ்வப்போது இவற்றைப் பிரதிநிதிப்படுத்தும் அரசியல் முகக்கியத்துவம் அற்ற அதிகாரிகள் தமக்கிடையே பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சர்வதேச நீதிமன்றத்தின் உறுப்பினராக பாலஸ்தீனத்தை இணைக்க வேண்டும்



சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் உறுப்பினராக இணைவதற்கு பாலஸ்தீனத் தலைவர்கள் விண்ணப்பித்துள்ளது குறித்து தாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக அமெரிக்கா கூறியிருக்கிறது.

இந்த முடிவால் எந்தப் பயனும் ஏற்படாது என்று கூறியுள்ள அமெரிக்கா இது பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத் தலைவர்களின் முன்னெடுப்புக்கு தேவையான அளவுக்கு எதிர்நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்துள்ள இஸ்ரேல் அது எந்த வகையான எதிர்நடவடிக்கையாக இருக்கும் என்று தெரிவிக்கவில்லை.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் உறுப்பினராகக் கோரி பாலஸ்தீனர்கள் விண்ணப்பித்துள்ளது, காசா மற்றும் மேற்குக்கரைப் பகுதியில் இஸ்ரேலால் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் போர் குற்றங்கள் குறித்து விசாரணைகளை முன்னெடுக்க வாய்ப்புகளை ஏற்படுத்தும்.

அதேநேரம் இந்த முன்னெடுப்பு காரணமாக ஹமாஸ் போன்ற பாலஸ்தீனக் குழுக்களையும் விசாரணைகளுக்கு உட்படுத்தவும் நேரிடலாம் என்றும் செய்தி நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (இ-5)

# மோசமான வானிலையால் மீட்புப்பணிகள் தாமதம் விபத்தில் பலியான மேலும் 9 பேரின் உடல்கள் மீட்பு

இந்தோனேசியாவில் சுரபயாவில் இருந்து சிங்கப்பூருக்கு சென்ற மலேசியாவின் 'ஏர் ஏசியா' விமானம் விபத்துக்குள்ளாகி ஜாவா கடலில் விழுந்தது. அதில் பயணம் செய்த 162 பேரும் பலியாகினர்.

எனவே விபத்துக்குள்ளான விமானத்தை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. அதில் 90இற்கும் மேற்பட்ட கப்பல்கள் மற்றும் விமானங்கள் ஈடுபட்டுள்ளன. சிங்கப்பூர், மலேசியா, தென்கொரியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளன.

இருந்தும் மீட்பு பணிகள் இன்னும் முடியவில்லை. பலியானவர்களின் உடல்கள், விமானத்தின் பாகங்கள் முழுவதும் மீட்கப்படவில்லை. அதற்கு மோசமான வானிலையே காரணம் என இந்தோனேசியாவின் தேசிய தேடுதல் மற்றும் மீட்பு முகவான்மையின் தலைவர் ரியர் மார்ஷல் ஹென்றி பம்பாங் சோயலிஸ்டியோ தெரிவித்துள்ளார்.பலத்த மழை, அதிவேக காற்று அதனால் ஏற்படும் உயரமான அதாவது 4 மீற்றர் உயர அலைகளால் மீட்பு பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது.


ஏற்கனவே விபத்தில் பலியான 7 பேரின் உடல்கள் மீட்கப்பட்டிருந்தன. தற்போது மேலும் 9 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. எனவே, இதுவரை மீட்கப்பட்டுள்ள சடலங்களின எண்ணிக்கை 16 ஆக உயர்ந்துள்ளது.

அவர்களில் ஒரு பெண் சடலம் விமான பணிப்பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளது. மற்றொரு பெண் பயணி ஹயாதி லுத்பியா ஹமீது என தெரிய வந்துள்ளது. அவரது உடல் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டு உடனடியாக அடக்கம் செய்யப்பட்டது.

மீட்கப்பட்ட 16 பேரின் சடலங்களில் 13 உடல்கள் சுரபயா வைத்தியசாலைக்கு அனுப்பி வைகக்கப்பட்டது. 2 உடல்கள் பங்கல்லான்பன் என்ற இடத்தில் உள்ளது. ஒருவரது உடல்அவரது உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருட பலன்கள் 2015




**பத்தாமிடத்து கேது முத்தான பலன் தரும்! அரிய பல யோசனைகளை அடுத்தவர்களுக்கு எடுத்து வழங்கும் மிதுன ராசி நேயர்களே!**

மாற்றங்களையும், ஏற்றங்களையும் விரும்பும் உங்களுக்கு, இந்தப் புத்தாண்டு புது முயற்சிகளுக்கு வெற்றி தரும் ஆண்டாக அமையப் போகின்றது. தனாதிபதி லாபஸ்தானத்தில் அமர்ந்திருக்க, ஆண்டு தொடங்குவதால் சேமிப்பு அதிகரிக்கும். சிக்கனத்தில் இருப்பவர்கள் செலவுக்கு அஞ்சாத விதத்தில் வருமானம் குவிய வழி கிடைக்கப் போகிறது.

உங்களுக்கு இந்தப் புத்தாண்டின் தொடக்கத்தில் 6 ஆம் இடத்தில் சனி சஞ்சரிப்பது யோகம்தான். அஷ்டமாதிபதி 6இல் சஞ்சரிக்கும் பொழுது, விபரீத ராஜ யோக அடிப்படையில் சில நல்ல பலன்களும் நடைபெறும். திட்டமிடாது செய்யும் காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும்.

உங்களைப் பொறுத்தவரை உங்களுகக்கென்று ஒரு சுய ஜாதகம் உள்ளது. அதில் சனி மற்றும் ராகு- கேதுக்கள் இருக்கும் நிலையை அறிந்துகொள்ள வேண்டும். அதைப் பார்க்கும் கிரகங்களால் பலனும் கிடைக்கலாம். பாதிப்புகளும் உருவாகலாம். எனவே, புத்தாண்டின் கிரகநிலைக்குரிய கட்டத்தையும் உங்கள் சுயஜாதகத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். வருடப் பிறப்பு நாள், பிறக்கும் நட்சத்திரம், இந்த வருடத்தில் பெயர்ச்சியாகும் பெரிய கிரகங்களின் மாற்றங்கள், இவை அனைத்தும் உங்கள் திசாபுத்திக்கு ஏற்ப அனுகூலம் தரும் விதத்தில் அமைந்திருந்தால், வருடம் முழுவதும் வசந்த காலமாக இருக்கும்.

2015 ஆம் ஆண்டு சனிக்குரிய ஆண்டாக “8” எண் ஆதிக்கத்தில் பிறக்கிறது. சனியின் பலம் உங்கள் சுய ஜாதகத்தில் இருப்பதைப் பொறுத்து மாற்றங்கள் உருவாகும். பரணி நட்சத்திரத்தில் ஆண்டு பிறப்பதால் சுக்ர பலம் மேலோங்கி இருப்பதால் பிள்ளைகள் வழியில் பெரும் மாற்றங்கள் ஏற்படலாம். வாரிசுகளால் விரயங்களைச் சந்திக்க நேரிட்டாலும் அதன் வளர்ச்சியில் எந்தத் தடையும் இருக்காது.

**01.01.2015- 04.07.2015**

வருடத் தொடக்கத்தில் உங்கள் ராசி நாதன் புதன் மறைந்து சஞ்சரிக்கின்றார். மறைந்த புதன் நிறைந்த தன லாபத்தைக் கொடுப்பார் என்பது நியதி. அது மட்டுமல்ல 4 ஆம் இடத்திற்கும் புதன் அதிபதியாக விளங்குவதால் கல்விக்காக எடுத்த முயற்சிக்கு மற்றும் கடல் பயண வாய்ப்பிற்கு என்று ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். உறவினர்கள் குறிப்பாக மாமன், மைத்துனர்கள் மகிழ்ச்சி அடையும் விதத்தில் உதவிக்கரம் நீட்டுவர்.

10 இல் கேது இருப்பதால் பல வழிகளிலும் உங்களுக்குத் தொழில் வாய்ப்புகள் கைகூடிவரும். தடைகளைத் தகர்த்தெறியும் ஆற்றல் சில கிரகங்களின் ஆதிபத்யத்திற்கு உண்டு. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது உங்கள் ஜாதகத்தைப் பொறுத்தவரை கேது முக்கிய காரணமாக விளங்கு கிறார். 10 ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் முத்தான தொழில் வாய்க்கும். முன்னேற்றங்கள் கூடும். பழைய தொழிலுக்கு முற்றுப் புள்ளி வைத்து புதிய தொழிலுக்கு “கமா” போடுவீர்கள். பந்தயக் குதிரை முந்துவது போல உங்கள் எண்ணங்கள் முந்திக் கொண்டு செல்லும்.

எப்படியாவது முன்னுக்கு வரவேண்டுமென்று நினைக்கும் உங்களுக்கு குருவின் சஞ்சாரமும் கைகொடுக்கின்றது. வருடத் தொடக்கத்தில் குரு வக்ரம் பெற்று சஞ்சரிப்பது யோகம்தான். கேந்திராதிபத்ய தோஷம பெற்ற கிரகம் யோகம் செய்ய வேண்டுமானால் இதுபோன்ற வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்க வேண்டும்.



எனவே, ஆதிபத்ய அடிப்படையில் குரு களத்திர வழியிலும், தொழில் வகையிலும் நல்ல பலன்களை தரப்போகிறார். வாழ்க்கைத் துணை வழியே ஏற்பட்ட கருத்து வேறுபாடு அகலும். வாரிசுகளோடு கோபித்துக் கொண்டு வெளியே சென்ற பெற்றோர் வீடு திரும்புவர். தொழில் முயற்சிக்கு ஒத்துழைப்பு செய்யவில்லையே என்ற கவலை மாறும்.

சனியின் ஆதிக்கம் வலுவடையும் இந்த ஆண்டில் ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து சனிபகவானை வழிபடுவதன் மூலமும், ஆதியந்தப் பிரபு படத்தை பூஜையறையில் வைத்து அருகம்புல் மாலையும், வெற்றிலை மாலையும் ஒரு சேர இணைத்துக் கட்டி அதை அணிவித்து வழிபாடு செய்வதன் மூலமும் வருங்காலத்தை நலமாக்கிக் கொள்ளலாம்.

**குருவின் பார்வை பலன்கள்!**

ஆண்டின் தொடக்கத்தில் குருபகவான் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். 2 இல் குரு சஞ்சரிக்கும் பொழுது குருபகவான் தனது பார்வையை 6,8,10 ஆகிய இடங்களில் பதிக்கின்றார். எனவே, அந்த இடங்கள் அனைத்தும் புனிதமடைகின்றன. எனவே. எதிர்ப்பு, வியாதி, கடன் எனப்படும் இடத்தை குரு பார்க்கப் போவதால் எதிரிகளின் தொல்லை குறையும். உதிரி வருமானங்கள் பெருகும். அதிருப்தி நிலவிய வாழ்க்கையில் இனி திருப்தி நிலவும்.

குருவின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால் உத்தியோகத்தில் எதிர்பார்த்தபடியே முன்னேற்றங்கள் வந்து சேரும். கடன்சுமை குறைவதற்கு புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். மாற்று மருத்துவம் நோயைக் குணமாக்கும். மன சஞ்சலம் அகலும். எதிர்ப்புகள் தானாகவே விலகிச் செல்லும். மதிப்பும், மரியாதையும் உயரும்.

அஷ்டம ஸ்தானத்தை குரு பார்ப்பது யோகம்தான். சென்ற ஆண்டில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். இல்லம் கட்டிப் பாதியில் நிற்கிறதே என்ற கவலை மாறும். பாதியில் நின்ற பணி மீதியும் தொடர வாய்ப்பு கூடி வரும். பணவரவும் திருப்தி கரமாக இருக்கும். தொழில் ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால், உத்தியோகத்தில் பதவி உயர்வு கிடைக்கலாம். மனசஞ்சலம் அகலும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும்.

**6.7.2015- 31.12.2015**

இக்காலத்தில் குருபகவான் உங்கள் ராசிக்கு 3 ஆம் இடமான சிம்மத்தில் சஞ்சரிக்கின்றார். 7,10 ஆகிய இடங்களில் சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 7,9,11 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. நவக் கிரகங்களில் நல்ல கிரகம் என்று வர்ணிக்கப்படும் குரு எந்தெந்த இடங்களையெல்லாம் பார்க்கிறாரோ அந்தந்த இடங்களெல்லாம் அற்புதப் பலன் கிடைக்கும். ஒப்பற்ற வாழ்க்கைக்கு உத்தரவாதம் கொடுப்பதெல்லாம் குருவின் பார்வை பலம்தான். அப்படிப்பட்ட குரு வெற்றிகள் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வெற்றி மேல் வெற்றி வந்து சேரும்.

குருப் பெயர்ச்சியான பின்னால் உங்களுக்கு குதூகலமான வாழ்க்கை அமையப் போகின்றது. மதிநலம் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து நல்ல மாற்றங்களை வரவழைத்துக் கொடுக்கப் போகன்றார்கள். அதிகாரத்துவ யோகம்




வந்து சேரும். அரசல் புரசலாக இருந்த உறவினர் பகை அகலும். சதிகாரர்கள் விலகுவர். சங்கடங்கள் அகல தங்களுடன் இணைநது பணியாற்றுபவர்களில் ஒரு சிலரை மாற்ற முன்வருவீர்கள்.

கல்யாண வாய்ப்புகளுக்காக காத்திருந்த கன்னியர்களுக்கும், காளையர்களுக்கும் இது ஒரு நல்ல நேரமாகும். 7 ஆம் இடத்தை குரு பார்ப்பதால் வாழ்வு வளமாக வழி கிடைக்கும். வறுமை மிரண்டோட வளமை இல்லம் தேடி வரும். பொறுமையை இது வரைக் கடைப்பிடித்த உங்களுக்கு புகழ் மிக்கவர்கள் பின்னணியாக இருந்து எண்ணற்ற காரியங்களை முடித்துக் கொடுப்பர்.

விட்டுப்போன வரன்கள் மீண்டும் வந்து சேரும். தொட்டில் கட்டும் வாய்ப்பும் ஒரு சிலருக்கு உருவாகும். பட்ட துயரங்கள் பார்க்கும் குருவால் விலகிவிடும். இந்த நேரத்தில் தொட்ட காரியங்கள் எல்லாம் வெற்றி கிடைக்கும். கைக்கு வந்த தொகை மறுநிமிடமே செலவாகிறதே என்று வருந்தியவர்களுக்கு, வங்கி சேமிப்பு உயரும் நிலை உருவாகும் பௌர்ணமியன்று கிரிவலம் வருவதும் பலன்தரும். அனுகூலம் தரும் ஸ்தலங்களை தேர்ந்தெடுத்து, யோக பலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வருவதன் மூலமும் வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**குருவின் வக்ர காலமும், சனியின் வக்ர காலமும்!**

வருடத் தொடக்கத்தில் வக்ரமாகும் குரு 14.04.2015 வரை வக்ரம் பெறுகிறார். அதே நேரத்தில் சனிபகவான் 15.03.2015 இல் விருச்சிகத்தில் வக்ரம் பெறுகிறார். மேலும் 12.06.2015 முதல் 05.09.2015 வரை துலாத்தில் சனி வக்ரம பெறுகிறார். குருவின் வக்ர காலமும் உங்களுக்கு மிகுந்த நன்மைகளையே கொடுக்கும். வேலை மாற்றம் முதல் மாலை வாய்ப்பு வரை வியாழனின் கையில்தான் இருக்கிறது. முல்லைப்பூ மாலை அணிவித்து அவரை வழிபட்டால் எல்லையில்லாத நற்பலன்கள் கிடைக்கும். வள்ளல்களாக நீங்களும் மாறும் விதத்தில் தொழிலும் வளர்ச்சி பெறும். நல்ல மனிதர்களின் ஒத்துழைப்போடு புதிய ஒப்பந்தங்களை வரவழைத்துக் கொள்வீர்கள். மனக்கசப்பு தந்த பங்குதாரர்களை விலக்கிவிட்டுப் புதிய பங்குதாரர் களை சேர்த்துக் கொள்வீர்கள். அதே நேரத்தில் சனி உங்கள் ராசிக்கு 8,9 ஆகிய இடத்திற்கு வக்ரம் பெறும்பொழுது நன்மை, தீமை இரண்டும் இணைந்தே வரும். பழைய கடன்களை கொடுத்தாலும் புதிதாக கடன் வாங்கும் சூழ்நிலை சங்கிலித் தொடர்போல வந்துகொண்டேயிருக்கும். பங்காளிப் பகையை பக்குவமாகச் சமாளிப்பீர்கள்.

**மிதுன ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் தன ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால் பணப்புழக்கத்திற்கு குறைவிருக்காது. எதைச் செய்ய நினைத்தீர்களோ அதை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள். குடும்ப ஒற்றுமை பலப்படும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். கணவன்- மனைவிக்குள் அன்னியோனயம் அதிகரிக்கும். வருடக் கடைசியில் நகை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக்கொள்வீர்கள். குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் சகோதர ஒற்றுமை பலப்படும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். சுபவிரயங்கள் அதிகரிக்கும். தம்பதியர்களுக்குள் ஒற்றுமை பலப்படும். கடல்தாண்டும் யோகம்கூட ஒரு சிலருக்கு வந்து சேரலாம்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

புதன்கிழமை தோறும் விஷ்ணுவையும், இலக்குமியையும் வழிபட்டு வாருங்கள். விரதங்களை முறையாகக் கடைப்பிடித்தால் விரும்பும் விதத்தில் வாழ்க்கை அமையும்.

**நாளை கடகம**

# பத்தாமிடத்து கேது முத்தான பலன் தரும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கொம்பனில் 116 குடும்பங்களுக்கு சுவிஸ் வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை

## பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆதங்கம்

(முக்கொம்பன்)

பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட நல்லூர் கிராம சேவையாளர் பிரிவின் முக்கொம்பனில் வசிக்கும் 116 குடும்பங்களுக்கு இதுவரை சுவிஸ் வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முக்கொம்பனில் 500 இற்கு மேற்பட்ட குடும் பங்கள் வசித்து வருகின்றன. இதில் பெரும் பாலானோருக்கு சுவிஸ் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இவர்களில் 116 குடும்பங்களுக்கு இதுவரை இந்த வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லையென கவலை தெரிவிக்கின்றனர்.

இக் குடும்பங்கள் அனைத்தும் தற்காலிக ஓலைக்குடிசைகளில் வசித்து வருகின்றனர்.

தற்போது பெய்த அடை மழையினால் இம் மக்களின் ஓலைக் குடிசைகளினுள் நீர் உட்செல்கின்றமையால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்த வீட்டுத்திட்டத்தினுள் முதியவர்கள், 2010 இற்கு பின்னர் திருமணம் முடித்தவர்கள், முக்கொம்பனில் நிரந்தரமாக வசித்து தற்காலிகமாக குறுகிய காலத்தில் அயல்மாவட்டங்களில் வசித்து விட்டு பின்னர் தமது சொந்த இடங்களில் குடியேறியவர்கள் ஆகியோரே உள்வாங்கப்படாது இருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வீட்டுத் திட்டத்தினுள் தமது குடும்பங்களையும் உள்வாங்கி விரைவுபடுத்தி வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-283)




(முக்கொம்பன்)

நல்லூர் முக்கொம்பன் வீதியில் 10 வீட்டுத்திட்டத்தில் வீதியின் நடுப்பகுதியிலிருந்து 33 அடியில் வாய்க்கால் வெட்டியுள்ளனர்.

இந்தசெயற்பாட்டினை முக்கொம்பன் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மேற்கொண்டுள்ளார்கள்.

இது தொடர்பாக நல்லூர் முக்கொம்பன் வீதிக்கு சொந்தமான பிரதேச சபையிடம் சென்று மக்கள் கேட்ட போது வீதியின் நடுப்பகுதியிலிருந்து 16.5 அடியில் மதில் கட்டுவதற்கான அனுமதியினை நாங்கள் வழங்குகின்றோம். 16.5 அடிக்குள் தான் வடிகாலமைக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

10 வீட்டுத்திட்டத்தில் குழந்தைகள் வசிக்கும் வீட்டில் வேலிக்கு உட்பகுதியில் வாய்க்கால் இருப்பதை மக்கள் விரும்பவில்லை. அத்துடன் பயன்தரு மரங்களையும் பாராது வாய்க்கால் வெட்டியுள்ளனர்.

எனவே தொடர்புடைய பிரதேச சபை, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அதிகாரிகள் கவனத்தில் எடுப்பார்களா?

**பாதிக்கப்பட்ட நல்லூர் முக்கொம்பன் கிராம மக்கள்**

# காடுகளில் தேக்கு மரங்கள் வெட்டப்பட்டு கடத்தல் அதிகரிப்பு

## கிளிநொச்சி பொலிஸார் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள காடுகளில் தேக்கு மரங்கள் அனுமதிப்பத்திரமின்றி வெட்டப்பட்டு கடத்தப்படும் நடவடிக்கைகள் அதிகரித்து காணப்படுவதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தேக்கு மரங்களை வாகனங்களில் கடத்துபவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, அவர்களுக்கெதிராக சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

கடந்த 30ஆம் திகதி 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 3 தேக்கு மரக்குற்றிகளை கன்ரர் ரக வாகனத்தில் கடத்திச் சென்ற சந்தேகநபர் கைது செய்யப்பட்டு, கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட வேளை, நீதவான் எம்.ஐ.வகாப்தீன் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதியளித்தார்.

மேலும், கடத்தப்பட்ட தேக்குமரம் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். (2)

# தமிழ் மக்கள் விரும்பும் நிரந்தர தீர்வினை நோக்கியே எனது உரிமைக்குரல் தொடரும்

## வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் உறுதி

(குருமன்காடு)

தமிழர்களின் உரிமைகளுக்காக நியாயமாக குரல் கொடுப்பவர்களைத் தவிர ஜனாதிபதித் தேர்தலில் எந்த ஒரு வேட்பாளரையும் ஆதரித்து பிரசாரம் செய்ய மாட்டேன் என வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மண்ணில் இருந்து தமிழர்களின் உரிமைகளுக்காக நியாயமாக குரல் கொடுப்பவர்களைத் தவிர வேறு எவரையும் ஆதரித்து பிரசாரம் செய்வதில்லை என்பது தனது கொள்கை சார் முடிவு என்றும் கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் அவரது நிலைப்பாடு குறித்து கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,




எங்கள் மண்ணில் வரலாறு அதற்கு முன் கண்டிராத சுமார் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட யாழ்.மக்களின் இடப்பெயர்வை எங்களுக்கு பரிசளித்தவர் சந்திரிகா. செம்மணிப்புதைகுழி உள்ளிட்ட பல பேரவலங்களை இவரது ஆட்சியில் தான் தமிழர்கள் முகம்கொடுத்தார்கள். தமிழர்களுக்கெதிரான போரில் 75% வெற்றி தன்னுடையது என்று அவரே உரிமை கோருகிறார்.

எங்கள் மக்கள் மீதான இன அழிப்பின் குறியீடாக நிற்கிற கொடூரமான முள்ளி வாய்க்கால் பேரவலத்தை எமக்கு வழங்கியது மகிந்த ஆட்சியே.

இன்றும் இந்த அவலத்திலிருந்து மீண்டு எழாத நிலையில், உடலில் குண்டுச் சிதறல்களோடும் உளச் சிதைவுகளோடும் நடைப்பிணங்களாக வாழ்கின்றனர் எங்கள் மக்கள்.

இப்போரின் தளபதியாக முன் நின்று உழைத்து அழிவுகளையும் அவலங்களையும் தமிழர் குடிக்கு வழங்கியவர் சரத் பொன்சேகா.

முள்ளிவாய்க்காலில் எங்கள் இனம் அழிக்கப்பட்ட போது கொழும்பில் பாற்சோறு அரசியலையும் பட்டாசு அரசியலையும் பங்கு போட்டவரே மைத்திரிபால சிறிசேன.

மரணித்த எங்களின் உறவுகளின் உணர்வுகளை மிதித்து இவர்களுக்காக வாக்குக் கேட்க முடியாது. வாழ்த்துப்பா பாடவும் முடியாது.

எங்கள் தாயகம் கடந்த காலங்களில் கண்ட அனைத்து வலி சுமந்த நிகழ்வுகளிலும் நேரடி பங்காளர்களாக திகழ்ந்த எமது மக்கள் இத் தேர்தலில் சரியான முடிவை எடுக்கவல்ல அரசியல் அறிவுள்ளவர்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

அதேவேளை தமிழர்கள் தன் பின்னால் நிற்கிறார்கள் என்பதை சர்வதேசத்திற்கு காட்டுவதற்கு மகிந்த அரசு முனைகின்றது.

தமிழ் மக்கள் இத் தேர்தலில் எடுக்கக் கூடிய முடிவுக்கு முரணான முடிவை வாக்கு மோசடி மூலம் வெளிப்படுத்த முயற்சிப்பதை அனுமதக்க முடியாது.


எனவே தேர்தலின் போது இது குறித்து கண்காணிக்கிற பணியை ஆற்றுவேன்.

எங்களுக்கான தீர்வு, ஒருங்கிணைந்த மக்கள் சக்தியின் அரசியல் போராட்டத்திலேயே தங்கியுள்ளது.

தேர்தலில் யார் வென் றாலும் எங்களின் தீர்வுக்கு எங்களின் உரிமைக்குரலே அவசியம்.

தேர்தல் முடிவில் தெற்கில் எவர் ஆட்சிக்கு வந்தாலும், தமிழ் மண்ணில் தமிழ் மக்கள் விரும்பும் நிரந்தரத் தீர்வை நோக்கிய எனது உரிமைக்குரல் சத்தியத்தின் வழியில் என்றும் தொடரும் என்றார். (2-250)

# குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு கோழிக்குஞ்சுகள்



முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 36 பயனாளிகளுக்கு போழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் வாழ்வாதார திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு போழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

கரைதுரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட முள்ளியவளை, செம்மலை, சிலாவத்தை ஆகிய மூன்று வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 36 பயனாளிகளுக்கு 20 கோழிக் குஞ்சுகளும் கூடொன்றும் வழங்கப்பட்டன. (2)




கிளிநொச்சி சிக்கன கடன் கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி ஆனந்த நகர் முன்பள்ளி மண்டபத் தில் நடைபெற்ற போது... (படம்:-கிளிநொச்சி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தை தூண்டிவிட்டு தமிழர் மத்தியில் நல்லவர்கள் போன்று நடிக்கின்றனர்

## எதிரணி மீது அமைச்சர் டக்ளஸ் தாக்கு



எமது பாதையில் அழிவுகள் இல்லை, அவலங்கள் இல்லை இடப்பெயர்வுகள் இல்லை இதுவே எங்களது கொள்கை எனக்குறிப்பிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிங்கள மக்கள்மத்தியில் இனவாத நச்சு கருத்துக்களை பேசிக்கொண்டு தமிழ் பேசும்மக்கள் மத்தியில் நல்லவர்கள் போல்நாடகமாடும் இரட்டை முகம் காட்டும் எதிரணியினர் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுக் காலை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்

நான் உங்களிடம் அழைத்து வந்திருப்பது சாமானியமான தலைவரையல்ல. சமாதான தேசத்தின் தந்தையையே நான் உங்களிடம் அழைத்து வந்திருக்கின்றேன்.

எங்களை நேசமுடன் தேடி வந்திருக்கும் எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தமிழ் பேசும் மக்களாகிய உங்களது ...பாக நான் வரவேற்கின்றேன்.

பேரணியாக நீங்கள் திரண்டு வந்திருப்பதன் மூலம், எதிர்வரும் 8 ஆம்திகதி எங்களுக்கே பெருவெற்றி என்பதை நீங்கள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றீர்கள்.

இரண்டு பிரதான அணிகள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றன.தமிழ் பேசும் மக்களின் சார்பான கட்சிகளோடும், தமிழ் பேசும் மக்களுக்காகக் குரல் கொடுத்து வரும் இடது சாரிக் கட்சிகளோடும் கூட்டுச் சேர்ந்திருக்கும் எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு புறம்.தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைக்கு எதிரான, இனவாதகூட்டாக சேர்ந்திருக்கும் எதிரணி இன்னொரு புறம்.

...சிங்கள மக்கள் மத்தியில் இனவாதம் இங்கு இருக்கக் கூடாது என்று பேசியபடியே தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் அதே கருத்துக்களை பேசி, எங்கும் ஒரே முகம் காட்டி வரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அணியினர் இன்னொரு புறமும்.

சிங்கள மக்கள் மத்தியில் இனவாத நச்சு கருத்துக்களைப் பேசிக்கொண்டு, தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நல்லவர்கள் போல்நடித்து, இரட்டை முகம் காட்டும் எதிரணியினர் ஒரு புறமும்,தன்னுடன் கூட்டுச் சேர்ந்திருந்த இனவாத சக்திகளின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், இனவாதிகளைக் கட்டுப்படுத்தும் ஆளுமையோடு, தமிழ் பேசும் மக்களுக்கு அபிவிருத்தி முதற்கொண்டு, அரசியல் தீர்விற்கான பாதையை திறந்து விட்டிருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு புறமும், தமிழ்பேசும் மக்களுக்கு விரோ தமான, அதே இனவாத சக்திகளை இன்று தம்முடன் இணைத்துக் கொண்டாலும், அவர்களைக் கட்டுப்படுத்தி எமது மக்களுக்கு எதையும் ஆற்ற முடியாத, ஆளுமையற்ற எதிரணியினர் இன்னொரு புறமும்,

எமது தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற விரும்பும் யதார்த்தவாதிகளை, தனது நடைமுறை செயற்பாடுகளால் மட்டும் தம்மோடு இணைத்து வைத்திருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அணியினர் ஒரு புறமும்,

அரசியல் வியாபார சந்தையில் எமது இனத்தின் அரசியல் அபிலாசைகளை கோடிக்கணக்கான பணத்திற்காக விற்றுப் பிழைத்து, விலைபோகும் சுயலாப தமிழ் அரசியல்வாதிகளோடு பணப்பெட்டிகளைப் பரிமாறியிருக்கும் எதிரணியினர் இன்னொரு புறமும்... கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்து வாக்குறுதிகள் மட்டும் வழங்கியவர்கள் ஒருபுறம். வழங்கிய வாக்குறுதிகளை நிறை வேற்றிக் கொண்டிருக்கிற ஜனாதி பதி மறுபுறம் உள்ளனர்.இதில் யாரை நீங்கள் ஆதரிக்கப்போகிறீர்கள் என்பது உங்களது தீர்மானம்.தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எமது மக்களின் பிரச்சினைகள் தொடபில் எதையும் கூறாதவர்கள் ஒருபுறம். எமது கோரிக்கைகளை உள்வாங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்னொரு புறம். நான் அரசியல்வாதி அல்ல. ஒரு மாபெரும் அரசியல் விடுதலைப் போராட்ட இயக்கத்தையே வழி நடத்திச் சென்றவன்.

என்னுடன் கூட இருப்பவ களில் பலரும் அரசியல் வாதிகளல்ல. அவர்களும் அரசியல் விடுதலைப் போராளிகளே. ஆகவேதான், இன்று வரையில் நான் ஒரு அரசியல் போராளியாகவே வாழ்ந்து வருகின்றேன். எனவேதான் நான் உங்களுக்கு எப்போதுமே சரியான வழிமுறை களையே காட்டிக்கொண்டிருக்கிறேன். எனது வழிமுறையில் இடப்பெயர்வு களுக்கோ, இழப்புகளுக்கோ, அழிவுகளுக்கோ, துன்பங்களுக்கோ, துயரங்களுக்கோ இடமில்லை.

இணக்க அரசியல் ஊடாக, உரிமைக்குக் குரலாகவும் உறவுக்குக் கரமாகவும்செயற்பட்டு வருகின்றேன்.

எதையும் உருப்படியாகச் செய்யாத, அடிக்கடி கட்சி மாறுகின்ற முன்னைநாள் அமைச்சர் ராஜித கட்சி தாவுவதற்கு முன்னர் என்னைப் புகழ்ந்து பேசியவர். இன்று நான்எதையும் வெளியே கதைப்பதில்லை என்று சொல்லி வருகின்றார். உண்மைதான் எனக்குச் சலசலப்புத் தேவையில்லை. பலகாரம்தான் தேவை.

அந்த வகையில் நான் அடிக்கடி ஜனாதிபதியை சந்தித்து, எமது மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவே கலந்துரையாடி வருகின்றேன். அந்த வேளைக ளில் ஜனாதிபதி அடிக்கடி சொல்லுவார் நீங்கள் புலிகளை விட மோசமா னவர். புலிகள் கூட என்னை இந்தளவு தொந்தரவு செய்ய வில்லை என்று. நான் எப்போதும் நடைமுறைச் சாத்தியமாகவே அணுகுகின்றவன்.

அதாவது கடந்த காலத் தவறான தமிழ் அரசியல் வழிநடத்தலால் எமது மக்கள் முள்ளிவாய்க்கால் வரை செல்லவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டார்கள். எமது மக்கள் முட்செடிக்குமேல் விழுந்த சேலையாகவுள்ளனர். அதனைப் பக்குவமாகவே மீட்கவேண்டும்.


13 ஆவது திருத்தச் சட்டத்தை, மாகாணசபை முறைமையை நடைமுறைப்படுத்துமாறு நான் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவிடம் கேட்டிருக்கிறேன். முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கவிடமும் கேட்டிருந்தேன். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கேட்டேன்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடமும் கூடக் கேட்டிருக்கிறேன்.இறுதியாக இன்றைய ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவிடம் கேட்டி ருந்தேன்.

முன்னைய ஆட்சியாளர்கள் எவருமே எமது உரிமைக்குரலை கேட்கவும் இல்லை. நடைமு றைப் படுத்தவும் இல்லை. அந்த துணிச்சலும் அவர்களுக்கு இருந்த தில்லை. இன்று இறுதியாக, 13 ஆவது திருத்தச்சட்டத்தை துணிச்சலோடு நடைமுறைப்படுத்திக்கொண்டிருப்பவர் யார்?..... நீங்களே சொல்லுங்கள்..... எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே அந்த செயல் வீரன. சொல்வதை செய்பவர், செய் வதை சொல்பவர் என எமது பாதை யில் அழிவுகள் இல்லை. அவலங் கள் இல்லை. இடப்பெயர்வுகள் இல்லை. இதுவே எங்களது கொள்கை.

அதற்காகவே நான் நடைமுறைச் சாத்தியமான அரசியல் வழிமுறையை இன்று வரை பின்பற்றி வருகிறேன் என' அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# ஜெயா சொத்துக்குவிப்பு வழக்கு தொடர்பில் மேன்முறையீட்டுக்கு தனி விசாரணை அமர்வு



**முன்னாள் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கில் மேன்முறையீட்டு மனு மீதான விசாரணைகளை மேற்கொள்ள தனிச் சிறப்பு அமர்வு ஒன்றை கர்நாடக உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அமைத்துள்ளது.**

ஜெயலலிதாவின் மேன்முறையீடு மனு மீதான விசாரணையை 3 மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என்று இந்திய உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

நீதிபதி சி.ஆர்.குமாரசாமி இடம்பெற்றுள்ள இந்த சிறப்பு அமர்வில், நாளாந்த முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருமானத்துக்கு அதிகமான சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டிக்கப்பட்டுள்ள அ.தி.மு.க.பொதுச் செயலாளர் ஜெயலலிதாவின் மேன்முறையீடு மனு மீதான விசாரணையை, மூன்று மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என்று இந்திய உச்சநீதிமன்றம் கடந்த டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதியன்று உத்தரவிட்டிருந்தது.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, அவரது நெருங்கிய தோழி சசிகலா மற்றும் சசிகலாவின நெருங்கிய உறவினர்களான சுதாகரன், இளவரசி ஆகியோருக்கு வழங்கப்பட்ட பிணையையும் 4 மாதங்களுக்கு நீடித்து, அப்போது உத்தரவு வெளியிடப்பட்டிருந்தது.

இருந்தபோதும், நாளை முதல் மீண்டும் இரண்டு நாட்களுக்கு வார இறுதி விடுமுறை என்பதால் வரும் ஜனவரி 5 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் முறையான வாதங்கள் நடைபெறும் என்றும் கூறப்படுகிறது.

முன்னதாக, இந்திய உச்சநீதிமன்றத்தில் இது தொடர்பான விசாரணை நடைபெற்றபோது, தங்கள் தரப்பு வாதங்களை நடத்திட 30 நாட்கள் தேவை என்று ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர் கோரியிருந்தார்.

அதனால் விடுமுறை நாட்களை தவிர்த்து பார்க்கும்போது இரண்டு மாதங்களில் இந்த விசாரணைகள் முடிவடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதை கணக்கில் கொண்டே மூன்றுமாதங்களுக்குள்வழக்கு விசாரணைகளை முடிக்க வேண்டும் என்று இந்திய உச்சநீதிமன்றம் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தீவிரவாதிகளுக்கு பாக். மறைமுக உதவி

## அமைச்சர் ராஜ்நாத் குற்றச்சாட்டு

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்குள தீவிரவாதிகளை ஊடுருவச் செய்ய பாகிஸ்தான் மறைமுகமாக உதவுவதாக உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் குற்றம் சாட்டியுள்ளார்.

டில்லியில் செய்தியாளர்கள் கேள்விகளுக்கு பதிலளித்த ராஜ்நாத் சிங், "எல்லையில் தீவிரவாதிகள் ஊடுருவல் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் எவ்வித தடையுமின்றி ஜம்மு-காஷ்மீருக்குள் ஊடுருவ பாகிஸ்தான் இராணுவம் மறைமுகமாக உதவுகிறது. எல்லையில் அத்துமீறி தாக்குதல் நடத்துவது திசை திருப்பும் முயற்சியே" என்றார்.முன்னதாக நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய ராஜ்நாத், எல்லையில் அத்துமீறுவதை பாகிஸ் தான் நிறுத்திக்கொள்ள வேண்டும் என எச்சரித்திருந்தார். இந்நிலையல்நேற்று பாகிஸ்தான் அத்துமீறலகள் தீவிரவாதிகளுக்கு உதவுவதற்காகவே என குற்றம் சாட்டியுள்ளார். (இ-5)

# புற்றுநோய் செல்களை அழிக்கும் புதிய மூலக்கூறு கண்டுபிடிப்பு

புற்றுநோய் செல்களின் வளர்ச்சியைத் தடுக்கும் புதிய மூலக்கூறு ஒன்று ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது செயற்படும் விதமும் விளக்கப்பட்டுள்ளது.

புற்றுநோய் செல்களின் 'உயிரியல் கடிகாரத்தை' மறு அமைப்பாக்கம் செய்து புற்றுநோய் கட்டியின் வளர்ச்சியைத் தடுக்கும் புதிய மூலக்கூறு ஒன்றை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அந்த மூலக்கூறு "6-தியோ-2' (6-thio-2)- டீஆக்சிகுனோசைன் (6-thiodG) என்று அழைக்கப்படுகிறது. இது புற்றுநோய் செல்களின் வளர்ச்சியைத் தடுப்பதாக தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

"டீஆக்சொகுனோசைன் குறைந்த அளவில் கொடுத்த போதும் பலதரபப்ட்ட புற்றுநோய் செல்களுக்கு எதிராகவும் பரவலான முறையில் இந்த மூலக்கூறு செயற்படுகிறது" என்று டெக்ஸாஸ் பல்கலைக்கழக பேராசிரியர் ஜெரி ஷேய் தெரிவித்தார்.

இந்த மருந்தை எலிகளில் பரிசோதனை செய்து பார்த்த போது, பக்கவிளைவுகள் ஏற்படவில்லை என்றும் இந்த ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.


செல்களின் ஆயுளை முறைப்படுத்தும் ஒரு தனிச்சிறப்பான உடற்கூறு நடைமுறையை இந்த மருந்து தனது இலக்காக்கிக் கொள்கிறது. அதாவது செல்களின் ஆயுளைத் தீர்மானிக்கும் கடிகாரமே அது.

அந்த உயிரியல் கடிகாரம் செயற்படுவதற்குக் காரணமாக இருப்பது டெலோமியர்ஸ் என்ற டி.என்.ஏ.அமைப்பு. குரோமோசோம்களில் செயலாற்றி செல்களின் ஆயுளைக் கூட்டுவது அதுவே. செல்கள் பிரியும் போது இது சிறியதாகிவிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் பிரசாரக் கூட்டம் நேற்று யாழில் இடம்பெற்றது








# கடந்த காலத்தைப் பற்றி பேசுவதால் இனி ஆகப்போவது ஒன்றுமேயில்லை

## முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. அவற்றினை மறந்து பொருளாதார ரீதியில் நாம் முன்னேற்றமடைய வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

உறுதியான வடபகுதிக்கான நிபுணர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வர்த்தக மற்றும் சமூகத்துறை சார்ந்த முன்னணி நிபுணர்கள் கலந்து கொண்டு இலங்கையின் வர்த்தக மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டில் தமது வியூகங்களையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்ட கருத்துக்களம் யாழ். டில்கோ விடுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகி மதியம் வரை நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் போருக்குப் பின்னரான காலப் பகுதியில் மின்சாரம், தொலைத்தொடர்பு, போக்குவரத்து சேவைகள் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலங்களைப்பற்றி பேசிக் கொண்டிராது நாம் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்து தேசிய பொருளாதாரத்தில் எமது பங்களிப்பும் உயர்த்தப்படல் வேண்டும்.

8 ஆயிரம் சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பினைக் கொண்ட வடக்கு மாகாணத்தில் உள்ள மக்களில் 55 வீதமான மக்கள் யாழ்.மாவட்டத்திலேயே உள்ளனர்.

1981 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் 7 இலட்சத்து 35 ஆயிரம் மக்கள் சனத்தொகை காணப்பட்டிருந்தது. ஆனால் 2014 ஆம் ஆண்டு 6 இலட்சம் சனத்தொகையே காணப்படுகின்றது.

இதற்கு குறைந்த பிறப்பு வீதமும் அதிகரித்த இறப்பு வீதமும் அதிகரித்த இடப்பெயர்வுமே காரணமாகும்.

இரட்டைப் பிரஜாவுரிமை துரிதமான வகையில் பரிசீலிக்கப்பட்டால் எமது மாகாண சனத்தொகையும் அதிகரிக்கபடுவதோடு தொழில்நுட்ப அறிவு, பணம் என்பவற்றினை அதிகரித்து எமது பிரதேசத்தினை அபிவிருத்தி செய்ய முடியும்.

வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர் மக்கள் தவறான கருத்துடன் இருப்பதோடு போர்ச் சூழல் தற்போதும் நிலவுகின்றது என்பதான கருத்துப்பாட்டினையும் கொண்டுள்ளனர். அவர்களிற்கு இவற்றினைத் தெளிவுபடுத்தி இங்கு வரவழைக்க வேண்டும்.

எம்முடைய மீன்பிடித்துறை வளர்ச்சியடையாமல் காணப்படுவதனால் தான் இந்திய மீனவர்கள் எமது கடல் எல்லைக்குள் வருகை தந்திருக்கின்றனர்.

நாம் எமது மீன்பிடித்துறையினை அபிவிருத்தி செய்து எமது கடற்பரப்பிலுள்ள மீன்களை முறைப்படி பிடித்து வந்தால் இந்திய மீனவர்கள் இங்கு வந்து மீன்பிடிக்கும் அளவிற்கு மீன்கள் இருக்காது.

இதே வேளை கிளிநொச்சியில் 50 வீதம், மன்னாரில் 60 வீதம், முல்லைத்தீவில் 60 வீதம், வவுனியாவில் 70 வீதம் காடுகளாகவுள்ளன. ஆனால் [illegible] என்பது போதியளவாக காணப்படுகின்றது.

மேலும் 2 இலட்சம் ஏக்கர் நிலம் பயிர்ச்




செய்கை நிலமாகவுமுள்ளது.

யாழ்ப்பாணக்கால நிலை பொய்யான மத்திய தரைக்கால நிலையைக் கொண்டது. இதனைப் பயன்படுத்தி இங்கு பெறுமதிமிக்க பழமரங்கள், தாவர வகைகளினை வளர்க்க முடியும். இங்கு சிறப்பாக காணப்படுகின்ற வெங்காயச் செய்கையினை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

தொழில் நுட்பம் தொடர்பில் உண்மையான, உறுதியான முதலீடு இருந்தால் 2017 இல் யாழ்ப்பாணம், ஐதராபாத், பெங்களூர் போன்று தொழில்நுட்பங்களில் சிறந்த நகரங்களில் ஒன்றாக மாற்றியமைக்க முடியும்.

யாழ்ப்பாணத்தில் கல்விகற்றவர்கள் தான் லண்டன், ஜேர்மன் உட்பட சர்வதேச நாடுகளில் தொழில்நுட்ப நிறுவனங்களில் பணிபுரிகின்றனர். தற்போது அறிவுசார் பொருளாதார சட்டமைப்பிற்குள் நுழைந்துள்ள நாம் பிராந்திய அபி விருத்தியினை மேற்கொண்டு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய வேண்டும் எனப் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை மேலும் தெரிவித்தார். (இ-4)

## திருவெம்பாவை



**திருச்சிற்றம்பலம்**

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப்
பைம்போதால்
அங்கம் குருகுஇனத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எம்கோனும் போன்றுஇசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்துஆர்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்
பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடுஏலோர் எம்பாவாய்

பொருள்:-நீர் மிகுந்த பொய்கையானது பசிய கருமையான புவளை மலர்களை உடையது. எம்பெருமாட்டியான உமையம்மையும் கருங்குவளை நிறமுடையவள். பொய்கை செந்தாமரை மலருடைய்து. எம்பெருமானோ செந்தாமரை நிறமுடைய திருமேனியன். பொய்கை அழகிய குருகு என்னும் நீர்ப்பறவையுடையது. பெருமான் தன் திருமேனியின் கண் குருக்கத்தி மலர் மாலையுடையவன் . பெருமாட்டி தன் கையில் சங்கு வளையல் தொகுதியுடையவள். பொய்கை ஒலி உடையது. பெருமானும் பெருமாட்டியும் பின்னிக் கிடக்கும் பாம்பினை அணிந்தவர்கள். பொய்கையில் உடல் அழுக்கைக் கழுவ மூழ்குவர். தம்மிடத்தே உள்ள மும்மல நீக்கமுறுவார். பெருமான் பெருமாட்டியை வந்தடைவர். அத்தகைய இறைவனையும் இறைவியையும் ஒத்த பொய்கையில் இறங்கி மூழ்கி நம்முடைய சங்கு வளையல்கள் ஒலிக்கவும், காற்சிலம்புகள் ஓசையிடவும், கொங்கைகள் பூரிக்கவும், மூழ்குகின்ற நீர் பொங்கவும் தாமரை மலர்கள் நிறைந்த நீரில் பாய்ந்தாடுவோமாக!

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்து எடுத்த
பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடு ஏலோர் எம்பாவாய்.

**பொருள்:**-காதில் பொருந்திய குழைகள் அசையவும், பசிய பொன்னாலான அணிகள் ஆடவும், பூமாலையானது கூந்தலில் இருந்து அசையவும், மாலையைச் சுற்றும் வண்டின் கூட்டம் சுழலவும், குளிர்ச்சியான நீரில் மூழ்கித் தில்லைச்சிற்றம்பலத்தைப் புகழ்ந்து பாடி, வேதப் பொருளாகிய சிவபெருமானைப் பாடி அப்பொருள் நமக்கு ஆகும் வண்ணமும் பாடி ஒளியுருவானவனின் ஆற்றலைப்பாடி இறைவனின் சென்னியில் சூட்டப்பட்டுள்ள கொன்றை மாலையைப் பாடி அவன் ஆதியான முறையையும் பாடி அந்தம் ஆன முறையையும் பாடி பிறரில் நின்று நம்மை வேறுபடுத்திச் சிறப்பாக வளர்த்துக் காத்த வளையல் நிறைந்த கையையுடைய அம்மையின் திருவடிச் சிறப்பினைப் பாடி நீராடுவோமாக!

ஓரொருகால் எம்பெருமான் என்றுஎன்றே
நம்பெருமான்
சீர்ஒருகால் வாயோவான் சித்தம் களிகூர
நீர் ஒருகால் ஓவா நெடுந்தாமரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
தான் பணியாள்
பேரரையற்கு இங்ஙனே பித்துஒருவர் ஆமாறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்
வித்தகர்தாள்
வார் உருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏர்உருவப் பூம்புனல் பாய்ந்து ஆடுஏலோர்
எம்பாவாய்.

**திருச்சிற்றம்பலம்**

பொருள்:- கச்சணிந்த அழகிய அணியுடன் கூடிய கொங்கைகளை உடையவர்களே! ஒருத்தி ஒவ்வொரு சமயத்திலே எம்பெருமான் என்று சொல்லிச் சொல்லியே வந்து நம் இறைவனது புகழினை ஒருமுறை மட்டுமன்றி பலமுறை வாய் ஓயாது பேசுவாள். மனமகிழ்ச்சி மேலோங்குதலால் கண்களில் இருந்து நீர் ஒழுக்கானது ஒரு பொழுதும் நீங்காத தாரைகளாக ஒழுக நிலத்தின் மேல் விழுந்து எழாது வணங்குவாள் தேவர்களை ஒருபோதும் வணங்கமாட்டாள். பெரிய தலைவனாகிய இறைவனுக்கு ஒருவர் பித்தர் ஆகும் வகை இவ்வாறு தானோ? இவ்வாறு பிறரை அடிமை கொள்ளும் ஞான உருவினர் யார் ஒருவரோ? அவருடைய திருவடியை நாம் புகழ்ந்து பாட அழகிய தோற்றமுடைய மலர்கள் நிறைந்த புதுநீரில் விழுந்து ஆடுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகள் ஜோசியர் வீட்டை விட்டு வரமாட்டார்கள். பணக்காரர்கள் மருந்துக்கடையை விட்டு வரமாட்டார்கள். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 265 பேர் டெங்கினால் பாதிப்படைந்துள்ளனர்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த பருவ மழைக்கு பின்னர் டெங்கு நோயின் பரம்பல் தீவிரமடைந்துள்ளது. கடந்த வருடத்தில (2014) யாழ் மாவட்டத்தில் 1265 நோயாளர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை கடந்த டிசம்பர் மாதத்தில் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 வயதுடைய சிறுவன் ஒருவன் டெங்கு நோயினால் உயிா இழந்துள்ளார். யாழ்ப்பாணம் , நல்லூர், கோப்பாய், உடுவில், சண்டிலிப்பாய், சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் நவம்பர்,டிசம்பர் மாதங்களில் கூடுதலான நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனா என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது.

இந் நிலையில் கடந்த டிசம்பர் மாதம யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில், சண்டிலிப்பாய் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இருப்பினும் இப் பிரிவுகளில் டெங்கு நோயுடன் பல நோயாளிகள் புதிதாக இனம் காணப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் நாம் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மீண்டும் தீவிரப்படுத்தும் நோக்குடன் இவ்வாரம விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத் திட்டங்களை முன்னெடுக்க உள்ளோம்.

இத் திட்டங்களை ஒருங்கிணைக்கும் நோக்குடன் மாவட்டமட்ட டெங்கு தடுப்பு செயலணிக்குழு கூட்டம் வட மாகாண ஆளுநர் , அரசாங்க அதிபர் தலைமையில் கடந்து 31-ம் திகதி இடம பெற்றது. இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளிற்கு அமைவாக மேற்படி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள உட்பட்ட யாழ் மாவட்டத்தில் சகல பிரிவுகளிலும் டெங்கு கட்டுப்பாட்டு விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

பிரதேச மட்டத்தில் பிரதேச டெங்கு தடுப்பு செயலணி குழுவினை கூட்டி பிரதேச செயலாளரினால் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படும். கிராம மட்டத்தில் கிராம மட்ட டெங்கு தடுப்பு செயலணி குழுக்கள் கிராம அலுவலகரின் தலைமையில் கிராம மட்ட பொது அமைப்புகளுடன் இணைந்து டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தல் வேண்டும்.

பல உள்ளூராட்சி மன்ற பிரதேசங்களில் திண்ம கழிவகற்றல் பொறிமுறை சீராக இல்லாமை டெங்கு நோயின் தீவிர பரம்பலுக்கு ஓர் காரணமாக உள்ளது. எனவே சகல உள்ளூராட்சி மன்றங்களும் தம்மிடம் உள்ள வளங்களுடன் மேலதிக வளங்களையும் ஒன்று திரட்டி உடனடியாக செயற்படும் வண்ணம் திண்ம கழிவகற்றும் நடவடிக்கைகளை சீர்செய்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோல கழிவு நீர் வாய்க்கால்களையும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் உடனடியாக செயற்படும் வண்ணம் சுத்திகரிப்பு செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# மிஸ்டர் பிரபாகரன் என்பதும் தேர்தல் பிரசாரமா என்ன?

சிவனை நோக்கி அசுரன் ஒருவன் கடுந்தவம் புரிந்தான். தவ வலிமை கண்ட சிவன் அவன் முன் தோன்றி அன்பனே! உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் என்றார்.

அசுரன், சுவாமி நான் எதைத் தொட்டாலும் அதுபற்றி எரியவேண்டும். இந்த வரத்தைத் தாருங்கள் என்றான். அப்படியே ஆகட்டும் என்றார் சிவன்.

சுவாமி எனக்கு ஒரு சந்தேகம் என்கிறான் அசுரன். என்ன? சந்தேகம் வினவுகிறார் சிவன். நீங்கள் தந்த வரம் சரியானதா? என்று நான் பரீட்சிக்க வேண்டும் என்றான் அசுரன்.

அதற்கென்ன பரீட்சிக்கலாமே என்றார் சிவன். அப்படியானால் வரம் தந்த உங்களையே முதலில் நான் தொடப்போகிறேன் என்று அசுரன் சிவனை நெருங்க, சிவன் ஓட்டம் பிடித்தார்.

அசுரன் சிவனைத் துரத்துகிறான். சிவன் ஓடுகிறார். நிலைமையின் ஆபத்தை உணர்ந்த கிருஷ்ணன் அழகிய பெண் வடிவம் தாங்கி அசுரன் முன் தோன்ற, சிவனைத் தொட்டெரிக்கும் சிந்தனையை கைவிட்டு தன் முன்தோன்றிய அழகிய பெண்ணைத் திருமணம் செய்ய ஆசைவயப்பட்டான் அசுரன்.

அசுரனின் விருப்பத்திற்கு சம்மதம் தெரிவித்த அந்த அழகிய பெண், அசுரனே! நான் உன்னைத் திருமணம் செய்வதற்குத் தயார். ஆனால் அதற்கு முன்னதாக நீ ஆற்றில் நீராடி அனுட்டானம் செய்ய வேண்டும் என்றாள்.

பெண்ணின் நிபந்தனையை நிறைவேற்ற ஆற்றில் நீராடிய அந்த அசுரன் அனுட்டானம் செய்யும் பொருட்டு திருநீற்றை எடுத்து தன் தலையில் தொட்டான். அவ்வளவுதான் அந்த அசுரன் எரிந்து நீறாகிப் போனான்.

நான் யாரைத் தொட்டாலும் எரிய வேண்டும் என்ற வரத்தில் தன்னையே தொட்டு எரித்துக்கொண்டான் அசுரன் என்பது புராணக்கதை.

இந்தக் கதையில் வரும் அசுரனுக்கும் சிங்களப் பேரினவாத அரசியல் கட்சிகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதைக் காணமுடியும்.

ஆம்! தமிழ் மக்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்து சிங்கள மக்களிடையே இனவாதத்தீயை வளர்த்து விட்ட சிங்கள அரசியல் கட்சிகள் இப்போது தமிழர்களுக்கு ஏதேனும் தரலாம் என்றுகூறி தமிழர்களின் வாக்கைப் பெறுவதற்குக் கூட முடியாத அளவில் உள்ளனர்.

தப்பித்தவறி தமிழர்களுக்கு சாதகமாக உரையாற்றி விட்டால் அது தமக்குக் கேடு என்று பயம் கொள்ளும் அளவில் சிங்களப் பேரினவாதக் கட்சிகளின் நிலைமை உள்ளது.

தமிழர்களுக்குச் சாதகமாக உரையாற்றக் கூடாது, அவர்களுக்குத் தீர்வு வழங்குவது பற்றி பிரஸ்தாபிக்கக் கூடாது. ஒட்டுமொத்தத்தில் தமிழர்கள் பற்றி நல்லதாக எதுவும் கதைக்கக் கூடாது என்பதாக ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

அவ்வாறு கதைத்தால் அதைத் தமக்குச் சாதகமாக்கி தென்பகுதியில் பிரசாரம் செய்யப்படும் என்பது சமகால நிலைமை.

சிங்கள மக்களிடையே இனவாதத்தை தூண்டிய அரசியல்வாதிகள் தொடர்ந்தும் அதைப் பேணுவதில் காட்டும் கரிசனையின் உச்சத்தை ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் நிதர்சனமாகக் காண முடிகிறது.

இதில் ஒன்றுதான் மிஸ்டர் பிரபாகரன் என்று சந்திரிகா கூறியதை தேர்தல் பிரசாரம் ஆக்கிய காதை. புலிகளின் தலைவர் பிரபாகரனை மிஸ்டர் என்று கூறியது தவறு எனப் பிரசாரம் செய்வோரின் மனநிலை எத்தன்மையது என்பதை இங்கு உணர முடிகிறதல்லவா?.

எத்தனையோ விடயங்கள் இருக்கும் போது மிஸ்டர் என்பதுதான் உங்கள் பிரசாரத்திற்கு கிடைத்ததா என்ன? மாவீரன் பிரபாகரன் என்று உலகம் உரைக்கும் போது அட! நீங்கள் மிஸ்டர் என்பதைப் பிரசாரமாக்கி சிங்கள மக்களை திசைதிருப்புவீர்களாயின் இந்த ஜென்மத்தில் இந்த நாடு உருப்படாது என்பதைத் தவிர வேறு எதைத்தான் சொல்ல முடியும்.

# அமைதியான தேர்தல் நடைபெற வேண்டும் - ஐரோ.ஒன்றியம்

இலங்கையில் அடுத்த வாரம் இடம் பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் அமைதியானதாகவும், நம்பகத்தன்மையும், வெளிப்படைத்தன்மையும் கொண்டதாக அமைய வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழுவின் தலைவரால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நம்பகத்தன்மை மிகுந்த தேர்தலுககு அமைதியான சூழல் அவசியம் என்ற நிலைப்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் நினைவுபடுத்த விரும்புகின்றது.

அச்சமற்ற சூழலில் தங்கள் ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கு இலங்கை மக்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

இலங்கையின் வலுவான ஜனநாயக பாரம்பரியங்களை பின்பற்றுவதில் சகல கட்சிகளுக்கும் பங்குள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் மற்றும் பொது நலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஸ் சர்மா ஆகியோரும் வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# ரணில் - மைத்திரியின் இரகசிய ஆவணம் பகுப்பாய்வுக்கு உட்படுத்த நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டதாக கூறப்படும் உடன்படிக்கையில் உள்ள கையொப்பங்களை அரச பகுப்பாய்வாளரின் ஆய்வுக்கு உட்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

தமக்கிடையே குறித்த உடன்படிக்கை செய்து கொள்ளப்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்ட இந்த உடன்படிக்கை ஆவணம் போலியானது என்று ரணில் விக்கிரமசிங்க பொலிஸ்மா அதிபரிடம் முறையிட்டிருந்தார்.

இதனையடுத்தே நேற்று முன்தினம கோட்டை நீதிமன்றம் இந்த உத்தரவை இரகசிய பொலிஸாருக்கு பிறப்பித்துள்ளது.

திஸ்ஸ அத்தநாயக்கவின் இந்தக் குற்றசாட்டு தொடர்பில் ஏற்கெனவே அவரிடமும் ரணில் மற்றும் மைத்திரியிடமும் பொலிஸார் வாக்குமூலங்களை பெற்றுள்ளனர்என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

**அமைதியின் சொற்கள்**

உயிரைக் கொடுத்தவர் சந்தோஷத்திற்காகக் கொடுத்தார் வேதனைக்காக அல்ல. அவ்வப்போது எம் வாழ்க்கையில் இம்மாதிரியான தருணங்கள் வருவதுண்டு. *(பிரேம் ராவத்)*

# அச்சத்தில் அவுஸ். அரசு

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களை நடுக்கடலில் தடுத்து நிறுத்தும் கூட்டுத்திட்டம் பாதிக்கப்படுமா என அச்சம் கொண்டுள்ள அவுஸ்திரேலியா, இலங்கையின் ஜனாதிபதி தேர்தலை உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

2009 இல் பெருமளவான தமிழர்கள் இறுதியுத்தத்தில் கொல்லப்பட்டதை தொடர்ந்து பெருமளவானவர்கள் அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச்செல்ல முயன்றதை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் நெருக்கமடைந்தன.

அபொட் மற்றும் தொழில்கட்சி அரசாங்கங்கள் இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்தியுள்ளன. கடந்த மார்ச் மாதம் ஜெனீவாவில் அவுஸ்திரேலியா இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டது. எனினும், இலங்கைக்கு கேள்விகளின்றி ஆதரவு வழங்குவதை அபொட் அரசாங்கம் நிறுத்தவேண்டுமென மனித உரிமை ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகலிடக்கோரிக்கையாளர்களின் படகுகளை தடுத்து நிறுத்துவதற்காக இலங்கையுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்த முனைந்துள்ள அவுஸதிரேலியா, உண்மையில் யுத்த குற்றவாளிகளுடன்நெருக்கமான உறவினை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் அடுத்த அரசாங்கத்துடனான அவுஸ்திரேலியாவின் உறவுகள் மனித உரிமை கரிசனைகளை மையப்படுத்தியதாக அமையவேண்டும் என பில் லைன்ச் என்ற மனித உரிமை பணியாளர் தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-11)

**இஸ்லாம் ஆன்மீக சிந்தனை**

**வெற்றிபெற வழி**

★ பிறருடைய பொருளை பொய் சாட்சியம் கூறி அபகரிப்பவ்னை சொர்க்கத்தின் வாடையைக் கூட நுகரமுடியாத படி அல்லாஹ் தடுத்து விடுவான்.

★ மனிதர்களைப் பார்த்து வெட்கப்படுவதைவிட, அல்லாஹ்வுக்கு வெட்கப்புடுவதே உயர்வானதாகும்.

★ நீங்கள் எவர்களுடன் சேர்ந்து வாழுகின்றீர்களோ, அவர்களுடனே நாளை மறுமையிலும் சேர்ந்து இருப்பீர்கள்.

★ உன் நாவை அடக்கி வைத்துக் கொள். உன் வீட்டை, விருந்தினர் வரும் தலமாக ஆக்கிக் கொள். நீ செய்த பாவங்களை எண்ணி எண்ணி கண்ணீரைச் சிந்து. உன் வாழ்வில் வெற்றி பெறுவாய்.


★ இவ்வுலக வாழ்வில் மதி மயங்காமல்வாழு. அல்லாஹ்உன்னை நேசிப்பான்.

★ எவன் பேசும்போது கோபம் கொண்டானோ, அவன் நம்மைச் சேர்ந்தவன் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த வீராங்கனையாவதே இலக்கு

## ஷரபோவா



பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ் போட்டி அவுஸ்திரேலியாவில் வருகிற 4 ஆம் திகதி தொடங்குகிறது. இந்த போட்டியில் கலந்து கொள்வதற்காக பிரிஸ்பேனுக்கு நேற்று சென்ற உலகின் 2 ஆம் நிலை வீராங்கனை ரஷ்யாவின் மரிய ஷரபோவாவிடம்.

'நம்பர் ஒன்' இடத்தை மீண்டும் பிடிப்பது தான் இந்த ஆண்டின் உங்களது இலக்கா? என்று கேட்ட போது, 'ஆட்டங்களில் கவனம் செலுத்தி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும், சிறந்த வீராங்கனையாக இருக்க வேண்டும் என்பதில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறேன்' என்று பதில் அளித்தார்.

மேலும் அவர் கூறுகையில், 'இந்த ஆண்டை சிறப்பாக தொடங்க வேண்டும் என்று விரும்புகிறேன். பிரிஸ்பேனுக்கு மீண்டும் வந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இது சிறந்த போட்டித் தொடர்களில் ஒன்று. புதிய சீசனில் நம்மை நன்றாக தயார்படுத்திக் கொள்வதறகு அருமையான போட்டி என்றார். (க)

# காதலியை கைபிடித்தார் கார்ப்பந்தய வீரர் ஜென்சன்




இங்கிலாந்தை சேர்ந்த பிரபல பார்முலா-1 கார்ப்பந்தய வீரர் ஜென்சன் பட்டன், காதலியான மொடல் அழகி ஜெசிகா மிச்சிபடாவுடன் திருமண பந்தத்தில் இணைந்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு முதல் ஜெசிகாவை காதலித்து வந்தார். கடந்த ஆண்டு இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது.

இந்த நிலையில் புத்தாண்டில் அவர்கள் இல்லற வாழ்க்கையில் இணைந்துள்ளனர். பட்டன்-ஜெசிகா திருமணம் ஹவாயத் தீவில் நடந்ததாக இங்கிலாந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

திருமண பந்தத்தில் இணைந்ததை ஜென்சன் பட்டன், 'டுவிட்டர்' மூலம் ரசிகர்களுக்கு தெரியப்படுத்தி தனது மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டுள்ளார்.

34 வயதான ஜென்சன் பட்டன் 2009 ஆம் ஆண்டு பார்முலா1 கார்ப் பந்தயத்தில் சம்பியன் பட்டத்தை வெனறவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# இந்திய வீரர்களுக்கு ஆஸி பிரதமர் தேநீர் விருந்து




இந்திய- அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கு அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அபாட் நேற்று முன்தினம் தேநீர் விருந்து அளித்துள்ளார்.

புத்தாண்டு தினமான இன்று தனது இல்லத்தில் வைத்து இரு அணி வீரர்களுக்கும் பிரதமர் டோனி அபாட் தேநீர் விருந்து அளித்துள்ளார்.

டி-சர்ட் மற்றும் காற்சட்டைகளுடன் இந்திய வீரர்கள் சாதாரண உடையில் பிரதமர் டோனி அபாட்டுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் இந்தப் புகைப்படத்தை தனது டுவிட்டரில் வெளியிட்டுள்ளது.

இந்த புகைப்படங்களில் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற டோனி இல்லை, இவர் கலந்து கொணடாரா? இல்லையா? என்பது பற்றி தெளிவான தகவல் ஏதும் இல்லை. (க)

# விராட் கோலியை வீழ்த்த ஆஸி புதிய வியூகம்




அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய வீரர் விராட் கோலி இதுவரை 3 சதங்களுடன் 499 ஓட்டங்கள் குவித்துள ளார். சிட்னியில் வருகிற 6ஆம்திகதி தொடங்கும் கடைசி டெஸ்டில் அவரது ஆதிக்கத்தை கட்டுப்படுத்த அவுஸ்திரேலியா தனிவியூகங்களை அமைத்து வருகிறது.

இது பற்றி அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஹாஸ்லேவுட் கூறுகையில், 'அடிலெய்டு மற்றும் மெலபோர்ன் டெஸ்டில் விராட் கோலி சிறப்பாக விளையாடினார். அவரது விக்கெட் எங்களுக்கு மிகவும் முக்கியமானது. தாக்குதலை தொடுத்து அவரது விக்கெட்டை சீக்கிரம் கைப்பற்றி விட்டோம் என்றால், மற்ற விக்கெட்டுகள் விரைவில் விழுந்து விடும்.


விராட் கோலியை சாய்க்க நாங்கள் ஏதாவது ஒரு புது. யுக்தியுடன் வருவோம். கோலி வேகமாக, சுதந்திரமாக ஓட்டங்கள் குவிக்க விரும்புவார். எனவே அவருக்கு தொடர்ந்து பந்து வீசி ஓட்டங்கள் எடுக்க விடாமல் தடுமாற வைக்க வேண்டும். நீண்ட நேரம் ஓட்டங்கள் எடுக்க விடாமல் கட்டுப்படுத்திவிட்டால், அதன் பிறகு நெருக்கடியில் தவறான ஷாட் அடித்து ஆட்டம் இழந்து விடுவார் என்று நம்புகிறோம் 'என்றார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# தேசிய கிரிக்கெட் அணியில் சென்ஜோன்ஸ் வீரர்கள் தெரிவு

இலங்கை, பங்களாதேஷ் நாடுகளின் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையில் இம்மாதம் நடைபெறவுள்ள இரண்டு நாள் கிரிக்கெட் தொடர்கள் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடர்களை முன்னிட்டு 31 வீரர்கள கொண்ட இலங்கையின் முன்னோடி கிரிக்கெட் குழாம் பெயரிடப்பட்டுள்ளது. கனிஷ்ட தேசிய தெரிவாளர்களினால் பெயரிடப்பட்டுள்ள இக் குழாமில் வட பகுதியைச் சேர்ந்த இரண்டு கிரிக்கெட் வீரர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த பரமானந்தம் துவாரகசீலன், செபமாலைப்பிள்ளை ப்ளெமின் ஆகிய இருவருமே வட பகுதியிலிருந்து 19 வயதுக்குட்பட்ட இலங்கை குழாமில் இடம்பிடித்துள்ளவர்களாவர்.



வட பகுதியிலிருந்து கிரிக்கெட் வீரர்களை தேசிய அணியில் விளையாட வைப்பதற்கான முயற்சிகளை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் எடுத்துவரும் நிலையில் அப்பகுதியிலிருந்து இரண்டு வீரர்களுக்கு முன்னோடி குழாமில் இடம்பெற வாய்ப்பு கிட்டியுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவன [illegible] அதிகாரி ஒருவர் [illegible]

துடுப்பாட்ட சகலதுறை வீரரான துவாரகசீலன், 17 வயதுக்குட்பட்ட இலங்கை முன்னோடி குழாமிலும் இடம்பெற்றதுடன் இவ் வருடம் இங்கிலாந்துக்கு கிரிக்கெட் விஜயம் செய்த முரளி நல்லிணக்க கூட்டு அணியின் உதவித் தலைவராக [illegible] ஆம் இலக்க [illegible] துடுப்பாட்ட வீரராவர். இவர் நடப்பு பருவ காலத்தில் நான்கு போட்டிகளில் மாத்திரமே விளையாடி ஒரு சதம்,ஒரு அரைச்சதம் பெற்றுள்ளார். பொதுத் தராதர பரீட்சை காரணமாக சில போட்டிகளில் அவர் விளையாடவில்லை.

இதேவேளை 19 வயதுக்குட்பட்ட இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவராக காலி றிச்மண்ட் கல்லூரியைச் சேர்ந்த சரித் அசலன்க நியமிக்கப்பட்டுள்ளார்.

**இக் குழாமில் இடம்பெறும் ஏனைய வீரர்கள் விபரம்:**

கவீன் பண்டார, அக்கில் இன்ஹாம் (இருவரும் டி.எஸ்.எஸ்.), அவிஷ்க பெர்னாண்டோ, குசல் லக்சித்த (இருவரும் மொறட்டுவை புனித செபஸ்தியார்), அசித்த பெர்னாண்டோ (கட்டுநேரிய புனித செபஸ்தியார்). சஹறான் ஆரச்சிகே, ஷம்மு ஆஷான் (இருவரும் ஆனந்த), லசித் லக்ஷான் (மாத்தறை புனித தோமஸ்), சேனுத்த விக்ரமசிங்க (கல்கிசை புனித தோமஸ்), ஷலிந்து உஷர்ன், விஷார்ட் ரந்திக்க (இருவரும் இஸிபத்தன), வனிந்து ஹசரங்க, கமிந்து மெண்டிஸ் (இருவரும் றிச்மண்ட்), தேனுக்க தாபரே (லும்பிணி), ரமேஷ் நிஷான்த (மாத்தறை புனித செர்வேஷஸ்), அரவிந்த அத்துகோறள (புனித சூசையப்பர்), ரவிந்து திலக்கரட்ன (என்.சி.சி.), தமித சில்வா, கேஷான் விஜேரட்ன (இருவரும் மலியதேவ), நிஷான் பீரிஸ் (புனித பேதுரு), துவிந்து திலக்கரட்ன, லஹிரு குமார, நுஷான் வீரசிங்க (மூவரும் திரித்துவம்), சாமிக்க கருணராட்ன, ஹிமேஷ் ராமநாயக்க (இருவரும் றோயல்), திலான் நிமேஷ் (பிறின்ஸ் ஒவ் வேல்ஸ்), பசிந்து இசிர (விமானப்படை). (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காங்கேசன்...

பித்து வைக்கப்பட்டது.

எனினும் இவ் வைபவத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜெயந்த, போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம ஆகியோர் இந்த ரயில் சேவையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து, காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரை பயணித்தனர்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரும் இவர்களுடன் ரயிலில் பயணம் செய்தனர்.

1990ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதியுடன் காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கு இறுதியாக ரயில் சேவை இடம் பெற்று பின்னர் நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தால் ரயில் சேவை அஸ்தமித்திருந்தது. மீண்டும் 24 வருடங்களின் பின்னர் ரயில் சேவை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை யாழ். நகருக்கு விஜயம் செய்ததை முன்னிட்டு யாழ். நகரில் இருந்து துரையப்பா விளையாட்டு மைதானத்துக்கு செல்லும் வீதிகள் மூடப்பட்டு பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, காங்கேசனதுறை ரயில் சேவை ஆரம்பிப்பு, ரில்கோ விருந்தினர் விடுதியில் தொழில்வல்லுநர்களுடன் சந்திப்பு மற்றும் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஆகியவற்றில் கலந்துகொள்வதாக இருந்த போதும், ரயில் சேவை ஆரம்பிக்கும் நிகழ்வில் அவர் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4)

## தெரியாத தேவ...

போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனது உரையினை ஆரம்பித்த மகிந்த, தன்னால் மேற்கொள்ளப் பட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் உரையாற்றிய போது என்னோடு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற மைத்திரிபால சிறிசேனவை உங்களுக்குத் தெரியுமா?

நான் 1970-ம் ஆண்டு பாராளு மன்ற உறுப்பினராக முதல்முறையாக இங்கு வந்திருந்தேன். இதுவரை

11 தடவைகள் இங்கு வந்துள்ளேன்.

என்னை தெரிந்த வகையில் மைத்திரிபால சிறிசேனவை உங்களுக்குத் தெரியாது. 30 வருட கால இருண்டயுகம் இப்போது இல்லை.

தெரியாத தேவதையை விட தெரிந்த பிசாசே நன்று எனக் கூறிக் கொள்கின்றேன். எம்முடைய முயற்சியினால் தற்போது எவ்வித பிரச்சினையுமில்லை. நீங்கள் எங்கும் போகலாம். எமது அபிவிருத்தியை எங்கும் பார்வையிடலாம்.

இதேவேகத்தில் போனால் அபிவிருத்தி உயர்வடைந்து செல்லும். உங்கள் மாகாணத்துக்கு பல மில்லியன் ரூபா செலவு செய்துள்ளோம். கல்வி, சுகாதாரம், விவசாயம் என அபிவிருத்தி செய்துள்ளோம்.

உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி யோசிக்க வேண்டும். இனவாதம் வேண்டாம் சகோதரத்துவமே வேண்டும்.

பின்னோக்கிச் செல்லாமல் முன்நோக்கிச் செல்வோம். அரசியல் வேறு. அபிவிருத்தி வேறு. நான் உங்களை என்றும் பாதுகாப்பேன். வெற்றி யின் சின்னம் வெற்றிலைச் சின்னம் என ஜனாதிபதி தெரிவித்தார். (எ-4)

## தீவிர பிரசாரங்...

பினருமாகிய எம்.ரி.ஹஸன் அலி தலைமையிலான குழுவினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

இதேவேளை, நேற்றும் இன்றும் நடைபெறும் முஸ்லிம் காங்கிரஸ் மைத்திரி ஆதரவுப் பிரசாரப் பொதுக்கூட்டங்களில் கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் உட்பட கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

நிந்தவூர், அக்கரைப்பற்று, ஒலுவில், பாலமுனை, சம்மாந்துறை, சாய்ந்தமருது, இறக்காமம், அட்டாளைச்சேனை, மருதமுனை, சென்ரல்காம்ப் ஆகிய இடங்களில் பிரசார பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன. (எ-11)

## கடமையை...

க்கு ஆதரவான அறிவிப்பு என்றவுடன் இந்த அரசுக்கு கோபம், ஆற்றாமை, ஆத்திரம் வந்துவிட்டது. ஒருவேளை கூட்டமைப்பின் ஆதரவு அரசுக்கு கிடைத்து இருந்தால், இந்த கோபம் மறைந்து கூட்டமைப்பின் மீது காதல் பிறந்திருக்கும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற விஷேட செய்தியாளர் மாநாட்டில் ஐதேக தலைமைக்குழு தவிசாளர் கரு ஜயசூரிய, சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் ஆகியோருடன் கலந்து கொண்டு உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

இந்த தேர்தல், சிங்கள நாட்டு தேர்தல், இதில் பங்கு பற்றி வாக்களிக்கும் அவசியம் எமக்கு கிடையாது என்று ஒருகாலத்தில் செயற்பட்டு வந்த வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களும், அவர்களது தலைமைகளும், இன்று இந்த தேர்தலில் பங்குபற்றுவதன் மூலம் தாம் இந்த நாட்டு குடி மக்கள் என்ற அடிப்படையை ஏற்றுக்கொண்டு விட்டார்கள். இது ஒரு வரவேற்ககூடிய மாற்றம். இந்த நாட்டை நேசிக்கும் எவரும் இந்த மாற்றத்தை வரவேற்க வேண்டும்.

ஆனால், இந்த மகிந்த அரசு இதை புரிந்துகொள்ள மறுக்கின்றது. மகிந்த தனது அமைச்சரவை சகாக்கள் மூலம், கூட்டமைப்பின் அறிவிப்பை திரித்து கூறி துர்பிரச்சாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார். கூட்டமைப்பு யாருக்கு ஆதரவு தருகிறது என்பதைவிட, வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் இலங்கை ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தலில் பங்கு பற்றுகிறார்கள் என்பது முக்கியமானதாகும். ஒரே நாடு என்று தமிழர் சொன்னால், இல்லை நீங்கள் வேறு நாட்டவர் என்று மகிந்த அரசு சொல்கிறது. தேர்தலில் பங்கு பற்றி வாக்களிக்கும் தமிழ் மக்களுக்கு தாங்கள் விரும்பிய கட்சிக்கு, சின்னத்துக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு.

இதை எவரும் தட்டி பறிக்க முடியாது. அதேபோல் அந்த மக்களின் ஆணையை பெற்ற ஒரு கட்சிக்கு தமது மக்கள் தொடர்பில் வழிகாட்டல் செய்ய பூரண உரிமை உண்டு. இதையும் எவரும் தட்டி பறிக்க முடியாது என அவர் கூறினார். (எ-11)

## பௌத்தர்க...

குமாரதுங்க சிங்கள பௌத்தர்களின் உன்னத குணத்தின் அடையாளத்தை வெளிப்படுத்தியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறை தெவிநுவர நீல்வெல்லே பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ஆங்கிலத்தில் உரையாற்றும் போது மிஸ்டர் பிரபாகரன் என கூறியிருந்தார்.

இதனை மாபெரும் தேசத்துரோக செயலாக காட்ட அரச ஊடகங்கள் முயற்சித்து வருகின்றன. இது குறித்து கருத்து வெளியிட்ட மங்கள சமரவீர மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை ஒன்றுபடுத்திய துட்டகைமுனு மன்னர், தன்னுடன் போரிட்டு இறந்த தமிழ் மன்னனான எல்லாளனுக்கு கல்லறை ஒன்றை கட்டியதுடன் அதன் அருகில் செல்லும் அனைவரும் அதற்கு மரியாதை செலுத்த வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார்.

அவரது இந்த கட்டளை சிங்கள பௌத்தர்களின் குணத்தை எடுத்துக்காட்டுகிறது.

இந்த குணத்தை இன்றைய காலக்கட்டத்தில் வெளிப்படுத்தி தனது கண்ணை பறித்த தனது உயிரை பறிக்க முயற்சித்த பிரபாகரனை ஐயா என்று ஆங்கிலத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## இரணைமடு தண்...

யில்,

சில நாட்களுக்கு முன்னதாக யாழ்ப்பாணத்திற்கு யாழ்தேவி மூலம் வந்தேன். இன்று (நேற்று) காங்கேசன்துறைக்கு யாழ்தேவி பயணமாகியுள்ளது.

ஆனால் என்னுடைய வெலியத்தப் பகுதிக்கு புகையிரதப் பாதை இன்னமும்கூடப் போடப்படவில்லை. ஆனால் உங்களுக்கு போட்டுக் கொடுத்துள்ளேன்.

சுதந்திரம் கிடைத்த பின்னர் வீதிகள் போட்டோம். கல்வி, சுகாதாரம் உட்பட அனைத்துத் துறைகளினையும் அபிவிருத்தி செய்தோம்.

மைத்திரிபால சிறிசேன இலவசக் கல்வியினை ஒழித்து தேசியப் பல்கலைக்கழகங்களிலும் தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் பணம் செலுத்தித்தான் சேர வேண்டும் என தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இலவசக் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றில் யார் கைவைக்கவும் நாம் இடம் அளிக்கமாட்டோம். தென்பகுதிக்கு, வடபகுதிக்கு என வெவ்வேறு கொள்கைகளினை நான் சொல்லவில்லை.

இங்கு கூறுவதனை அங்கு கூறும் துணிவு எம்மிடம் உண்டு. தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தமிழர்களுக்கு என சிலவற்றினைக் கூறியுள்ளோம்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட உங்களிடம் ஒன்றினைக் கூறி என்னிடம் வேறு ஒன்றைச் சொல்வதில்லை. அங்கஜனும் உங்கள் பிரச்சினைகளினை அடிக்கடி என்னிடம் கதைத்துக் கொண்டுள்ளார்.

மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட 50 வீத பணம் இதுவரை செலவிடப்படவில்லை. வட மாகாண சபை தேர்தல் நடாத்துவதற்கு பலர் எனக்கு எதிர்ப்பு தெரிவித்த போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெறும் எனத் தெரிந்தும்தான் தேர்தலினை நடத்தினேன்.

ஆனால் வட மாகாண சபை திறமையான முறையில் செயற்படவில்லை அவர்கள் செலவிடும பணத்தினை வைத்து அபிவிருத்தியைத் கணக்கிட முடியும் என்றார் அவர். (எ-4)

## நாடாளுமன்...

நாடாளுமன்றத்தை கலைத்துவிட கட்சியின் உயர் பீடத்தினர் ஆலோசித்து வருகின்றனர் என்று தெரியவருகிறது. (எ-11)

## விமல் கட்சி...

தாக அறிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு பெரும ஆதரவு அளித்து வரும் விமல் வீரவன்சவின் கட்சியிலிருந்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் எதிரணிக்கு மாறியுள்ளார். கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போதே அவர் தனது முடிவை அறிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்த அச்சல சுரங்க ஜாகொட, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் சுற்றுலாத்துறை பிரதி அமைச்சராகவும் முன்னர் பதவி வகித்திருந்தார்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், இதுவரை 27 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிரணியின் பக்கம் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (எ-11)

## பன்மடங்கு மக்கள் உபசரிப்பில் தடங்கல்

எதிர்பார்ப்பைவிட பன்மடங்கு மக்கள் கலந்து கொண்டதால் உபசரிப்பில் தடங்கல் ஏற்பட்டதாகவும் அதற்கு மனம் வருந்துவதாகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன் கவலை தெரிவித்துள்ளார்.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அழைப்பின் பேரில் எதிர்பாராத வகையில் கலந்து கொண்டிருந்த பெருந்திரளான எமது மக்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேநேரம், பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டமையால் நாம் ஏற்கெனவே திட்டமிட்டிருந்ததன் பிரகாரம் அனைத்து மக்களுக்கும் உரியமுறையில் உபசரிக்க இயலாமற் போனமை தொடர்பில் பெரிதும் மனம் வருந்துகின்றோம் என அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (எ)

## கூட்டம் மீது...

மீது கல்லெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து இரண்டு தரப்பினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன கூட்டத்தில் பங்கேற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## கூட்டமைப்பி...

திடீரென நீக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 11 பேரில் 8 பேர் மட்டுமே மாகாண சபை உறுப்பினர்களுக்குரிய பொலிஸ் பாதுகாப்பை ஏற்கெனவே பெற்றிருந்தார்கள்.

அவர்களில் அம்பாறை மாவட்ட உறுப்பினர்கள் இருவரின் பொலிஸ் பாதுகாப்பு மட்டுமே நேற்று நீக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பது என தமது கட்சி எடுத்த தீர்மானத்திற்கு அமைய தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டுக் கொண்ருக்கும் தங்களின் பொலிஸ் பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளதாக முருகேசு இராஜேஸ்வரன் கூறினார்.

ஏற்கெனவே அச்சுறுத்தல்களை எதிர் நோக்கியுள்ள தங்களது பாதுகாப்பு தற்போது நீக்கப்பட்டுள்ள நிலையில் உயிராபத்து ஏதாவது தங்களுக்கு நேர்ந்தால் அரசுதான் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அவர் கூறினார். (எ-11)

## இன்றைய போட்டி

இலங்கை – நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று ஹமில்டன் ஆடுகளத்தில் இலங்கை நேரப்படி காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L பொருளியல்

வணிக வங்கிகள்
இரண்டாம் பதிப்பு
மேலதிக விடயங்களுடன்
ரூபா 90
வே.கருணாகரன்

பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

(9037)

P.மகேந்திரராஜா உசன், மிருசுவில்
மேற்படி விலாசத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில் உள்ள 6 3/4 பரப்பு காணியுடன் கூடிய மரக்காலை விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-0772557761
(சி-9714)

## யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் ஒன்றுகூடலும் ஊடகவியலாளர் சிவராம் (தராகி) ஞாபகார்த்த நினைவுப் பேருரையும்

இடம்:-கிறீன் கிறாஸ் ஹோட்டல்
நேரம்:-இன்று பி.ப.2.00
தலைமை:-சிவநாதன் நவீந்திரா (ஊடகவியலாளர்)
★மங்கள விளக்கேற்றல்
★சிவராமின் திரு உருவப் படத்திற்கு அஞ்சலி செய்தல்.
★சிவராம் கண்ட தமிழ்த் தேசியம்-நினைவுப் பேருரை. (மூத்த ஊடகவியலாளர்)
★நன்றியுரை
இந் நிகழ்வில் ஊடகவியலாளர்களைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
-ஏற்பாடு
யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கம்.
(9035)

## KMI கல்வி நிலையம்

ஊரெழு
(பலாலி வீதி, அம்மன் கோயில் அருகாமை)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
05.01.2015 திங்கட்கிழமை
பி.ப. 3.30 மணிக்கு
தரம் 01 முதல் 11 வரையான வகுப்புகள்

★தமிழ் -I.ராஜ்குமார், T.துஷாரா
★சமயம்-M.யாதவன்
★கணிதம்-S.ரஜீவன், B.பாலவரதன்
★விஞ்ஞானம்-N.நிரூஷன், S.சஞ்சீவன், T.செந்தூரன்
★வரலாறு-P.பத்மதாஸன், S.விக்கி
★ஆங்கிலம்-S.டயானா, S.அஜந்தன், T.தர்ஷாந்
★வர்த்தகம்-T.கலீஸன் ★குடியுரிமை-M.கயூதரன்
★புவியியல்-M.கஜன் ★சிங்களம்-I.உலகசேகர்
★நடனம்-S.சரன்ஜா

விசேட புலமைப்பரிசில் ஆசிரியர்:-
திரு.எஸ்.மிலன்

பிள்ளைகளின் வளமான எதிர்காலத்திற்கு எம்முடன் இணைந்து கொள்ளவும்
மேலதிக விபரங்களுக்கு:-0770774484, 0776610744
(சி-9709)

## STUDY IN UK, LATVIA, LITHUANIA (Europe)

UK கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கு...
- G.C.E O/L தகைமை போதுமானது.
- 18-22 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் விரும்பத்தக்கது.
- City&Guilds B1 அல்லது IELTS 4.5 ( OVER ALL ) ஆங்கில பரீட்சை பெறுபேறு கட்டாயமானது.

UK பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்கு...
- G.C.E O/L , G.C.E A/L தகைமை கட்டாயமானது.
- 18-25 வயதை உடையவர்கள் எவரும் அனுமதியினை பெற்றுக்கொள்ளமுடியும்.
- City&Guilds B2 அல்லது IELTS 5.5 ( OVER ALL ) ஆங்கில பரீட்சை பெறுபேறு அவசியமானது.



08.09.2014 மற்றும் 22.10.2014 அன்று எமது நிறுவனத்தின் விசா சட்டஆலோசனை மூலம் LATVIA நாட்டிற்கு விசாவை பெற்ற மாணவர்களில் சிலர்....

குறிப்பு: மேற்படி LATVIA நாடானது செங்கன் நாடுகளில் ஒன்றாகும் என்பதுடன் கல்லூரி விடுமுறைக்காலங்களில் GERMAN, SWISS, FRANCE, ITALY, HOLAND, SPAIN, NORWAY ....போன்ற நாடுகளிற்கு சென்றுவரமுடியும்.

மாணவர்களே! பெற்றோர்களே!! இந்த வளமான சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள்...
City & Guilds Approved Centre-UK

**WORLD EDUCATION CONSULTANCY**
(விசா ஆலோசனை மையம்)
No:377, Sangaththanai, Chavakachcheri.
0217200989,0779265447
( சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகே)
2015 Happy Newyear Happy Newyear Happy Newyear Happy Newyear
(சி-9711)

## மாபெரும் புத்தக கண்காட்சியும் மலிவு விற்பனையும்

பாலர் முதல் பல்கலைக்கழகம் வரை உள்ள மாணவர்களின் கல்வித் தேவையை பூர்த்தி செய்ய.

2015 ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டங்கள் உள்ளடங்கலாக்கப்பட்ட பாடப்புத்தகங்கள், பயிற்சிப்புத்தகங்கள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள், காகிதாதிகள் பொருட்களையும் அனைத்து இந்திய வெளியீடுகளையும் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து புத்தகங்களுக்கும் 20%, பாடசாலை உபகரணங்களுக்கு 10%, அப்பியாசக் கொப்பிகளுக்கு 30 - 40% விசேட விலைக் கழிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தரம்-06, தரம்-10க்கு உரிய பாடத்திட்டம் (2015) உரியவை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
காலம்:-29.12.2014 முதல் 15.02.2015 வரை
நேரம்:- காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை

**யாழ்.புத்தகசாலை.**
305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமையில்)
(8840)
தொடர்புகளுக்கு:-0778349507, 0214545552

## NEC


பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
A/L Day Class
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்: 05-01-2015 திங்கள் 7.00 AM
(சி-9708)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## சாதாரண தரத்தின் பின்னர்

4 மாதங்கள்
நாளைய உலகை வெற்றிபெற சர்வதேச அங்கீகாரம் பெற்ற டிப்ளோமாவை கற்றிடுங்கள்

சாதாரண தர மாணவர்களுக்கு மத்தியில் மிகவும் பிரபல்யமான இரட்டை டிப்ளோமா




Diploma in Information Technology
Diploma in English

டிசம்பர் 31 திகதிக்கு முன்னர் பதிவுசெய்து
Rs.15,875 சேமிக்கவும்
இரட்டை டிப்ளோமாவிற்கான சாதாரண கட்டணம் Rs. 44,000
இரட்டை டிப்ளோமாவிற்கான கழிவுடனான கட்டணம் Rs. 28,125

அனைத்து டிப்ளோமாவிற்கும் 2 சான்றிதழ்கள்
ESOFT மற்றும் Edexcel UK
assured by PEARSON
அனைத்து டிப்ளோமா பாடநெறிகள் பிரித்தானிய PEARSON EDEXCEL நிறுவனத்தினால் தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது.

கீழுள்ள டிப்ளோமா பாடநெறிகளும் சாதாரண தரத்தின் பின்னர் கற்கலாம்




டிசம்பர் 31 திகதிக்கு முன்னர் பதிவுசெய்து
முதல் டிப்ளோமாவிற்கு 25%*
இரண்டாவது டிப்ளோமாவிற்கு 50%*
கழிவினை பெற்றிடுங்கள்

ESOFT - இலங்கையின் பாரிய உயர் கல்வி வலையமைப்பு

புதிய பிரிவுகள் ▶ 04.01.2015 | 05.01.2015
பதிவுகளுக்கு உங்கள் பெயர் விபரங்களை கீழ் தரப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்
SMS your Details ▷ 077 309 9 308

ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142
(சி-9710)
இலங்கையின் மிகப்பாரிய உயர்கல்வி வலையமைப்பு

## IIS CITY CAMPUS

அனைவருக்கும் எமது மனமார்ந்த புதுவருட நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்- 2015
20ம் ஆண்டு வெற்றிக்களிப்பு
மாணவர்களே !!
சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.....
HND கற்கை நெறிகளுக்கான மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்



இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா பல்கலைக்கழகங்களின் பட்டத்தினைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு
உங்கள் எதிர்காலத்திற்கான அடுத்த இலக்கு

மேலதிக விபரங்களுக்கு 021 4 900 900
புதிய பிரிவுகள் ஆரம்பம் 23.01.2015
(சி-9705)

PEARSON edexcel
BTEC HND
Software Engineering
Business Management
Civil Engineering

BSc IT-(Bachelor of Science in IT)
BBA -(Bachelor of Busines Administration)
BSCE-(Bachelor of Science in Civil Engineering)

கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச் சாம்ராஜ்யம்
**IIS CITY CAMPUS**
200,சிவன் பண்ணை வீதி ,யாழ்ப்பாணம்
T.P : 021 222 8060 , WEB : iis.edu.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.